

# பாக்கியம் பெறும் குடும்பம்

Dr. D.G.S. தினகரன்

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

Dr. பால் தினகரன்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# பாக்கியம் பெறும்
# குடும்பம்

சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்
சகோதரி ஸ்டெல்லா தினகரன்
Dr. பால் தினகரன்

வெளியீட்டாளர்:
*Word of Christ*
*Ragem Plaza*
*Tallakulam*
*Madurai - 625 002.*

அன்புடனும் ஜெபத்துடனும்
சகோதரர்
D. G. S. தினகரன்
Dr. பால்தினகரன்

All Rights reserved
under international copyright law. Contents and /or cover
may not be reproduced in whole or in part in any form
without the express written consent of the publisher.

Printed by : Scantrans India Private Limited.

Published in India by
**WORD OF CHRIST MINISTRIES**
16, Greenways Road,
Chennai - 600 028. India.

# முகவுரை



"இயேசு அழைக்கிறார்" என்ற ஊழியத்தின் ஸ்தாபகரும் தலைவருமான டாக்டர் **D.G.S.** தினகரன் அவர்களுக்கும், அவர்களுடைய குடும்ப அங்கத்தினருக்கும், எனது அன்பின் வாழ்த்துக்களை, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த தேவ தாசர்களை நான் ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு மேல் அறிந்திருக்கின்றேன். பல தருணங்களில் நான் அவர்களோடு நெருங்கி பழகியிருக்கிறேன். அவர்களுடைய அன்பின் இருதயமும், அருள்நிறைந்த வார்த்தைகளும், என்னை அதிகமாய் கவர்ந்தது. மிகுந்த நெருக்கமான கட்டங்களில் நாங்கள் தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதுண்டு. என் மனைவியோடும் என்னோடும் அவர்கள் காட்டின அன்பு எங்கள் மனதில் எப்பொழுதும் ஆழ்ந்த இடத்தில் குடிகொண்டிருக்கிறது. இந்த அன்பான குடும்பத்தை நாங்கள் மிகவும் நேசிக்கிறோம்.

தேவ கிருபையால் அவர்கள் நடத்தி வரும் ஊழியங்களை நான் மெச்சிக்கொள்கிறேன். நம் நாட்டின் எழுப்புதலுக்கும், பிசாசின் கட்டுகளிலிருந்து அநேகர் விடுதலை பெறவும், வியாதியிலிருந்து குணமடையவும் ஆறுதலடையவும், தேவனால் பயன்படுத்தப்படுகிற தேவதாசர்களாக இவர்கள் விளங்கி வருகிறார்கள். இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்கள் மூலம் விடுதலை பெற்று தேவனை மகிமைப்படுத்துகின்றனர்.

"பாக்கியம் பெறும் குடும்பம்" என்ற குடும்ப ஆசீர்வாத புத்தகத்தை அவர்கள் வெளியிடுவதைக் குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டிருக்கின்ற இப்புத்தகம், மெய்யாகவே வாசிக்கும் நபர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. சகோதரர் தினகரன், சகோதரி ஸ்டெல்லா தினகரன், சகோதரன் பால் தினகரன் இவர்கள் எழுதிய இப்புத்தகம், தேவ ஜனங்களின் நடைமுறை வாழ்க்கைக்கு அனுகூலமாய் இருக்கும். இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் அத்தியாயங்களை நான் பார்க்கும்பொழுது மிகவும் மகிழ்ந்து களிகூருகிறேன். இயேசு உருவாக்கும் குடும்பத்தில் இரட்சிப்பின் இன்பம், இயேசுவோடு நெருங்கின வாழ்க்கை, தேவ ஆசீர்வாதத்தை பெறச்செய்து, கடைசி வரை அவ்வில்லத்தை நிலைநிற்கச் செய்யும். இந்த இணையற்ற மகிழ்ச்சி இவ்வுலகத்தில் மட்டுமல்ல, நித்திய இன்பத்துக்கும் அவர்களை வழிநடத்தும் என்பது உறுதி. ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டி மோட்சமாக இவ்வுலகில் இயங்கவேண்டும் என்பதே இப்புத்தகத்தை உருவாக்கியதின் நோக்கமாகும். எனவே, கர்த்தருடைய பிள்ளைகளும், மற்றோரும் இப்புத்தகத்தை வாசித்து பயனடையவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

"பாக்கியம் பெறும் குடும்பம்" என்ற இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு சகோதரி ஸ்டெல்லா தினகரன் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக நான் கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கத்தோடு எழுதப்பட்ட இப்புத்தகம் நிச்சயமாகவே வாசிக்கும் நபர்களுக்கு அதிக ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

கர்த்தர்தாமே இப்புத்தகத்தை வாசிக்கிற உங்களை ஆசீர்வதிப்பாராக!

---

- பாஸ்டர் **M.K.** சாம் சுந்தரம்,

தலைமை போதகர், அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, சென்னை.

## முன்னுரை

இன்றைய நாட்களில் இல்லற வாழ்வில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளினிமித்தம் ஆண்டவர் கொடுத்த அருமையான இல்வாழ்விலிருந்து கணவன்-மனைவி பிரிந்து, வாழ்வில் வேதனை அனுபவித்து வருகிறார்கள். ஆனால், ஆண்டவர் தாம் சிருஷ்டித்த ஒவ்வொருவரும் வாழ்ந்திருக்கவேண்டும், எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்றே விரும்புகிறார். ஆகவே, அவர் நம் ஒவ்வொருவருக்கும் இன்பம் தரும் நல்வாழ்வை அருளிச்செய்ய வல்லமையுள்ளவருமாயிருக்கிறார்.

இந்த புத்தகத்தில் அத்தகைய தெய்வீக சந்தோஷம், சமாதானம் நிறைந்த வாழ்வை வாழ்ந்து, ஆண்டவர் தரும் தெய்வீக ஆசீர்வாதத்தை, ஆனந்தத்தை எவ்வாறு பெற்று மகிழலாம் என்பதை சகோதரர் தினகரன், சகோதரி ஸ்டெல்லா தினகரன், சகோதரன் பால் தினகரன் ஆகியோர் தேவ ஆவியானவரின் துணையோடு தெளிவாக விளக்கி எழுதியிருக்கிறார்கள்.

ஆண்டவருடைய ஆசீர்வாதமும், கிருபையும், இந்த புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரின் குடும்ப வாழ்வையும் பாக்கியமானதாக மாற்றி, இணையற்ற இன்பத்தால் நிரப்பி மகிழச் செய்வதாக!

- ஆசிரியர்

# உள்ளடக்கம்


1. இயேசு உருவாக்கும் குடும்பம் .................................... 7

2. இறைவன் தங்கும் குடும்பம் .................................... 16

3. இறைவன் உலாவும் குடும்பம் .................................... 24

4. இயேசுவோடு இணைந்த குடும்பம் .................................... 32

5. எங்கள் குடும்ப வாழ்வு .................................... 39

6. இரட்சிப்பின் இன்பம் பெற்ற குடும்பம் .................................... 51

7. இறை ஆசி பெற்ற குடும்பம் .................................... 61

8. நிலைத்துநிற்கும் குடும்பம் (பாகம் 1) .................................... 77

9. நிலைத்துநிற்கும் குடும்பம் (பாகம் 2) .................................... 85

10. நீதிமானின் குடும்பம் .................................... 92

11. குடும்பத்தின் பிள்ளைகள் .................................... 99

12. இன்பம் நிறைந்த குடும்பம் .................................... 106

13. பரலோக குடும்பம் .................................... 117

# 1. இயேசு உருவாக்கும் குடும்பம்!

- **Dr.** பால் தினகரன்

*"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதை கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங். 127:1)*

இந்த உலகில் நாம் ஒவ்வொருவரும் (வாலிபனும், வாலிபப் பெண்ணும்) தங்கள் வீட்டை (குடும்பத்தை) கட்ட முயற்சிக்கிறோம், ஆனால், நம்மால் வீட்டைக் கட்டவே முடியாது, கர்த்தர் தான் நம் வீட்டைக் கட்ட வேண்டும்.

### ஞானத்தால் வீட்டை கட்டுகிறார்

*"வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும்" (நீதி. 24:3)* கர்த்தரே அதற்கு தலைக்கல்லாயிருக்கிறார் *(மத். 21:42)!* அவர் முதல் குடும்பத்தை தம்முடைய ஞானத்தினால் படைத்தார்.

**ஒரு மருத்துவ கல்லூரி மாணவி, ஒரு நாள் தன் தாயார் கொடுத்து அனுப்பின மதிய உணவை மாலையில் கல்லூரியிலிருந்து வரும்பொழுது அப்படியே திரும்ப கொண்டு வந்துவிட்டாள். அம்மா மிகுந்த கோபத்துடன், "அதிகாலையில் எழும்பி, எவ்வளவோ கஷ்டப்பட்டு உனக்கு உணவு தயாரித்து கொடுத்து அனுப்புகிறேன். நீ அதை ஏன் திரும்ப கொண்டு வந்துவிட்டாய்?" என்றார்கள். அந்த மகள், "அம்மா, இன்று கல்லூரியிலே எனக்கு செய்முறை பயிற்சி வகுப்பு நடந்தபோது, சோதனை செய்யும்படியாய், என்னிடம் ஒரு மனிதனின் கரத்தை கொடுத்தார்கள். அந்த கரத்தை சோதனை செய்துகொண்டிருந்தபோது, கர்த்தரின் ஒப்பற்ற ஞானத்தைக் கண்டு வியந்து, உணவருந்துவதையே நான் மறந்துபோனேன்" என்றாள்!**

ஆம், தேவாதி தேவனுடைய ஞானம் மனுஷ சிருஷ்டிப்பில் விளங்கியது *(சங். 104:24)!* ஒவ்வொரு மனிதனும் மனுஷ ஞானத்தினால் அல்ல, மனுஷனுடைய சித்தத்தினாலல்ல, தேவ ஞானத்தினாலேயே சிருஷ்டிக்கப்படுகிறான்.

### முதல் மனுஷனை உருவாக்கிய ஞானம்:

***"தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி. 2:7).***

ஆதி மனிதனின் பெயர் "ஆதாம்". "ஆதாம்" என்பதற்கு "செந்நிறமண்" என்பது பொருள். அதற்கேற்றாற்போல், தேவனாகிய கர்த்தர் பூமியிலிருந்து மண்ணை எடுத்து மனுஷனை உருவாக்கினார். மண்ணினாலே மனுஷனின் சரீரத்திற்கு தேவையான நரம்புகளை, எலும்புகளை, தசைகளை, உறுப்புக்களை, தோல்களை உருவாக்கி, ஒவ்வொன்றும் எப்படி செயல்படவேண்டும் என்று தம்முடைய ஞானத்தினால் சிருஷ்டித்தது விந்தையிலும் விந்தையன்றோ!

மனுஷனை மண்ணினால் உருவாக்கிய தேவன், ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவன் உயிர் பெற்றெழும்படி செய்தார். ஆம், மனுஷனுக்குள் ஆண்டவருடைய ஜீவ சுவாசம் இருக்கிறது. அதனால் தான் ஆண்டவர்மேல் கண்களை வைத்து, அவரோடு இணைந்திருக்கும் ஒரு மனைவி தன் கணவரை பார்க்கும் பொழுது, அவருக்குள் கனத்திற்குரிய தேவனுடைய சுவாசத்தைக் கொண்டிருக்கிறார் என உணருகிறாள், அவருக்குள் இருக்கும் மனுஷீக உறுப்புகளையும், உணர்வுகளையும் மாத்திரம் பார்க்காமல். ஜீவ ஆத்துமாவாகவே காண்கிறாள்; அதாவது, அவருக்குள் தேவனுடைய சுவாசம் (The breath of God in him) இருக்கிறது என்பதையும் உணருகிறாள். அந்த எண்ணமே அவருக்குள் இருக்கும் தேவனுடைய சுவாசத்தைக் கண்டு அவரை ஜீவ ஆத்துமாவாக கனம்பண்ணும்படி செய்கிறது. அந்த கண்ணோட்டத்தினால்தான், "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" *(கொலோ. 3:18)* என்று கூறப்பட்டிருக்கிறதின்படி கணவனை கனம்பண்ணி நடக்க உணர்வு உண்டாகிறது.

இந்த கிருபையை ஆண்டவர் உங்களுக்குத் தரும்படி, உங்கள் கண்கள் இவ்வாறாக திறக்கும்படி, இன்றே ஆண்டவரை வேண்டிக் கொள்ளுங்கள்.

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்..." *(அப். 17:25)*, மனுஷன் உலகத்தில் தொடர்ந்து வாழும்படியாக, சகலவித ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் சம்பூரணமாய் கொடுக்கிறார் *(1 தீமோ. 6:17)*.

**ஒரு சமயம் ஒரு பெரிய குடும்பத்தினரின் வீட்டிற்கு நாங்கள் சென்றிருந்தபோது, அந்த குடும்பத்தலைவர், "பிரதர், எங்கள் குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள்! அதில் எட்டு பேர் ஆண்**

பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை! இந்த பிள்ளைகள் சகலவிதத்திலும் சம்பூரணமாய் வாழ்ந்திருக்கும்படியாக, எட்டு ஆண் பிள்ளைகளுக்கும் ஆளுக்கு ஒரு எஸ்டேட்டை கொடுத்து விட்டேன், இனி எனக்கு கவலையே இல்லை" என்றார்.

ஆண்டவரும் அப்படித்தான்! ஆதி மனுஷன் ஆதாமை உருவாக்கி, ஜீவனைக் கொடுத்த தேவனாகிய கர்த்தர், அவனுக்கு (ஒரு எஸ்டேட்டை) ஏதேன் தோட்டத்தைக் கொடுத்தார் (ஆதி. 2:8). சகலவித ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் அனுபவிக்கத் தக்கதாக தேவையான எல்லாவற்றையும் அருளிச்செய்தார். "(என் பிள்ளைகளே இந்த உலகத்தில்) என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருங்கள்... இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத். 6:25,31,32). தம் சொந்த குமாரனையே சிலுவையில் உங்களுக்காக ஒப்புக் கொடுத்த தேவனாகிய கர்த்தர், நீங்கள் இவ்வுலகத்திலே சகலவித ஆசீர்வாதங்களையும் பெற்று அனுபவிக்கவேண்டும் என்றே விரும்புகிறார் (ரோமர் 8:32).

## முதல் மனுஷியை உருவாக்கிய ஞானம்:

"ஏவாள்" என்பதற்கு "ஜீவன்" என்பது பொருள்! தேவனாகிய கர்த்தர் ஆதி மனுஷன் ஆதாமை உருவாக்கிய பின்பு, அவன் தனிமையாயிருப்பதைக் கண்டார். ஆகவேதான், அவர், "... மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" (ஆதி. 2:18) என்று சொல்லி, ஆதாமுக்கு ஏற்ற துணையாக, ஏவாளை உருவாக்கினார்.

### ஏற்ற துணை

ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய சரீரத்தை மட்டுமே நேசிக்கக்கூடிய இயல்புடையவனாக உருவாக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு சரீரத்தில் வலி, பயம் வந்தாலும் அவனால் மட்டுமே உணர முடியும், இன்பம் வந்தாலும் அவனால் மட்டுமே அதை உணர முடியும். இந்த நிலையில் மனிதனுக்கு ஒரு ஏற்ற துணையை எப்படி உருவாக்குவது என்று ஆண்டவர் பார்த்தார், வேறு வழியே இல்லை. ஆகவேதான், கர்த்தர் ஆதாமின் எலும்பிலிருந்தே மனுஷியை (ஏவாளை) உருவாக்கினார்!

**"தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன்**

விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" (ஆதி. 2:21,22).

"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர், என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (எரே. 32:27)

என்ற இறைவாக்குப்படி, தம்மால் எதையும் செய்யமுடியும் என்பதை தம் விசேஷ மனுஷ படைப்பின்மூலம் ஆண்டவர் நிரூபித்து காண்பித்தார்!

எலும்பு, ஐக்கியத்தை, பாசத்தை குறிக்கிறது. லாபான் எனும் மனுஷன் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபைப் பார்த்து, "நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன்" (ஆதி. 29:14) என்றான். இஸ்ரவேல் மக்கள் தாவீதைப் பார்த்து, "நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்" (2 சாமு. 5:1, 19:12) என்றார்கள். தாவீதும் அமாசா எனும் மனுஷனைப் பார்த்து, "நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ" (2 சாமு. 19:13) என்றான். அதேபோல, ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாமும், அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயிருக்கிறோம்.

ஆகவேதான் ஆதாம் சொல்கிறான், "இவள் (கர்த்தர் எனக்கு கொடுத்த ஏற்ற துணையாகிய ஏவாள்) என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள்" என்றான். இதினிமித்தம் புருஷன்.. தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி. 2:23,24).

இதனால்தான் ஒவ்வொரு புருஷனும் தன் மனைவியைப் பார்க்கும்பொழுது, "இது என் சரீரம்" என்று உணரமுடிகிறது. "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்..." (கொலோ. 3:19) என்ற வாக்குப்படி, தானாக மனைவியின்மீது அன்பும், பாசமும் பொங்கி வருகிறது. மனைவியும் கணவனைப் பார்க்கும் போது, "இது என் சரீரம்" என்று உணர்ந்து, பாசத்தை பொழிகிறாள். அப்படியாய் கணவனை மனைவியும், மனைவியை கணவனும் நேசிக்க கிருபை தரும்படி, அதற்கேற்ற மனநிலையை தரும்படி, ஆண்டவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

**ஏற்ற துணையை ஆண்டவரே உருவாக்குகிறார்**

*ஈசாக்கு எனும் வாலிபன் ஆண்டவரை நேசித்து, அவர்மீது பற்றுகொண்டு, தன் தகப்பனை கனம்பண்ணினவன். அவனுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் அவனது தகப்பனாகிய ஆபிரகாமுக்கு வந்தபோது, ஆபிரகாம் தன் குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் மனிதனாகிய எலெயாசரை அழைத்து, "நீ என் தேசத்திற்கும், என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்கு ஏற்ற துணையை தேடி கண்டுபிடி" என்றான். அவன், "நான் எங்கு போய் ஏற்ற துணையை தேடுவேன்?" என்று அங்கலாய்த்த நேரத்தில், ஆபிரகாம், "தேவனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணை கொண்டு வரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்" என்றான்(ஆதி. 24:7). அவ்வாறே தன் எஜமானின் மகனுக்கு ஏற்ற துணையை கண்டுபிடிக்கும்படி தேவன் ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு அருள்புரிந்தார். அவர் தெரிந்தெடுத்து கொடுத்த பெண் ரெபெக்காள், ஈசாக்கிடம் வந்தபோது, அவளை தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளை தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாயை இழந்த துக்கம் நீங்கி மிகுந்த ஆறுதலடைந்தான் (ஆதி. 24:67). தேவன் அவன் குடும்பத்தை ஆசீர்வதித்தார்!*

31 வயது நிரம்பிய ஒரு பெண், சென்னையிலுள்ள "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரத்திற்கு வந்திருந்தாள். அவள் பெற்றோருக்கோ வேலை கிடையாது. ஆகவே, அவள் மிகவும் கஷ்டப்பட்டு வேலைசெய்து, தன் சகோதர, சகோதரிகளுக்கு வேலை வாங்கிக்கொடுத்து, திருமணமும் செய்துவைத்தாள். அத்துடன் தன் பெற்றோரையும் பராமரித்து வந்தாள். இதனால், குடும்பத்தில் மிகுந்த கடன் ஏற்பட்டது. திடீரென்று, ஒருநாளில் அவள் செய்துவந்த வேலையும் போய்விட்டது. அந்த கடினமான சூழ்நிலையில், அவள் வேலை வாங்கிக்கொடுத்து, திருமணமும் செய்துவைத்த சகோதர சகோதரிகள் அவளை மறந்துபோனார்கள். தாங்கொணா வேதனையுடன் நம்பிக்கையின்றி ஜெப கோபுரத்திற்கு வந்திருந்த அவளை ஜெபவீரர் அன்போடு வரவேற்று, விசாரித்து, ஆலோசனை கூறி, பிரார்த்தனை செய்து அனுப்பி வைத்தார். ஜெபத்தைகேட்ட ஆண்டவர், அவள் வாழ்க்கையில் ஓர் அற்புதத்தை செய்தார்! திடீரென்று அவளுக்கு ஒரு நேர்முகத்தேர்விற்கு அழைப்பு வந்தது; தேர்வில் வெற்றி பெற்றாள். வெளிநாட்டிலிருந்து வந்த ஓர் இந்திய மனிதர்,

வெளிநாட்டிலுள்ள ஒரு கம்பெனிக்காக அவளை தேர்வுசெய்து, வேலையில் சேர்த்தார். மிகவும் திறமையாக, உண்மையும், உத்தமமுமாக அந்த கம்பெனியில் வேலை செய்தாள். ஒரு நாள் அந்த கம்பெனியின் தலைவர் அவளை அழைத்து, "எனக்கு பெற்றோரே கிடையாது, இந்த உலகில் நான் நம்பக்கூடியவர்கள் யாருமில்லை, எனக்கு ஒரு வாழ்க்கைத் துணையை தேடி வருகிறேன். நீங்கள் என்னை திருமணம் செய்து கொள்வீர்களா?" என்று கேட்டார். அவள் மிகுந்த சந்தோஷத்துடன் தன் சம்மதத்தை தெரிவித்தாள். விரைவில் இருவருக்கும் திருமணம் நடந்தது. அந்த மனிதர் அவளது சகல தேவைகளையும் சந்தித்தார். அவளுக்கு இருந்த எல்லாக் கடனையும் தீர்த்து, அவளுடைய பெற்றோருக்கு வேண்டிய உதவிகளையும் செய்து பராமரித்தார். பின்பு அவளை தன்னோடு அமெரிக்க தேசத்திற்கு அழைத்து சென்றார். அவள் மிகுந்த பரவசத்தோடு, "ஆண்டவர் என்னை மறக்கவில்லை, அவரே என்னிடம் அன்புகாட்டி, இந்த உலகில் என்னை நேசிக்கும்படி, ஒரு வாழ்க்கைத் துணையை கொடுத்து, இனிய குடும்ப வாழ்க்கையை அமைத்து, நான் வாழ்ந்திருக்கும்படி வழி செய்திருக்கிறார்; உங்கள் ஜெபத்திற்கு மிக்க நன்றி" என்று ஜெப கோபுரத்திற்கு கடிதம் எழுதியிருந்தாள்.

*ஆம், ஆண்டவர் ஒவ்வொரு மனுஷனுக்கும்/மனுஷிக்கும் ஏற்ற துணையை உருவாக்கி அவர்கள் ஒரே மாம்சமாகும்படி அருள்செய்கிறார். கிறிஸ்துவும் சபையும் இசைந்திருப்பது போல கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாய் அன்பாய் இருக்கிறார்கள். பவுலடிகள் இதைப்பற்றி பேசும்போது, இந்த இரகசியம் பெரியது என்று வர்ணிக்கிறார்.*

***"நாம் அவருடைய (கிறிஸ்துவின்) சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது, நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்"***

*(எபே. 5:30-32).*

### கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பின் இரகசியம் என்ன?

## குடும்ப ஐக்கியத்திற்காக சிலுவை காயம்

*ஆண்டவராகிய இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்பொழுது, போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவிலே குத்தினான்; உடனே இரத்தமும்*

தண்ணீரும் புறப்பட்டு வந்தது (யோவான் 19:34). போர்ச்சேவகன் அவரது விலாவில் ஏன் குத்தினான் என்றால், ஒவ்வொருவரின் குடும்ப வாழ்க்கையிலும் ஆண்டவருடைய ஆசீர்வாதம் இறங்கும் படியாக! ஆகவேதான் தேவனாகிய கர்த்தர், மனுஷனுடைய விலாவிலிருந்து ஏற்ற துணையாகிய மனுஷியை உருவாக்கினார். அந்த விலா எலும்புதான் ஏற்ற துணையாக இருக்க வேண்டும் என்று ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்டது. இதினிமித்தம் குடும்ப வாழ்க்கையில் ஒருமனமும், இன்பமும் இறங்க வேண்டும் என்பதற்காக இயேசு சிலுவையிலே அவருடைய சரீரத்தில் காயம் ஏற்படும்படி, தம்முடைய சரீரத்தை ஒப்புக் கொடுத்தார். ஆகவே, கணவனுக்கும் மனைவிக்கும் உறவிலே ஒரு காயமும் உண்டாகாத படிக்கு அந்த உறவு ஒருமனப்பட்ட உறவாய், இறைவனுடைய அன்பினால் நிரம்பிய உறவாய் இருக்கும்படியாக அவர் வழிசெய்தி ருக்கிறார்.

ஆகவே, அவருடைய ஞானத்தினால் கட்டப்பட்ட ஒரு குடும்பம் ஒருநாளும் அன்பிலே குறைவாய் இருப்பதில்லை. அக்குடும்பம் சிலுவைநாதரின் அன்பினால் நிறைந்திருக்கும் ஒரு தியாக அன்பாக, ஒரு நேச அன்பாக இருக்கும், அதினிமித்தம் கணவனுக்கும் மனைவிக்கும் நடுவே பாசமும், ஐக்கியமும் எந்நாளும் நிலைத்தோங்கும்.

***"...முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது"*** (பிர. 4:12)

என்ற வாக்குப்படி, கணவனும் மனைவியும் அவரோடு இணைய வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவருடைய விலா எலும்பி லிருந்து வடியும் இரத்தம் அவர்கள் குடும்ப வாழ்க்கைக்கு ஜீவனை கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. அந்த ஜீவன் பரிபூரணப்படும் படியாக செய்கிறது (யோவான் 10:10). ஆகவே, ஆண்டவரோடு இணைந்த கணவனும் மனைவியும் ஒருநாளும் உறவிலே முறிக்கப் படவே முடியாது.

இப்படி குடும்ப வாழ்க்கை உறவிலே ஜீவன் பெற்று அவருடைய இரத்தத்தினிமித்தம் உறவிலே ஜீவன் உடையவர்களாக ஒருமனதை அனுபவிப்பதையும், அவர் சிந்திய, அவருடைய காயத்தி லிருந்து வடிந்த தண்ணீர் நிமித்தம் வற்றாத நீருற்றைப்போல் செழிப்போடும் (ஏசாயா 58:11) இருப்பதையும் காணும் ஜனங்கள், கணவனும் மனைவியுமாகிய அவர்கள் உறவைக் கண்டு, "மெய்யாகவே இவர்களை வாழ வைப்பது இறைவன் இயேசுவே" என்று அறிக்கைசெய்வார்கள். அப்படிப்பட்ட ஒரு குடும்ப வாழ்வை ஆண்டவர் உங்களுக்கு உருவாக்குவார்.

## குடும்பத்தில் ஒருமனம் தரும் ஞானம்:

தேவனாகிய கர்த்தர், ஆதி மனுஷனாகிய ஆதாமோடும், ஏவாளோடும், பகலில் குளிர்ச்சியான வேளையிலே ஏதேன் தோட்டத்தில் வந்து உலாவினார், அவர்களோடு பேசினார் (ஆதி. 3:8,9). அவர் மண்ணினாலே மிருகங்களையும், பறவைகளையும் உருவாக்கி, அவைகளை ஆதாமிடம் கொண்டுவந்து, "ஆதாம், இவை ஒவ்வொன்றிற்கும் நீ கொடுக்கிற பெயரைத்தான் கொடுக்கப்போகிறேன்" என்றார். அப்படியே அவன் எந்தெந்த பேரிட்டானோ அதுவே அதற்கு பேராயிற்று (ஆதி. 2:19).

இவ்விதமாகவே, ஆதி குடும்பத்தோடு உலாவின தேவனாகிய கர்த்தர், இன்றும் ஒவ்வொரு குடும்பத்தின் மக்களோடும் உலாவ, பேச, ஜெபத்தைக் கேட்க, குடும்பத்தைக் கட்ட, குடும்பத்திற்காக யாவற்றையும் செய்துமுடிக்க ஆவலோடிருக்கிறார். மெய்யாகவே, அவர் ஜனங்களை சிநேகிக்கிறார் (உபா. 33:3). ஆகவேதான், ஆண்டவர் இயேசு, "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் (குடும்பத்தில்) இருக்கிறேன்" (மத். 18:20) என்று வாக்குப் பண்ணியிருக்கிறார்.

***"...தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று"***
*(2 நாளா. 30:12)*

ஆம், கர்த்தருடைய கரத்திலிருந்து ஆசீர்வாதம் குடும்பத்தில் இறங்கும்படி கணவன் மனைவி இருவரும் ஒருமனமாக இணையும்படி செய்கிறது.

***"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் ..."*** *(மத். 18:19)*

என்ற ஆண்டவர் இயேசுவின் வாக்குத்தான் எத்தனை உண்மையானது!

பால் என்ற தேவ ஊழியர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஆண்டவரிடமிருந்து ஊழிய அழைப்பு வந்தபோது, தான் செய்துவந்த உலகப்பிரகாரமான வேலையை ராஜினாமா செய்தபின்பு, தன் மனைவியைப் பார்த்து, "ஆண்டவர் என்னை தமது ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார், ஆகவே, என் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன்" என்றார். அந்த நேரத்தில் அவர்களுக்கு முதலாவது வந்தது, பட்டினி, சஞ்சலம், மிகுந்த வேதனை! என்றாலும், இருவரும் ஆண்டவரை மிகவும்

நேசித்தபடியினால், அவருடைய கரம் அவர்கள்மீது இறங்கியது. ஒவ்வொருநாளும், "ஆண்டவரே, எங்களை அழைத்த நீர் உண்மையுள்ளவர்! எங்கள் ஊழியத்தை கட்டியெழுப்பும்" என்று ஒருமனதோடு இருவரும் சேர்ந்து பிரார்த்தனை செய்யும்படி, ஆண்டவர் அவர்களின் இருதயத்தை ஒருமுகப்படுத்தினார். ஒரு நாள் ஆண்டவருடைய சமுகத்தில் கதறி பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்பொழுது, ஓர் ஒளி அவர்கள்மேல் பிரகாசித்தது! வானத்திலிருந்து, "திகையாதே, நான் உன் தேவன்" என்ற சத்தம் அவர்கள் காதுகளில் தொனித்தது! இருவரும் மிகவும் பரவசமடைந்தனர்! அந்த நாளிலிருந்து ஆண்டவர் அவர்களோடு உலாவி, அவர்கள் இல்வாழ்க்கையை செழிக்கசெய்தார். அவர் செய்த ஒவ்வொன்றிலும் நிறைவான ஆசீர்வாதம் தங்கியிருந்ததினால், அவரால் ஒரு பெரிய ஊழியம் கட்டியெழுப்பப்பட்டது!

*தேவனால் உருவாக்கப்படும் குடும்பத்தில் அவரது கரம் இறங்கிவந்து, கணவன், மனைவி இருவரின் உள்ளங்களையும் ஒருமுகப்படுத்துகிறது. அவரே முன்நின்று ஒவ்வொரு காரியத்தையும் செய்து முடிக்கிறார்.*

*வாலிப சகோதர, சகோதரிகளே, ஆண்டவர் தம்முடைய ஞானத்தோடு உங்கள் குடும்பத்தை கட்டியெழுப்ப விருப்பமுடையவராயிருக்கிறார்! ஆகவே, உங்கள் எதிர்காலத்தைக் குறித்து பயப்படாதிருங்கள்! இன்று ஆண்டவருடைய கரம் உங்கள்மீது இறங்கி அவருடைய ஞானத்தினால், அவருடைய முன்தீர்மானத்தினால் (எபி. 4:3), உங்கள் குடும்ப வாழ்க்கையை கட்டும்படியாகவும், அன்பு பெற்றோரே, இதேபோல் உங்கள் பிள்ளைகளுக்கு ஆண்டவருடைய ஞானத்தினால் ஏற்ற துணையை அருளும்படியாகவும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே கட்டளையிடுகிறேன். ஆண்டவர் அப்படியே செய்வார்.*

# உ. இறைவன் தங்கும் குடும்பம்!

- ***Dr.*** பால் தினகரன்

***"...நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்..."*** *(2 கொரி. 1:16).*

*கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களை தமது வல்லமையினால் மோசே என்னும் தமது தீர்க்கதரிசியின் மூலமாக பட்டணங்கள், பாலைவனங்கள், பெரிய சமுத்திரத்தின் வழியாக, எகிப்து என்னும் அடிமைத்தன நாட்டிலிருந்து, தாம் வாக்குத்தத்தம்பண்ணின, பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு அழைத்து செல்லும் வழியிலே, எல்லாருக்கும் ஒரு கூடாரம் போட்டார்கள். அப்பொழுது ஆண்டவர் மோசேயிடம், "நானும் என் பிள்ளைகளோடு தங்கியிருக்க விரும்புகிறேன்; நான் அவர்கள் நடுவிலே வாசம் பண்ண எனக்கு ஒரு கூடாரத்தைப்போடு, ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கு" என்றார் (யாத். 25:8). அவர் தேவாதி தேவன்! சர்வவல்லமையுள்ளவர்! சிங்காசனத்திலே வீற்றிருக்கும் உன்னத தேவன்! ஆனாலும், அவர், "நானும், என் பிள்ளைகளோடுகூட கூடாரத்திலே தங்கட்டும்" என்றார். அதுதான் தேவாதி தேவனின் அன்பு நிறைந்த இருதயம்!*

*இந்த சர்வ வல்லமையுள்ள தேவன் மனுஷனாக "இயேசு" என்ற பெயரில் இவ்வுலகிற்கு இறங்கி வந்தபோது,*

***"இதோ, வாசற்படியிலே நின்று (ஒவ்வொருவரின் இதயக் கதவையும்) தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்"***

*(வெளி. 3:20).*

*என்று சொன்னார்.*

### இல்லத்தின் கதவைத் திறப்பது எப்படி?

***"...ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்"***

*(யோவான் 14:23)*

*ஆம், ஆண்டவரிடம் அன்புகூருவதுதான் நம்முடைய கதவைத் திறப்பது! நம்முடைய ஆண்டவர் பரலோகில் வீற்றிருப்பதைவிட நம்மோடு வாசம்பண்ணுவதையே அதிகமாய் விரும்புகிறார்!*

ஒரு சகோதரி, தன் வீட்டு பிரச்சினைகளினிமித்தம் கலங்கி தவித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர், "இயேசு அழைக்கிறார்" ஒலிநாடா ஒன்றை அவர்களிடம் கொடுத்தார். அதில் என் தந்தை, "ஆண்டவர் இல்லத்தில் வரும்பொழுது, எப்படி இருக்கும்" என்பதை அழகாக வர்ணித்திருந்தார். அதை அவர்கள் போட்டு, கேட்டுக்கொண்டிருந்தபோது, யாரோ திடீரென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, ஓடிப்போய் திறந்து பார்த்தார்கள். அங்கே யாருமேயில்லை. இப்படியாக மூன்று முறை கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கடைசியாக, "இயேசு சுவாமி வீட்டிற்கு வந்தால் எப்படி இருக்கும் என்று சகோதரர் தினகரன் சொல்லி யிருக்கிறபடி, ஒருவேளை இயேசு சுவாமியாக இருக்கலாம்" என்று எண்ணி கதவைத் திறந்தார்கள். அங்கே இயேசு புன்முறுவலோடு நின்றுகொண்டிருந்ததை கண்டு பிரமித்துப்போனார்கள்! பேரானந் தம் அவர்கள் உள்ளத்தை நிறைத்தது. ஆண்டவர் அவர்கள் வீட்டிற்குள் பிரவேசித்து, "மகளே, இன்று உன்னை என்னுடைய பிள்ளையாகவும், உன் குடும்பத்தை என்னுடைய குடும்பமாகவும் மாற்றுகிறேன்" என்று அவர்களோடு பேசினார். அந்த நாளிலி ருந்து அந்த வீட்டில் ஆசீர்வாதம் நிறைவாய் பெருக ஆரம்பித்தது!

**ஆண்டவர் நம் வீட்டில் வந்து எந்த அறையில் தங்குகிறார்?**

*"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத்தா..."* *(நீதி. 23:26)*

*அதில் நான் வந்து தங்கட்டும் என்றே அவர் கூறுகிறார்.*

**அவர் ஏன் நம் இருதய அறைக்குள் தங்க விரும்புகிறார்?**

*"தேவன் ஆவியாயிருக்கிறார்..."* *(யோவான் 4:24).*

*அவர் நடமாட ஒரு சரீரம் அவருக்கு அவசியம்!*

*ஆகவேதான், அவர் நம்முடைய இருதயத்திற்குள் வந்து தங்குகிறார். அதை அவர் ஆலயமாக மாற்றுகிறார் (1 கொரி.3:16,17)*

*நம்முடைய சரீரம் எங்கெங்கே போகிறதோ, எந்த அறைக்குள் எல்லாம் போகிறதோ, அந்த அறையில் எல்லாம் ஆண்டவர் உலாவுகிறார்!*

என்னுடைய தந்தையின் தகப்பனார் (தாத்தா) கணித ஆசிரியர். அவர் பள்ளி வகுப்புகளை முடித்து வீட்டிற்கு வந்தபிறகு, அநேக மாணவர்கள் டியூஷன் படிக்க அவரிடம் வருவார்கள். அவர்களுக்கு நன்றாக பாடம் சொல்லிக்கொடுப்பார். அவரிடம் டியூஷன் படிக்கும் அத்தனை மாணவர்களும் வெற்றிபெறுவார்கள். ஆனால், அவருடைய மகனாகிய என் தந்தையோ பி.எஸ்ஸி. யில் கணக்கு பாடத்தில் தோல்வியடைந்தார். என் தந்தை உள்ளமுடைந்த வராய், இனி இந்த உலகத்தில் வாழவே வழியில்லை என்று தற்கொலை செய்துகொள்ள ரயில் தண்டவாளத்தை நோக்கி ஓடினார். அப்பொழுதுதான் ஆண்டவர் இயேசு, கல்வாரி சிலுவையில் தாம், மக்களுக்காக காண்பித்த தியாக அன்பை என் தந்தையின் சித்தப்பாவின் மூலம் அறிந்துகொள்ள செய்தார். உடனே என் தந்தை, “சித்தப்பா, ஆண்டவர் எனக்கு வேலை தருவாரா? சமாதானம் தருவாரா?” என்று கேட்டார். “உனக்கு தேவையான அனைத்தையும் தருவார், நீ முதலில் உன் உள்ளத்திற்குள்ளே அவருக்கு இடங்கொடு” என்றார். உடனே என் தந்தை தன் வீட்டிற்கு சென்று, அறைக் கதவை மூடிக்கொண்டு, “ஆண்டவரே, நான் எல்லாவற்றையும் இழந்த நிலையில் நிற்கிறேன். நீர் உயிரோடு இருப்பீரென்றால் எனக்கு சமாதானம், நம்பிக்கை, பிரகாசமான எதிர்காலத்தை தாரும்” என்று கதறினார். அன்று அவரது கண்ணீரைக் கண்ட ஆண்டவர் மனமிரங்கி, தமது பிரசன்னத்தினால் அளவில்லாமல் நிறைத்து, என் தந்தையின் இருதயத்திற்குள்ளும் முழுகுடும்பத்திற்குள்ளும் உலாவ ஆரம்பித்தார்!

இயேசு நம் இருதயத்தில் குடும்பத்தில் பிரவேசிக்கும்பொழுது என்ன நடக்கும்?

## ஆனந்த மகிழ்ச்சி!

*ஆண்டவர் இயேசு நம் குடும்பத்தில் வரும்பொழுது, ஆனந்த மகிழ்ச்சி நம் குடும்பத்தை நிறைக்கிறது. சங்கீதக்காரனும், “எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கும் தேவன்” (சங். 43:4) என்று அவரை பெயரிட்டு அழைக்கிறான். அவர் சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், அவரது வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு (சங். 16:11).*

ஒரு தம்பதியர் ஒவ்வொருநாள் இரவிலும் நடன கேளிக்கைகளில் பங்கேற்றபின், இரவு 2 மணிக்குமேல் வீட்டிற்கு வருவார்கள்; மறுநாள் காலை 9 மணி வரைக்கும் நன்றாக தூங்கிவிட்டு

அலுவலகத்திற்கு ஓடுவார்கள். அலுவலகத்திலும் அவர்களது உள்ளம் உல்லாசத்தில் மூழ்கியிருக்கும். மறுபடியும் எப்போது இரவு வரும் என்று கைக் கடிகாரத்தை பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். திடீரென்று ஒருநாள் அவர்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய பிரச்சினை எழும்பியது; உலக சிற்றின்பங்களில் மூழ்கிக்கிடந்த அவர்களை திகிலும், பயமும் ஆட்கொண்டது. அந்த பிரச்சினையை மேற்கொள்ள முடியாமல் நொறுங்கி போனார்கள்.

ஆம், உலக ஆசாபாசங்களில் சிக்குண்டு கிடைக்கும் ஆனந்த மகிழ்ச்சி, பிரச்சினைகள் வரும்பொழுது, நம்பிக்கையற்ற நிலையில் ஆழ்த்துகிறது! ஆனால், ஆண்டவர் நம் இருதயத்தில், குடும்பத்தில் வந்து தங்கும்பொழுது, "நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" *(மத். 11:28)* என்கிறார்.

***"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்"***

*(சங். 55:22)*

***"அவர் (கர்த்தர்) உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்"***

*(1 பேதுரு 5:7)*

என்ற வேத வசனங்கள், நம்மை எவ்வளவாய் ஆறுதல்படுத்துவதாய், ஆற்றித்தேற்றுவதாய் இருக்கின்றன! ஆண்டவர் நமக்குள் தங்கியிருக்கும்பொழுது, அவர்மீது எல்லா பாரத்தையும் வைத்து விடலாம். அவர் நமக்கு இளைப்பாறுதல் தருவார்; எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும் *(பிலி. 4:7)*. நாம் எந்த நிலைமையிலிருந்தாலும், ஒரு மனரம்மியம் நம்மை நிறைக்கும் *(பிலி. 4:11)*. அந்த மனரம்மியமோ குடும்பத்தில் நித்திய விருந்தாக மாறுகிறது *(நீதி. 15:15)*. ஒரு பக்கம், பாரம், பிரச்சினைகள்! மறுபக்கம், தேவாதி தேவன் நமக்குள் வந்து தங்கியிருக்கும்பொழுது, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தை நமக்குள் அனுப்புகிறார் *(1 பேதுரு 1:8)*. நம் இருதயம், குடும்பம் ஆனந்த மகிழ்ச்சியினால் நிரம்புகிறது; பிரச்சினைகளின் மத்தியில் நாம் நொறுங்கிப்போகாமல் அவரில் நிலைத்திருக்க செய்கிறது.

பல வருடங்களுக்கு முன்பு "பில்லி" என்று ஒரு பயங்கர குடிகாரர் இருந்தார். அவர் ஒரு சாதாரண சுரங்க தொழிலாளி; அவரது மனைவியோ பக்தி நிறைந்தவள்! ஒவ்வொருநாளும் தன் கணவனுக்காக கருத்தாய் பிரார்த்தனை செய்வாள். ஆண்டவர் அந்த பிரார்த்தனையை கேட்டார். அவளுக்குள் தங்கியிருந்த இயேசு அவளது கணவருக்குள்ளும் இறங்கினார். அதன்பின் அவர்களது இல்லற வாழ்வில் இணையற்ற ஆனந்தம். இந்த மனிதர் முன்பு வேலைக்கு செல்லும்போது, மது அருந்திவந்த மதுக்கடை பக்கமாகத்தான் செல்லவேண்டும். முன்பு குடித்து விட்டு ஆடிக்கொண்டே வருவார்; ஆனால், ஆண்டவர் இயேசு அவருக்குள் வந்தபிறகு, அதே சாலையில் மிகுந்த மகிழ்ச்சியுடன், "அல்லேலூயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று ஆர்ப்பரித்துக் கொண்டே செல்வார்.

ஒரு நாள் அவர் தன் வேலையை முடித்து, வீட்டிற்கு செல்லும் பொழுது, மனைவி வீட்டின் வெளியே கண்ணீரோடு நின்று கொண்டிருந்தாள். தன் கணவரை பார்த்து, "நம் மகளுக்கு பயங்கர ஜுரம், அவள் மரண அவஸ்தைப்படுகிறாள். நான் சேமித்து வைத்திருக்கும் 5 ரூபாயை எடுத்துக்கொண்டுபோய் மருத்துவ ரிடம் மருந்து வாங்கி வாருங்கள்" என்று பணத்தை கொடுத்து அனுப்பினாள். அவர் அந்த பணத்தை வாங்கிக்கொண்டு, மருத்துவரை தேடிசெல்லும் வழியில், ஒரு ஏழை சகோதரி ஓடி வந்து, "ஐயா, சாப்பாடு இல்லாமல் வீட்டில் என் பிள்ளை களெல்லாரும் பசியினால் வாடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று கண்ணீர் வடித்தாள். அவரது உள்ளம் உடைந்தது; உடனே அவர் தன் கையிலிருந்த அந்த 5 ரூபாயையும் அந்த சகோதரிக்கு கொடுத்துவிட்டார். அவள் போனபிறகுதான் அவருக்கு 'திக்' என்றது. "ஐயோ, என் குழந்தையின் கதி என்ன?" என அங்கலாய்த் தார். அப்பொழுது தேவனுடைய பிரசன்னம் அவரை நிறைத்தது. உடனே, சாலையின் ஓரத்திலிருந்த புதருக்குள் குதித்து, "ஆண்டவரே, என் நிலைமை உமக்கு தெரியும்; தயவுசெய்து என் குழந்தையை கண்ணோக்கிப்பாரும்" என்று கதறினார். பின்பு மிகுந்த சமாதானத்தோடு வீடு திரும்பினார். அங்கே அவரது மனைவி முகமலர்ச்சியுடன் வாசலில் நின்றுகொண்டிருந்தாள். "நம் மகளுக்கு என்ன நடந்தது என்று எனக்கே தெரியவில்லை. ஜுரம் முற்றிலும் மறைந்துவிட்டது; அவள் எழும்பிவிட்டாள்" என்றாள். பில்லி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

கவலை, பாரம் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்கிறோம். ஆனால், இவைகள் அனைத்தின் மத்தியிலும், ஆண்டவர் நம் வீட்டில் உலாவும்பொழுது, ஒவ்வொரு பாரத்தையும் அவரே சுமந்துகொண்டு, நம்மை ஆனந்த மகிழ்ச்சியினால் நிறைக்கிறார்!

## குறைவில் நிறைவு!

*"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19).*

நீங்கள் ஏன் உடைக்காகவும், உணவிற்காகவும் கவலைப் படுகிறீர்கள்? ஆண்டவராகிய நான்தான் உங்களோடு இருக்கிறேனே; நான் எல்லாவற்றையும் உங்களுக்கு தருவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார் (மத். 6:30,31).

1967-ல், என் தந்தை வங்கியில் ஒரு அதிகாரியாக பணிபுரிந்து வந்தபோது, தன்னுடைய வருமானத்தை செலவழித்தே ஊழியம் செய்துவந்தார். ஆகவே, அவரது மாத சம்பளம் எங்கள் குடும்பத்திற்கு போதுமானதாயில்லை; நான்காவது வாரம் குடும்பத்தில் வறுமை நிலைதான். எனக்கு 5 வயதாயிருக்கும்பொழுது, ஒரு நாள் சம்பளம் வாங்கி, காணிக்கை கொடுக்கவேண்டிய பணத்தையெல்லாம் கொடுத்துவிட்டு, மீதி பணத்தை என் கையில் வைத்து, என் தந்தையும், தாயும் முழங்கால்படியிட்டு, என் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "ஆண்டவரே, உமது ஊழியத்திற்குப்போக மீதி பணத்தை உம்மிடம் கொண்டு வந்திருக்கிறோம். நீர் இதை தயவாய் ஆசீர்வதியும்; நான்கு வாரங்களும் செலவழித்து மீதியிருக்க கிருபை செய்யும்" என்று ஊக்கமாக ஜெபித்தார்கள். இல்லத்தில் உலாவும் ஆண்டவர் இயேசு அந்த பிரார்த்தனையை கேட்டார். அந்த மாதத்தில்தானே, என் தந்தைக்கு வேலையில் உயர்வு கிடைக்கப்பெற்று, ஆசீர்வாதத்தின்மேல் ஆசீர்வாதத்தை பொழிந்தருளினார்!

ஆம், ஆண்டவர் இயேசு நம் குடும்பத்தின் தேவைகளை நிறைவாக்க நம்மோடிருக்கிறார்! அவர் நம்முடைய பரம தகப்பன்! நம் குடும்பத்தின் தேவைகளை குடும்பமாய் ஆண்டவரிடத்தில் சொல்லுவோம்.

*"அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்"*

*(ஏசாயா 65:24)*

என்று வாக்கருளிய ஆண்டவர், நாம் சொல்வதை கவனித்து கேட்பார். நம் குடும்பத்தில் உலாவி நம் தேவைகளை நிறைவாக்குவார்!

## அக்கினி மதில்!

***"நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று"***

*(யோபு 1:10)*

என்று ஆண்டவரிடம் யோபைக் குறித்து சாத்தான் கூறினான்.

இந்த உலகில் எவ்வளவுதான் பாதுகாப்பு வசதிகள் இருந்தாலும், அது நிரந்தர பாதுகாப்பாயிராது. ஆனால் ஆண்டவர், "நான் ஒரு வீட்டிற்குள் வந்துவிட்டால், அந்த வீட்டை சுற்றிலும் வேலியடைப்பேன், அக்கினி மதிலாயிருப்பேன், அதற்குள் உலாவுவேன்" (சக. 2:5) என்று வாக்குக்கொடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில், சீரிய ராஜா எலிசா தீர்க்கதரிசிக்கு விரோதமாக பலத்த இராணுவத்தை அனுப்புகிறான் (2 இரா. 6:17). அவர்கள் இராக்காலத்தில் வந்து பட்டணத்தை வளைத்துக்கொண்டார்கள். எலிசாவின் வேலைக்காரன், "ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்?" என்று துடிக்கிறான். அப்பொழுது எலிசா, "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என்றான். உடனே ஆண்டவர், அந்த வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். எலிசாவை ஒரு எதிரியும் தொடமுடியவில்லை. ஆண்டவர் அவர்கள் கண்களை குருடாக்கினார். எலிசா தனி மனிதனாக அனைவரையும் மேற்கொண்டு ராஜ்யத்தை கைப்பற்றினான்.

***"(இந்த) உலகத்திலிருக்கிறவனிலும் (பிசாசிலும்) உங்களிலிருக்கிறவர் (ஆண்டவர்) பெரியவர்"***

*(1 யோவான் 4:4).*

ஆம், இந்த உலகத்தில் இருக்கும் சகல இரதங்களையும், குதிரைகளையும், அதிகாரங்களையும்விட நமக்குள் இருக்கிற ஆண்டவர் பெரியவர்! அவர்தான் 'நான் உன்னை சுற்றிலும் அக்கினிமதிலாயிருப்பேன்' என்கிறார்!

பல வருடங்களுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட நகரில் ஒரு தபால் அதிகாரி ***(Post Master)*** இருந்தார். ஒவ்வொருநாள் காலையிலும், மாலையிலும் குடும்பமாக பாட்டுப்பாடி, வேதத்தை வாசித்து ஜெபம் செய்வார்கள். இதனால் பக்கத்திலிருந்த ஒருவர் அவர்கள்மீது அதிக எரிச்சலடைந்து, "நான் இவர்களை அழித்து விடப்போகிறேன்" என்று உறுதிபூண்டு, ஒரு மந்திரவாதியிடம் சென்று பணம் கொடுத்து, அதிக சக்திபடைத்த பிசாசை அனுப்பினான். அப்படியே அந்த மந்திரவாதி தன் மந்திரசக்தியினால் அதிக சக்திபடைத்த பிசாசை அந்த குடும்பத்திற்கு எதிராக அனுப்பினான். அதுவரையிலும் அவன் அனுப்புகிற பிசாசுகள் மந்திரவாதி விரும்பின காரியத்தை முடிக்காமல் திரும்ப வந்ததேயில்லை. ஆனால், இந்த முறையோ அவன் அனுப்பின வேகத்தில் அத்தனை பிசாசுகளும் அவனிடம் திரும்ப வந்து, "ஐயா, எங்கு வேண்டுமென்றாலும் எங்களை அனுப்புங்கள்; ஆனால், அந்த குறிப்பிட்ட வீட்டிற்கு மாத்திரம் அனுப்பிவிடாதீர்கள். அந்த வீட்டை சுற்றிலும் அக்கினி பயங்கரமாக எரிகிறது; அது எங்களை பட்சிக்கிறது" என்றன.

அந்த தபால் அதிகாரியின் குடும்பத்திற்கு தீங்கு நேரிடாததைக் கண்ட அந்த அண்டை வீட்டுக்காரன், மந்திரவாதியின்மூலம் காரணத்தை அறிந்து அதிர்ச்சியடைந்தான்! உடனே, தபால் அதிகாரியின் வீட்டிற்கு சென்று அதின் காரணத்தை வினவினான். தபால் அதிகாரி ஆண்டவர் இயேசுவின் அன்பும், பிரசன்னமுமே தங்களைக் காக்கிறது என்பதை விளக்கிக் கூறியபொழுது, தானும் தன் உள்ளத்தில் இயேசுவை நேசித்து அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன் வீட்டையும் ஆசீர்வதிக்கும்படி பிரார்த்தனை செய்து, ஆசீர்வதிக்கப்பட்டான்.

*ஆம், இந்த உலகத்திலிருக்கும் பிசாசைவிட, நம் இல்லத்தில் தங்குகிற ஆண்டவர் இயேசு பெரியவர்! அவர் சர்வவல்ல தேவன்! அவருக்கு நம் இல்லத்தை, இதய கதவைத் திறந்து கொடுப்போம்! அவர் வந்து தங்குவார்; நம்மோடு உலாவுவார்; நம்மை ஆசீர்வதிப்பார்!*

# 3. இறைவன் உலாவும் குடும்பம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தை கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி. 3:20).

இன்றைக்கு அநேகர், பணத்திற்காக, அந்தஸ்திற்காக ஆண்டவரில்லாத ஒரு குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள். கடைசியில், அந்த இல்லற வாழ்க்கையில் பிரச்சினை, பிரிவினை ஏற்படுகிறது. ஆனால், "ஆண்டவர் இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட இல்வாழ்க்கை எனக்கு அமையவேண்டும்" என்று வாஞ்சிக்கிறவர்களின் இல்வாழ்க்கையில் ஆண்டவர் முப்புரிநூலாக பிரவேசிக்கிறார். அந்த இல்வாழ்க்கையில் என்றைக்குமே பிரிவினைக்கு, பிரச்சினைக்கு இடமேயிராது.

**ஆண்டவர் இல்லற வாழ்க்கையில் இணையும்பொழுது, என்னென்ன காரியங்களை செய்கிறார்?**

## குடும்பத்தின் மத்தியில் உலாவுகிறார்!

நாம் ஆண்டவரை நேரடியாக தரிசிக்க முடியாமலிருக்கலாம். ஆனால், குடும்ப வாழ்க்கையில் அவருடைய பிரசன்னத்தை நம்மால் நன்கு உணரமுடியும்! அவர் குடும்பத்தின் மத்தியில் உலாவுகிற தேவன்! அவரை தேடும்பொழுது, நாம் அவரை கண்டடையத்தக்கவண்ணமாக அவர் நமக்கு மிகவும் சமீபமாயிருக்கிறார்.

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுது கொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்கு சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? (உபா. 4:7)

"தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்"

(சங். 145:18)

யாக்கோபு என்ற மனிதன் உலக காரியங்களை அறியாதவனாக தனிமையில் வீட்டைவிட்டு, பெற்றோரைவிட்டு ஒரு கோலை மாத்திரம் கையில் பிடித்துக்கொண்டு, வனாந்தரத்தில்

*வெகுதூரம் நடந்து செல்கிறான். தனக்கு என்ன நேரிடப்போகிறது என்று அறியாதவனாய், மிகுந்த கவலையோடு, இரவு வேளையில் ஒரு கல்லை எடுத்து தன் தலையின்கீழ் வைத்து, நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். அந்த நேரத்தில் கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி, "உன்னை எனக்கு சொந்தமாக தெரிந்து கொண்டிருக்கிறேன்; உன்னை என்னோடு இணைத்து ஆசீர்வதிக்க விரும்புகிறேன், உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன்; உன் சந்ததிக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னை திரும்பி வரப்பண்ணுவேன்" என்றார். அப்படியே ஆண்டவர் அவனுடைய ஒரே நம்பிக்கையாயிருந்து, ஒன்றுமில்லாமையிலிருந்து அவனை அளவில்லாமல் ஆசீர்வதித்து உயர்த்தினார்! ஆண்டவரின் ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்ற யாக்கோபு, தன் சொந்த வீட்டிற்கு திரும்பி வரும்போது, "நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானை கடந்துபோனேன். இப்பொழுது இரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்" என்று பரவசத்தோடு கூறுகிறான் (ஆதி. 28:10-17; 32:10)!*

**ஆண்டவர் நம் குடும்பத்தில் வாசம்பண்ண நாம் செய்யவேண்டுவது என்ன?**

*ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ள விருப்பமாயிருப்பான். தேவன் அந்த குடும்பத்தின் மேல் அன்பாயிருப்பார். நானும், பிதாவாகிய தேவனும் அவர்களோடு, அவர்களுக்குள்ளே வந்து வாசம்பண்ணுவோம் (யோவான் 14:23).*

***"... சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே, நோக்கிப் பார்ப்பேன்"***

*(ஏசாயா 66:2)*

*என்று கர்த்தர் சொல்கிறார்.*

ஒரு தாய் தன் குழந்தைகளை பெற்றெடுத்தவுடனே, அந்த குழந்தைக்கு தேவையான உடை வாங்குகிறார்களோ இல்லையோ, அதற்கென்று ஒரு புதிய வேதாகமத்தை வாங்கி வைத்துவிடுவார்கள். குழந்தை வேதத்தை வாசிக்கும் பருவம் வந்தவுடனே, அதன் அருகில் உட்கார்ந்து வேத வசனங்களை கற்றுக்கொடுப்பார்கள். ஆகவே அவர்களது இல்லற வாழ்க்கை, தேவ ஆசீர்வாதத்தோடு வளர்ந்து பெருகியது. ஆண்டவரின் கிருபையால் அந்த தாயார் வயது முதிர்ந்த காலத்தில் தன் பிள்ளைகள் மூலம் ஆசீர்வாதம் பெற்றவர்களாக மகிழ்ச்சியுடன்

காணப்பட்டார்கள். தன் மரண நேரம் வந்தபோதோ, ஆண்டவர் சமுகத்தில் மிகுந்த சமாதானத்துடன் பிரவேசித்தார்கள்.

ஆம், ஆண்டவருடைய வசனத்தை கனப்படுத்தும் ஒவ்வொரு இல்லத்திலேயும், உள்ளத்திலேயும் ஆண்டவர் அனுதினமும் உலாவுவார்.

## பரிசுத்தமான குடும்பத்தில் வாசம்பண்ணுவார்!

***"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தை கண்டு, உன்னை விட்டுப்போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது"*** *(உபா. 23:14)*

என்ற வசனத்தின்படி, கர்த்தருக்கு பயந்து, அசுத்தமான காரியங்களைவிட்டு விலகி வாழும் இல்லத்தில் ஆண்டவர் வந்து வாசம்பண்ணுவார்.

யோபு என்ற பக்தன் தேவனுக்கு பயந்து அவருக்கு பிரியமில்லாத அசுத்தமான காரியங்களை தன் குடும்பத்திலிருந்து, தன்னிலிருந்து விலக்கி வாழ்ந்தான் (யோபு 1:1).

***"என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?"***

*(யோபு 31:1)*

என்று அவன் தன் கண்களோடே உடன்படிக்கைப்பண்ணிக் கொண்டான். குடும்ப வாழ்க்கையில் ஆண்டவருக்கு பிரியமான காரியங்களை செய்ய, தனிப்பட்ட விதத்தில் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும்பொழுது, பரிசுத்தமாக வாழ்ந்து, ஆண்டவருக்கு பிரியமானவர்களாக மாற முடியும். குடும்பம் முழுவதும் பரிசுத்தமாக காக்கப்படும்.

***"நான் உனக்கு போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"*** *(சங். 32:8)*

***"நீங்கள் வலதுபுறமாய் சாயும்போதும், இடதுபுறமாய் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"*** *(ஏசாயா 30:21)*

என்று வேதம் கூறுகிறதுபோல, அவர் நாம் நடக்கவேண்டிய

*வழியையும், செல்ல வேண்டிய பாதைகளையும், செய்ய வேண்டிய காரியங்களையும் போதித்து, வழிநடத்துவார்.*

போப் ஜான் 23, ஒரு நாள் மிகுந்த கவலையோடு தன் இல்லத்திலே அமர்ந்திருந்தார். ஏனென்றால், அடுத்த நாளில் தன் சபை மக்களிடத்தில், சில முக்கிய தீர்மானங்களை நிறைவேற்ற சபைக் குழுவை கூட்டவேண்டும். அவர் தன் உள்ளத்தில், 'சபை மக்கள் நான் சொல்வதை ஏற்றுக்கொள்வார்களோ? இல்லையோ?' என்று யோசித்து, மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தார். அன்று இரவு அவருக்கு தூக்கமே வரவில்லை. எழுந்து வீட்டின் மாடியில் அங்குமிங்குமாக உலாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு குரல், ***"Little John go to sleep"*** (என் சிறிய மகன் ஜான்! போய் பேசாமல் தூங்கு) என்று ஒலித்தது. அப்பொழுது அவர், "என்னுடைய தாய்தான், என்னை இப்படி அன்போடு அழைப்பார்கள். ஆனால், என் தாயார் இந்த உலகில் இல்லையே" என்று எண்ணிய மறுகணம், "ஆண்டவர்தான் தன்னை அன்புடன் அழைக்கிறார்" என்பதை அறிந்துகொண்டார்; தெய்வீக சமாதானம் அவர் உள்ளத்தை நிரப்பியது. அன்று இரவு ஒரு குழந்தை யைப்போல உறங்கினார். மறுநாள் தன் சபைக்குழுவிடம் தான் தீர்மானித்ததை சொன்னபோது, சபையார் அனைவரும் ஏகமனமாய் ஒப்புதல் அளித்தனர். ஆண்டவர் அக்காரியங்கள் எல்லாவற்றையும் நிறைவாய் செய்து முடித்தார்.

*ஆம், ஆண்டவரின் வார்த்தைக்கு அவர் கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ்ந்தபடியினால்தான், ஆண்டவர் அவரது இல்லத்தில் வாசம்பண்ணி, தான் செய்யவேண்டிய காரியங்க ளெல்லாவற்றையும், அவரே அவருக்கு கற்பித்தார்.*

*வேதத்தில், கர்த்தருக்கு பயந்து வாழ்ந்த ஓபேத்ஏதோம் என்ற மனுஷனைக் குறித்து பார்க்கிறோம் (2 சாமு. 6:1-12). கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுதுகொள்ளப்படுகிற தேவனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவந்தார்கள். அப்போது தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப் பாடிக்கொண்டு போனார்கள். அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், அபினதாபின் குமாரனாகிய ஊசா*

தேவனுடைய பெட்டியினிடமாய் தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு கோபமூண்டது; அவர் அவனை அடித்தார்; தேவனுடைய பெட்டியண்டையிலே ஊசா செத்தான். ஊசாவிற்கு ஏற்பட்ட பயங்கரத்தைக் கண்ட தாவீது பயந்து, கர்த்தருடைய பெட்டியை தன் வீட்டிலே வைப்பதற்கு மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான். ஓபேத்ஏதோம், கர்த்தருடைய பெட்டியை மூன்று மாதம் சந்தோஷமாக தன் வீட்டில் வைத்துக் கொண்டான். அதன் பயனாக கர்த்தர், ஓபேத்ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் (2 சாமு. 6:11).

இன்று எத்தனையோ வாலிபப் பிள்ளைகள் தங்கள் மனம் போன போக்கில் பாவபழக்கவழக்கங்களில் ஈடுபட்டு, உண்பதும், உறங்குவதும், உடுப்பதையும்தான் முக்கியமாகக்கொண்டு தங்கள் வாழ்க்கையை கெடுத்துக்கொள்கிறார்கள். அப்படியிராமல், உண்மையாகவே அந்திசந்தி மத்தியான வேளைகளில் பக்தன் தாவீதைப்போல், ஓபேத்ஏதோமைப்போல் அவரையே தஞ்சமாக, அடைக்கலமாக பற்றிக்கொண்டு, ஆண்டவருடைய வசனத்தை உண்மையாய் வாசித்து, அவரை கருத்தாய் தேடும்போது, குடும்பமாய் நீதியின் வாழ்க்கை வாழ முடியும். ஓபேத்ஏதோமும், அவன் வீட்டாரும், அவனுக்கு உண்டான எல்லாம் ஆசீர்வதிக்கப் பட்டதுபோல, ஆண்டவர் நம் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்!

ஆண்டவர், நாம் அவர்மேல் வைக்கும் அன்பின் உண்மையை சோதித்து பார்க்கிறவர் (2 கொரி. 8:8)! அவர்தான் தம்முடைய சீடன் பேதுருவைப் பார்த்து,

**"பேதுருவே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?"**

**"நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?"**

**"நீ என்னை நேசிக்கிறாயா?"**

என்று மூன்று முறை கேட்டார் (யோவான் 21:15-17).

அதே ஆண்டவர்தான் அவரை நேசிக்கிறவர்களைப் பார்த்து, "என் மகளே, மகனே, நீ உன் தகப்பனாகிய என்னை நேசிக்கிறாயா?" என்று அன்போடு கேட்கிறார்!

யோபு எல்லாவிதத்திலும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டவனாக இருந்தான். அவனுடைய குடும்பத்திலும், சகல

ஆசீர்வாதங்களும் இருந்தது. ஆனால், அவன் ஆண்டவரிடத்தில் கொண்டிருந்த அன்பின் உண்மை சோதிக்கப்பட்டது. கஷ்டம், சோதனை, வேதனை, இழப்பு, நிந்தை, அவமானம் வந்தபொழுதும், "ஆண்டவர் என்னை கொன்றுபோட்டாலும் அவரே என் நம்பிக்கை; அவரையே நான் பற்றிக்கொள்வேன்" (யோபு 13:15) என்று உறுதியாக ஆண்டவரை விடாமல் பற்றிக்கொண்டான். அவனுடைய மனைவி அவனைப் பார்த்து, "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனைவிடும்" (யோபு 2:9) என்றாள். ஆனால் அவனோ, "தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?" என்று அவரை உறுதியாய் பற்றிப்பிடித்துக் கொண்டு, ஆண்டவரிடம் அந்த நிலைமையிலும் உண்மையாய் அன்பு செலுத்தினான்.

*"இதோ, பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே" (யாக்.5:11)*

என்றே, யோபின் பொறுமையின் மேன்மையை குறித்து வேதம் வர்ணிக்கிறது.

பக்தியுள்ள ஒரு தம்பதியர் திருமணம் ஆனவுடனே ஆண்டவரை தங்கள் இல்லத்தின் தலைவராக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதன்பின் பலவிதமான கஷ்டங்கள் அவர்களுக்கு வந்தன! அவர்களது, குடும்பத்தின் மக்கள் அனைவரும் ஆண்டவரை தேடாதவர்கள்! பல வருடங்கள் இவர்களுக்கு குழந்தை செல்வமே இல்லை. "ஏன் உங்களுக்கு குழந்தையில்லை? பக்தி பக்தி என்று ஆலயத்திற்கு போகிறீர்களே! எப்போதும் வேதம் வாசிக்கிறீர்களே! ஏன் இந்த ஆசீர்வாதம் உங்களுக்கு இல்லாமல் போயிற்று?" என்று உறவினர்கள், ஏனையோர் கேலியும் பரியாசமும் பண்ண ஆரம்பித்தார்கள். ஆனால் இவர்களோ, அந்த நிலைமையிலும், "ஆண்டவரே, நீரே எங்கள் நம்பிக்கை" என்று ஆண்டவரை இறுகப் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் பொறுமையைப் பார்த்த ஆண்டவர் ஏற்ற சமயத்திலே பிள்ளைகளை கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

மட்டுமல்ல, வறுமை அவர்களை வாட்டியது. அந்த வறுமை நிலைமையிலும், "போதும் என்கிற மனதோடு" மனரம்மியமாக,

சந்தோஷமாக ஆண்டவரை பின்பற்றி, அவர் கொடுத்ததை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, முறுமுறுப்பின்றி, அவரிடத்தில் உண்மையான அன்பை செலுத்தி, வாழ்ந்துவந்தார்கள். ஆண்டவர் அதை உற்றுக்கவனித்து அவர்கள் பாடுகள் எல்லாவற்றையும் நீக்கி, ஆசீர்வாதத்தின்மேல் ஆசீர்வாதத்தை குடும்ப வாழ்விலே ஊற்றினார்!

***“அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்”***

*(ரோமர் 8:28).*

நாம் வறுமையில் வாழவேண்டும், வியாதிப்படுக்கையில் வேதனைப்பட வேண்டும் என்பது ஆண்டவரின் விருப்பமல்ல! யோபைப்போல ஆண்டவர்மேல் உறுதியான நம்பிக்கை வைக்கும்பொழுது, உலகம் தரக்கூடாத பூரண சமாதானத்தை அவர் தருவார். ஆகவே, உங்கள் கவலைகளை மறந்து, யோபுவோடுகூட இருந்து, அவனை விடுவித்து, அவன் இழந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய் கொடுத்து, அவனை ஆசீர்வதித்த தேவன் *(யோபு 42:10)*, என்னையும் சோதனையிலிருந்து வெளியே கொண்டு வருவார்; நான் இழந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய் திரும்பத்தந்து என்னையும் ஆசீர்வதிப்பார்” என்று அவரை உறுதியாய் பற்றிப்பிடித்து, அவரிடத்தில் உண்மையான அன்பை செலுத்தும்போது, யோபுக்கு உதவிசெய்த தேவன், நீங்கள் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மேலான ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் குடும்பத்திலே அருளிச்செய்வார். மட்டுமல்ல, அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் *(எபே. 2:22)*.

குடும்ப வாழ்க்கையின் மத்தியிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஓர் உன்னதமான அனுபவத்தைத்தர ஆண்டவர் விரும்புகிறார். “நான் ஒன்றுக்கும் உதவாதவள்; எனக்கு ஞானம் இல்லை. இந்த உலகத்திலே பணம், படிப்பு இருந்தால்தான் உயர்வு பெறமுடியும்; நான் ஒன்றிலும் பிரயோஜனமற்றவளாக இருக்கிறேனே” என்று பலவிதங்களில் நீங்கள் சோர்வுடன் புலம்பிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஆண்டவர், ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக உங்களை மாற்றி *(1 கொரி. 3:16,17)*, உங்கள் உள்ளத்திற்குள் வந்து தங்க விரும்புகிறார். கர்த்தரே அந்த ஆவியானவர் *(2 கொரி. 3:17)*. பரிசுத்த ஆவியானவர் நம்

உள்ளத்திற்குள் வந்து வாசம்பண்ணுகிற வாழ்க்கை எத்தனை உன்னதமானது!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வாழ்ந்தபொழுது, தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருந்தார் (யோவான் 3;34). ஆகவேதான் நன்மை செய்கிறவராய், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித்திரிந்தார்.

நாமும் அதுபோன்றே உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பும்பொழுது (ஏசாயா 32:15; அப்.1:8; லூக்கா 24:49) நம்மையும், நன்மை செய்கிறவர்களாகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் விடுவிக்கிறவர்களாகவும் மாற்றுவார்; பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவை இந்த உலகில் எப்படி உபயோகித்தாரோ, அதேபோல் நம்மையும் தம் நாம மகிமைக்கென்று உபயோகிப்பார்.

**"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்"**

*(நீதி. 4:23)*

என்ற வேதவாக்கின்படியே, நாம் எல்லாக் காவலோடும் நம் இருதயத்தை பரிசுத்தமாக காத்துக்கொள்வோமானால், பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்திலே வந்து வாசம்பண்ணுவார். அவர் வந்து தங்கும்பொழுது, கிறிஸ்துவின் அன்பு நம் தனிப்பட்ட வாழ்வின்மூலமாக, குடும்பத்தின்மூலமாக பிரவாகித்து ஓடும் (யோவான் 7:38). வேதனையில், பிசாசின் பிடியில சிக்கித் தவிக்கும் மக்களை இந்த அன்பின் அனுபவத்திற்குள் வழிநடத்த பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்வார். ஆகவே, உங்கள் உள்ளத்தைத் திறந்து, "ஆண்டவரே, என்னையும் உம்மைப்போல் மறுரூபப்படுத்தும்; என் உள்ளத்தை, இல்லத்தை உம்மால் நிரப்பும்" என்று கெஞ்சுங்கள். அவர் உங்கள் உள்ளத்திற்குள், இல்லத்திற்குள் பிரவேசிப்பார்; உங்கள் குடும்ப வாழ்வில் தேவாசீர்வாதம் நிரம்பி வழியும்; வாழ்வு செழிக்கும்; உங்கள்மூலம் மற்றவர்கள் வாழ்விலும் தேவாசீர்வாதம் பாய்ந்துசெல்லும்!

# 4. இயேசுவோடு இணைந்த குடும்பம்!

*- சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்*

திருமண வாழ்க்கையில் பிரவேசிக்கும் ஒவ்வொரு நபரும் - கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும் இறைவன் அருளும் ஓர் ஈவு எனும் உண்மையை அறிந்து கொள்ளவேண்டும்! ஆனாலும், ஆண்டவரின் ஊழியம் செய்வதற்காக திருமணம் செய்யாமல் இருப்பது தெய்வீக வரம். அந்த வரம் எல்லோருக்கும் உரியதல்ல; திருமணமாகாமலேயே இருந்து ஆண்டவரின் ஊழியத்தை செய்வதற்கு, ஓர் ஆண் அல்லது பெண் விசேஷித்த வரத்தை பெற்றிருக்கவேண்டும் *(மத். 19:11)*. எனினும்,

***"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் ... ஒண்டியாயிருப்பவனைத் தூக்கிவிட துணையில்லையே"***

*(பிர. 4:9-10)*

என்றே வேதம் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில், நம்முடைய முற்பிதாக்களைப்பற்றி வேதம் பின்வருமாறு நற்சாட்சி பகருகின்றது:

***"ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார்..."*** *(யாத். 33:11)*

***" ... ஆபிரகாம், தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்"***

*(யாக். 2:23)*

***" ... தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாக கண்டேன்"***

*(அப். 13:22)*

***"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான் ..."***

*(ஆதி. 5:24)*

***"... நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்"***

*(ஆதி. 6:9).*

ஆம்! நம் முற்பிதாக்களாகிய இந்த பக்தர்களெல்லாரும், குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தபொழுதுதான், தேவனோடும் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். ஏனோக்கு தன் வாழ்க்கையில், காணக்கூடாத, அதரிசனமான தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தும், குடும்ப வாழ்க்கை வாழ்ந்து,

குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான் (ஆதி. 5:22). ஆகவே, குடும்ப வாழ்க்கையானது, தேவனோடு சஞ்சரிப்பதற்கு ஒருநாளும் தடையாயிருப்பதில்லை.

**புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர்களைப்பற்றி பவுலடிகள் பின்வருமாறு கூறுகிறார்:**

*"மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியை கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா?"*

*(1 கொரி. 9:5).*

*ஆண்டவர் இயேசுவின் சீடனாகிய பேதுரு தன் மனைவியோடு குடும்ப வாழ்க்கை வாழ்ந்தபோதிலும், அவன் வாழ்விலும் தேவ வல்லமை நிறைவாய் காணப்பட்டது. "பிணியாளிகளை படுக்கைகளின்மேலும், கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்" (அப். 5:15,16). தேவனோடு சஞ்சரிக்க, தேவ வல்லமை அவன்மூலம் வெளிப்பட, அவனது குடும்ப வாழ்க்கை ஒருநாளும் தடையாயிருக்கவில்லை. பவுல் அப்போஸ்தலன் மட்டுமே குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல், ஊழியம் செய்யும் தெய்வீக வரத்தை பெற்றிருந்தார்.*

நான் ஒரு வங்கியில் உயர் பதவியில் இருந்துகொண்டுதான், ஆண்டவருடைய ஊழியத்தை செய்துவந்தேன். காலை 6 மணிக்கு குடும்ப ஜெபத்தில் ஈடுபடுவேன். அதன்பிறகு, 6.30 மணியிலிருந்து 8.30 மணிவரை தனியாக அமர்ந்து வேதத்தை வாசித்து, கருத்தாய் ஜெபம் செய்வேன். என்னுடைய குடும்ப வாழ்க்கையை, நான் ஒரு பெரிய மாளிகையில் ஆரம்பிக்கவில்லை; ஒரே ஒரு அறைகொண்ட வீட்டில்தான் ஆரம்பித்தேன். அந்த அறையில்தான் படுக்கவேண்டும், மற்ற எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும், வேதம் வாசித்து ஜெபிக்கவும் வேண்டும். அந்த நேரத்தில் என் மனைவி, பிள்ளைகள் அதே அறைக்குள் ஏதாவது பொருட்களை எடுக்க வருவார்கள்; போவார்கள். ஆனால் நானோ, அமைதியாக படுக்கையின்மேல் அமர்ந்து வேதத்தை வாசித்து ஜெபித்துக்கொண்டிருப்பேன். பரிசுத்த ஆவியானவர் என்மேல் இறங்கி வருவார். ஆண்டவருடைய பிரசன்னத்தில் மெய்மறந்து விடுவேன். அதன்பிறகு அலுவலகத்திற்கு போகுமுன்பதாக,

காலை 9 மணியிலிருந்து 9.30 மணி வரை என்னுடைய ஜெபத்தை நாடி வருகிற மக்களுக்காக பிரார்த்தனை செய்துவிட்டு, சரியாக காலை 10 மணிக்கு அலுவலகத்திலிருப்பேன். அலுவலக நேரத்தில் இயேசுவைப்பற்றி பேசவேமாட்டேன். அலுவலக வேலையை முடித்துவிட்டு மாலையில் வீட்டிற்கு வரும் பொழுதோ, வீட்டில் பலர் ஜெபத்திற்காக காத்திருப்பார்கள். அவர்களை தனித்தனியே சந்தித்து, விசாரித்து, ஜெபித்து அனுப்பியபின், என் மனைவி பிள்ளைகளோடு சிறிது நேரத்தை கழித்து, இரவு குடும்ப ஜெபத்தை முடித்துவிட்டு, அவர்கள் படுக்கைக்கு சென்றபின், இரவு 10 மணி முதல் 12 மணிவரை முழங்காற்படியிட்டு, ஆண்டவரை நோக்கிக் கதறுவேன். பெரிய நற்செய்தி கூட்டங்களுக்கு செல்லுமுன்பதாக, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனியாக ஓர் இடத்திற்கு சென்று, உபவாசம்பண்ணி பிரார்த்தனை செய்வேன். ஜெபத்தை முடித்தபின், என் மனைவி, பிள்ளைகளையும் அங்கு வரச்சொல்லி, அவர்களோடு சந்தோஷ மாக சாப்பிட்டுவிட்டு வீடு திரும்புவேன். இப்படித்தான் என் குடும்ப வாழ்க்கையோடு, என் ஆன்மீக வாழ்க்கையையும் காத்து வந்திருக்கிறேன்.

அன்பு மகள் ஏஞ்சலை, கொடிய கார் விபத்தில் இழந்தபிறகு, "இயேசுவின் அன்பைப்பற்றி நான் எப்படிப் பேசுவது? ஜனங்கள் எப்படி என்னை நம்புவார்கள்? ஆகவே, இனிமேல் பிரசங்கமே செய்யமாட்டேன்." என்று புலம்பிக்கொண்டிருந்தபொழுது, என் மனைவி, "எனக்கும் கஷ்டமாகத்தானிருக்கிறது. இருந்தாலும், என்ன செய்வது? நம்மை அழைத்த இயேசுவைவிட்டு ஓடிவிட முடியுமா? இன்னும் அவரையே பற்றிக்கொள்வோம்" என்று என்னை ஆற்றித்தேற்றினாள்; ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படி ஊக்குவித்தாள்.

"மனமுண்டானால் மார்க்கமுண்டு" என்பதுபோல, என்ன வந்தாலும் சரி, "இயேசுவோடு நடப்பதில் மட்டும், ஒரு பழுதும் ஏற்படவேகூடாது" என்று உள்ளத்தில் தீர்மானித்தால், கட்டாயம் அதை நிறைவேற்ற முடியும். ஆகவே, ஆன்மீக வாழ்க்கைக்கு, ஊழியத்திற்கு, குடும்ப சூழ்நிலையோ, அலுவலக பணியோ, எதுவாயினும், தடையாயிருக்கவேண்டிய அவசியமில்லை.

மறுபக்கம், ஒரு நல்ல மனைவி கிடைத்துவிட்டால், குடும்ப வாழ்வில் அதைவிட பாக்கியம் இந்த உலகில் வேறு ஏதும் இராது. ஆம், குடும்ப வாழ்க்கை இனிமையானது! அது ஆன்மீக

வாழ்க்கைக்கு உறுதுணையானது! ஆண்டவர் கொடுத்த ஈவுதான் குடும்ப வாழ்வு!

**சரியான வாழ்க்கைத் துணையை எவ்வாறு தெரிந்துகொள்வது?**

## தேவசித்தம்!

வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில், முழுநம்பிக்கையையும் ஆண்டவர்மீது வைத்தல் அவசியம்!

**“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?”** *(மத். 7:11)*

**“தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங் கேட்டால், அவனுக்கு கல்லை கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்கு பதிலாய் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்கு தேளைக் கொடுப்பானா?”** *(லூக். 11:11,12)*

என்று ஆண்டவர் இயேசு வாக்கருளியுள்ளாரே! ஆகவே, திருமணமாகாத இளைஞர், “ஆண்டவரே, உம்மை நேசிக்கிற, எனக்கு ஏற்ற ஒரு வாழ்க்கைத் துணையைத் தாரும்” என்று கண்ணீரோடு வேண்டுதல் செய்வதில், இதற்காக அவர்மீது நம்பிக்கை வைப்பதில் தவறில்லை.

**“... நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்”** *(2 தீமோ. 1:12)*

என்று பவுலடிகள் கூறினதுபோல், ஆண்டவருக்கு இருதயத்தை கொடுத்திருக்கிற ஒவ்வொருவரும், குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற துணைக்காகவும் அவரையே நம்பும்பொழுது, அவர் ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்து, குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதிப்பார்!

## பெற்றோர் விருப்பம்!

**“... உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக”** *(எபே. 6:1-3)!*

*வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் பெற்றோரின் ஆலோசனையை நாடுவதும் நல்லது! சில குடும்பங்களில் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் பிரச்சினை எழுவது உண்டு. காரணம், மகன் அல்லது மகள் இயேசுவுக்கு தன் உள்ளத்தை கொடுத்திருப்பார்கள். பெற்றோரோ, ஆண்டவரை சற்றும் அறிந்திருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட குடும்பத்தின் பிள்ளைகளுக்குத்தான் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் பாடு, சஞ்சலம் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களும், "ஆண்டவரே, என் பெற்றோருக்கும் ஏற்ற சரியான மணமகனை/ மணமகளை தெரிந்தெடுத்து கொடுக்கும்படி நீர் உதவிசெய்யும்" என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.*

ஒரு வாலிபப் பெண் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அருள்நாதர் இயேசுவுக்கு, தன் இருதயத்தை பறிகொடுத்தாள். அவளுடைய பெற்றோர், இயேசுநாதரை குறித்து சற்றும் அறியாதவர்கள்! படித்து முடிக்கு மட்டும் அவள் ஒரு சுதந்திர பறவையாக இயேசுவோடு வாழ்ந்து வந்தாள். படித்து முடித்ததும், அவளுக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது! நாட்கள் கடந்தன! ஒரு நாள் பெற்றோரிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. "மகளே, நீ படிப்பை முடித்து நல்ல வேலையில் இருக்கிறாய். இப்பொழுது நாங்கள் உனக்கு திருமணத்தை ஒழுங்கு செய்திருக்கிறோம்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அவளது உள்ளத்தில், '"ஐயோ, என் பெற்றோர் குடிவெறி, சிகரெட், சினிமா என்று அலையும் ஒருவரை கணவராக நியமித்திருப்பார்களோ?" என கலங்கித் தவித்தாள். ஆனாலும், பெற்றோர் விருப்பப்படியே, அவள் அந்த திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தாள். திருமணம் முடிந்தது! முதல் முறையாக மிகுந்த நடுக்கத்துடன் தன் கணவரை சந்தித்தபோது, அவரிடம், "நீங்கள் இயேசுநாதரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?". என்று கேட்டாள். உடன்தானே, அந்த வாலிபன் மிகுந்த பரவசத்தோடு, "இயேசுநாதரைப் பற்றி உனக்கும் தெரியுமா? நான்தான் இரகசியமாக அவரை என் உள்ளத்தில் வைத்திருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அவருக்கு நீயும் உன் உள்ளத்தில் இடம் கொடுத்திருக்கிறாயா?" என்று ஆனந்தக்கூச்சலிட்டான். இருவரும் தங்களுக்குள் இரகசியமாக வைத்திருந்த இயேசுநாதரை குறித்து, ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு ஆனந்தமடைந்தார்கள்.

இருவர் உள்ளத்திலும், ஒருவரைப்பற்றி ஒருவர் கொண்டிருந்த அச்சம் நீங்கி, ஆனந்தம் பொங்கியது!

*"தேவனாகிய கர்த்தர் ... உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்"* *(சங். 84:11)*

ஆகவே, உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு, ஏற்ற வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்கும்படி அருள்புரிவார்.

*"....உன் நம்பிக்கை வீண்போகாது"* *(நீதி. 23:18)*

வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் ஆண்டவர் இயேசுவை முழுவதுமாய் நம்பி, பெற்றோர் விருப்பப்படி தெரிந்துகொள்ளும் மணமகனை/மணமகளை ஏற்று திருமணம் செய்து கொள்வது, ஆசீர்வாதமாய் அமையும்!

## இருதயத்தின் விருப்பம்!

வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில், இன்னொரு காரியத்தையும் கையாளலாம்.

*"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."*

*(சங். 37:4,5)*

ஒருவேளை உங்கள் உள்ளத்தில், "எனக்கு வரும் மணமகன்/மணமகள் மிகவும் அழகாக, உயரமாக இருக்கவேண்டும்" என்ற விருப்பம் இருக்குமானால், அதையும் ஆண்டவரிடமே சொல்லி விடுவது நல்லது.

மகன் பால் தினகரனுக்கு நாங்கள் வாழ்க்கைத் துணையை தேட முற்பட்டபோது, அவன் ஆறு அடி உயரம் இருப்பதினால், தனக்கு வரும் மனைவி கடவுள் பக்தியோடுகூட, வளர்த்தியில் 5½ அடியாவது உயரம் இருக்கவேண்டும் என்று விரும்பினான். ஆகவே, அவ்வாறே, இதுகுறித்து கருத்தாய் பிரார்த்தனை செய்துவந்தோம். ஆண்டவர் அவனுடைய விருப்பப்படியே, 5 அடி 7 அங்குலம் உள்ள, ஒரு குணசாலியான பெண்ணை அவனுக்கு வாழ்க்கைத் துணையாக கொடுத்தார்.

ஆகவே, விருப்பங்களை ஆண்டவரிடம் சொல்வதில் தவறேதுமில்லை. ஆனால், இந்த பெண்தான் வேண்டும், அந்த வாலிபன் தான் வேண்டும் என்று பிடிவாதம்கொள்வது நல்லதல்ல! ஒருவேளை

*அவ்வாறு பிடிவாதமாய் வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்கி, நாடுகிற மணமகனை/மணமகளை அடைந்து விடலாம். ஆனால், அவர்களின் இருதயத்தின் ஆழத்தை அறிகிறவர் ஆண்டவர் ஒருவரே!*

ஒரு தாதி குறிப்பிட்ட ஒரு வாலிபனையே திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம்கொண்டாள். அவளது ஆலய போதகர் அவளைப் பார்த்து, "மகளே, நான் அந்த வாலிபனைக் குறித்து நன்றாக விசாரித்துவிட்டேன். ஒருவரும் அவனைக் குறித்து நற்சாட்சி கொடுக்கவில்லை" என்றார். ஆனால் அவளோ, "பாஸ்டர், எனக்கு அவரது நடை உடை பாவனைகளெல்லாம் நன்றாக பிடித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கணவர்தான் எனக்கு வேண்டும்" என்றாள். போதகர் வேறுவழியின்றி, அவளை அப்படியே விட்டுவிட்டார். அந்த திருமணமும் நடந்தது. ஒரே மாதத்திற்குள் அவள் அதே போதகரிடம் கண்ணீரோடு ஓடி வந்து, "ஐயா, என் கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து, என்னை உதைக்கிறார், அவரது தொல்லையை என்னால் தாங்கவே முடியவில்லை; தயவுசெய்து என்னை காப்பாற்றுங்கள் " என்று கதறினாள்.

*மணமகன்/மணமகளின் வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்கி, பிடிவாதமாய் இல்வாழ்வை அமைத்துக்கொள்பவர்களுக்கு இது ஓர் எச்சரிப்பாய் இருக்கட்டும்.*

*திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் வாலிப பிள்ளைகள், முதலாவது ஆண்டவரை நம்பவேண்டும், இரண்டாவது பெற்றோரை நம்பவேண்டும், மூன்றாவது, எப்படிப்பட்ட மணமகன்/மணமகள் வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தை ஆண்டவரிடம் சொல்லவேண்டும். நான்காவது, ஆண்டவர் கொடுக்கும் வாழ்க்கைத் துணையை, அவர் கொடுக்கும் ஓர் ஈவாக எண்ணி, அந்த வாழ்க்கைத் துணை (மணமகன்/மணமகள்) மீது முழுஅன்பையும் செலுத்தவேண்டும்! அப்பொழுது குடும்ப வாழ்வு இன்பமானதாக இருக்கும்.*

# 5. எங்கள் குடும்ப வாழ்வு!

*- சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்*

*"... நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்"* *(2 கொரி. 6:16).*

## விவாகம்!

ஒரு நாள் மாலை வழக்கம்போல் என் வங்கி அலுவலக வேலை முடிந்து நான் வீடு திரும்பினேன். அப்பொழுது என் தந்தை என்னை அழைத்து, "என் மகனே, உனக்கு வயது 24; உனக்கு இப்பொழுது திருமணம் முடிப்பது என் கடமை. இதைக் குறித்து நீ என்ன சொல்கிறாய்?" என வினவினார். அதுவரைக்கும் திருமணத்தை குறித்து சற்றும் எண்ணிப்பாராமல் இருந்த எனக்கு, இந்த கேள்வி பேரதிர்ச்சியை விளைவித்தது. மெல்ல சமாளித்துக்கொண்டு, பின்வருமாறு பதிலளித்தேன்:

"அப்பா, நீங்களும் அம்மாவும் தெரிந்துகொள்ளும் எந்த பெண்ணையும் நான் விவாகம் செய்துகொள்ள ஆயத்தமாயிருக்கிறேன். என்றாலும், அந்த பெண்ணிடமும், அந்த பெண்ணின் பெற்றோரிடமும் கீழ்க்கண்ட மூன்று காரியங்களை நீங்கள் தெரிவிப்பதோடு, அவற்றிற்கு அந்த பெண்ணினுடைய முழு சம்மதத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும்".

*1. நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு என் உள்ளத்தை பறிகொடுத்துவிட்டேன். எனவே, இனிமேல் உலகப்பிரகாரமான எந்த காரியங்களுக்கும் ஒருநாளும் இடம் கொடுக்கவேமாட்டேன்.*

*2. என்னுடைய அலுவலக வேலை நேரம்போக மற்ற நேரத்தையெல்லாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை அறியாத மக்களுக்காகவே செலவிடுவேன்.*

*3. நான் ஒரு வங்கி குமஸ்தா; என் ஊதியம் குறைவு. இந்த ஊதியத்திற்குள் குடும்பத்தை நடத்த மணமகள் சம்மதிக்க வேண்டும்.*

என் தகப்பனாரும், நான் சொன்ன வார்த்தைகளை அப்படியே பெரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். அநேக மாதங்களுக்குப்பிறகு என் மனைவி ஸ்டெல்லா எனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியாய் இருப்பாள் எனக்கருதி தெரிந்தெடுத்தார்.

என் மனைவியோ மிகவும் செல்லமாய் வளர்க்கப்பட்டவள்! அவளுடைய பெற்றோரும், மூத்த இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் அவள்மீது அளவில்லாத அன்பு வைத்து எல்லா விதத்திலும் அவளுக்கு ஒரு குறைவும் இல்லாமல் நடத்தி வந்தனர். என் தகப்பனாரோ ஓர் ஏழை ஆசிரியர். நான் அவருடைய ஒரே மகன்! எனவே, இறுதியாக முடிவு எடுப்பதற்கு முன்பதாக ஆண்டவருடைய திட்டமான வெளிப்படுத்துதலை நாடி பல நாட்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டார். ஒரு நாள் இரவு கனவு ஒன்றில், சிறியதாக நடப்பட்ட ஒரு செடி வேரூன்றி வளர்ந்து கிளைகள் படர, கனிகள் பழுத்து குலுங்கக்கண்டார். அதே சமயம், சுமார் 300 மைல்களுக்கு அப்பாலிருந்த என் தாயாரின் தகப்பனாரும் அதேவிதமான கனவு ஒன்றினைக் கண்டு, இந்த பெண்தான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவள் என்று உறுதி அளித்து, செய்தி ஒன்றினை அனுப்பியிருந்தார். எனவே, என் தகப்பனார் முழுமனதுடன், எங்கள் திருமணத்திற்கான ஏற்பாடு களை முழுமூச்சோடு செய்ய தொடங்கினார்.

## திருமண நாள்!

17.8.'59 அன்று, கடலூர் பழைய பட்டிணம் (தமிழ்நாடு) என்ற சிற்றூரிலுள்ள தேவாலயத்தில் எங்கள் திருமணம் எளிதான முறையில் நடந்தேறியது. எல்லா வைபவங்களும், விருந்தும் முடிந்து, நானும் என் மனைவியும் புதுமணத்தம்பதிகளாக இரவு 12 மணிக்கு எங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த அறைக்கு திரும்பினோம். அப்பொழுது என் மனைவி என்னிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான்:

"எனக்கு திருமணம் செய்யவேண்டும் என என் பெற்றோர் விரும்பி சரியான வரன்களை தேட ஆரம்பித்தபொழுது, என் உள்ளத்தில் ஓர் இனம் தெரியாத திகில் பிடித்தது. என்னையுமறியாமல், 'ஆண்டவரே, குடிவெறி, சூதாட்டம், விபச்சாரம் போன்ற எந்த கெட்டபழக்கவழக்கமும் இல்லாத ஒரு பக்தியுள்ள கணவனை எனக்கு தாரும்' என்று ஒவ்வொருநாளும் கண்ணீருடன் வேண்டிவந்தேன். அந்நிலையில் நீங்கள் எனக்கு கணவராக அமையப்போவதை அறிந்த எல்லோரும், உங்களை 'நல்லவர்' என்று சொன்னபோது, எனக்கு பெரிய ஆறுதலாய் இருந்தது. அப்படி உங்களை எல்லோரும் நல்லவர் என்று கூற காரண மென்ன?" ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி என்

மனைவியுடன் பேச ஏற்ற தருணத்தை நாடி துடித்துக் கொண்டிருந்த எனக்கு, இந்த கேள்வி “பழம் நழுவி பாலில் விழுந்தாற்போல” ஆயிற்று. நான் எவ்வாறு வாழ்க்கையில் மனநிம்மதியை தேடி, வேலையை தேடி அலைந்தேன், படிப்பில் வெற்றியடைய அரும்பாடுபட்டேன், எவ்வாறு மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ள தீர்மானித்தேன், இறுதியில் சிலுவையில் தொங்கி மரித்த இயேசுவை எவ்விதம் கண்டுகொண்டேன்? அவரிடமிருந்து இந்த நல்லாசிகள் எனக்கு எப்படி கிடைத்தன? அதன்மூலம் என் வாழ்வு எப்படி மனஅமைதி நிறைந்ததாய், தூய்மை நிறைந்ததாய் மாறியது? என சுமார் 2 மணி நேரம் விவரித்து சொன்னேன். இதைக்கேட்ட என் மனைவியின் உள்ளம் உருகியது. தன்னையுமறியாமல் முழங்காலில் நின்று, ஆண்டவரிடம் தனக்கும் இதே அனுபவம் வேண்டுமெனவும், தன் வாழ்வின் குறைகள், பாவங்கள் நீங்கவேண்டுமெனவும், தனக்கு புதிய இருதயம் அருளப்படவேண்டுமெனவும் கண்ணீரோடு கதறினாள். ஆண்டவரும் அவளுடைய வேண்டுதலுக்கு செவிகொடுத்தார். உலகம் தரக்கூடாத, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் அவள் உள்ளத்தை நிரப்பியது. அவளுடைய பூரிப்பைக் கண்டு நானும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துபோனேன். இப்படித்தான் எங்கள் மணவாழ்வின் முதல்நாள் ஆரம்பமானது! ஆம், ஆண்டவர் எங்களை ஆலயத்தில் நடந்த ‘திருமணம்’ எனும் சடங்கில் மட்டுமல்ல, எங்கள் இதயங்களையும் பூரணமான தம் அன்பினால் இணைத்தார்!

## எல்லா மனுஷருக்கும் நேரிடுகிற சோதனை!

*“மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்”*

*(1 கொரி. 10:13)*

*என்ற வேதவாக்கின்படி, எங்கள் வாழ்விலும் சோதனைகள் நுழைய ஆரம்பித்தன!*

திருமணமாகி சில மாதங்களுக்குள் என் மனைவி ஒரு கருச்சிதைவை சந்திக்க வேண்டிவந்தது. அடுத்து 1.4.1961

அன்று, தன் முதல் ஆண் குழந்தையை வயிற்றிலேயே கொடிய மரணத்தின் கையில் பறிகொடுக்க வேண்டிவந்தது. இறந்த ஆண் குழந்தையை கையில் ஏந்தி இடுகாடு நோக்கி என் மைத்துனர் நடந்தார். கடைசி முறையாக குழந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தேன். அந்த முகத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தெய்வீக சமாதானமும், புன்சிரிப்பும் நிறைந்திருக்கக்கண்டு திடுக்கிட்டேன். என்னையுமறியாமல் நான் அந்த குழந்தையை பார்த்து பின்வருமாறு சொன்னேன்:

*"என் அன்பு மகனே! நீ, எங்கள் எல்லோருக்கும் முன்பதாக ஆண்டவரிடம் சென்றுவிட்டாய். உன் தகப்பனாராகிய நான் இந்த உலகில் வாழும் எஞ்சிய வருடங்களெல்லாம் ஆண்டவருக்கு முன்பதாக பயபக்தியோடும், பரிசுத்தமாயும் வாழ்வேன். பின்பு மோட்சத்தில் வந்து உன்னை மறுபடியும் முகமுகமாய் சந்திப்பேன்."*

"இனி தனக்கு குழந்தை பிறக்காதோ" என்ற மன ஐயத்தினாலும், பயத்தினாலும் நிறைந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருந்த என் மனைவிக்கு வேத வசனங்களிலுள்ள வாக்குத்தத்தங்களை எடுத்துக்கூறி, ஆறுதல்படுத்தி வந்தேன். ஆண்டவர் மனமிரங்கினார்! மறுபடியும் அவளுடைய கர்ப்பத்தில் ஒரு குழந்தையை அருளிச்செய்தார். "ஆண்டவரே, நீர் ஓர் ஆண் குழந்தையை என்னிடமிருந்து எடுத்துக்கொண்டீர். எனவே, எனக்கு பிறக்கப் போவது ஆண் குழந்தையாகவே இருக்கவேண்டும்" என அன்றுமுதல் உபவாசம் செய்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். ஒரு நாள் வேதத்தை புரட்டிக்கொண்டிருந்தபொழுது, இறைவனுடைய விரல்களே எனக்கு காண்பித்ததுபோல கீழ்க்கண்ட வேதவசனங்கள் தோன்றின.

*" ... இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை; இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை. அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளை தன் நடுவிலே காணும்போது, என் நாமத்தை பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்கு பயப்படுவார்கள்" (ஏசாயா 29:22,23).*

இந்த வசனங்கள் எல்லையில்லா ஆறுதலையும், விசுவாசத்தையும் எனக்குள் கொண்டு வந்தன! அந்த வசனங்களில் கூறப்பட்டுள்ளபடியே, என் மகன் பால் தினகரன் 4.9.'62 அன்று பிறந்தான். அதைத் தொடர்ந்து 4.11.68 அன்று எங்கள் அன்பு

மகள் "இவாஞ்சலின்" (ஏஞ்சல்) பிறந்தாள். அந்த வேத வார்த்தைகள் அப்படியே எங்கள் குடும்ப வாழ்வில் நிறைவேறின! எங்கள் முகங்கள் பிரகாசமடைந்தன! எங்கள் இல்லற வாழ்வில், எங்கள் பெற்றோரின் வாழ்வில் மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓடிற்று!

## மிஞ்சின நீதிமான் கண்ட பண நெருக்கடி!

*"மிஞ்சின நீதிமானாயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்"*

*(பிர. 7:16)*

என்ற வேதவாக்கின்படி, என் இல்லற வாழ்வின் இன்பத்தை நானே கெடுத்துக்கொண்டேன். என் மகன் பால் பிறந்த சில மாதங்களுக்குள் வங்கியில் குமஸ்தாவாக பணிபுரிந்த எனக்கு உயர் அதிகாரியாக பதவி உயர்வு கிடைத்து, ஊதியமும் உயர்ந்தது. இதனால் என் பெற்றோரைவிட்டு பல மாநிலங்களுக்கு வேலையினிமித்தம் செல்ல நேரிட்டது. இந்த புதிய இடங்களிலெல்லாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பைப்பற்றி பிரசங்கிக்க எனக்கு வாய்ப்புகள் கிடைத்தன. எனவே, அதில் முழுமூச்சுடன் இறங்கினேன். என்னை ஊழியத்திற்கென்று அழைப்பவர்கள் பெரும்பாலும் ஏழை ஊழியர்களே! எனவே, நான் என் பிரயாண செலவுக்காக அல்லது அன்பளிப்பாக அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கமாட்டேன். "நான் ஓர் உயர் அதிகாரி, அதிக சம்பளம் பெறுபவன்; எனவே, ஏழை ஊழியர்களை கஷ்டப்படுத்தக்கூடாது" என்ற எண்ணம் எனக்கு! இந்த வீண் பெருமையினால் (பிலி. 2:3) நான் வாங்கின மாத ஊதியத்தின் பெரும்பகுதி பல ஊர்களுக்கும் சென்று பிரசங்கிப்பதற்கென்றே செலவாயிற்று. வீட்டு செலவுக்கு எஞ்சிய தொகை மிகக்குறைவு. இதுபோக வீடு தேடிவரும் ஊழியர்களுக்கும் நான் தாராளமாக காணிக்கை கொடுப்பேன். சில ஊழியர்கள் எங்கள் வீட்டிலேயே பல நாட்கள் தங்கிவிடுவார்கள். அவர்களுக்கும் என் மனைவி முகங்கோணாமல் சமைத்துப்போடுவாள். சில ஊழியர்கள் நடு இரவில் வந்து கதவைத் தட்டுவார்கள். தனக்கென்று எடுத்து வைத்திருக்கும் உணவை அவர்களுக்கு கொடுத்துவிட்டு, வெறும் தண்ணீரை மாத்திரம் அருந்திவிட்டு, படுக்கைக்கு சென்றுவிடுவாள். இது ஒருபுறம், மறுபுறம் வீட்டில் எல்லா விதத்திலும் ஒரே தட்டுப்பாடு. எனக்கு வெளியே போட்டுக் கொண்டு செல்வதற்கென இருந்தது நான்கே உடைகள்தான்! இவைகளின் மடிப்புகள் கிழிந்துபோயிருக்கும். என் மனைவியே

தைத்து, துவைத்து இஸ்திரி போட்டுக்கொடுப்பாள். திருமணம் ஆகி பல ஆண்டுகள் நான் என் மனைவிக்கு ஒரு புடவைகூட வாங்கிக்கொடுத்ததில்லை. என்னுடைய வீண் பெருமையினி மித்தம் வந்த இந்த அல்லல்களையெல்லாம் என் மனைவி பொறுமையோடு சகித்துக்கொள்வாள். ஒரு நாள் அவளுடைய செருப்பு கிழிந்துபோயிற்று. அதைப்பற்றி அவள் என்னிடம் சொல்லாமல், தேய்ந்துபோன கார் டயர்களை பயன்படுத்தி ரஸ்தா ஓரத்தில் தைத்து விற்கப்படும் மலிவான செருப்பு ஒன்றினை வாங்கிக்கொண்டாள். எங்கள் அன்பு மகன் பால் தினகரன் பிறந்த நாளைக்கொண்டாட பணமின்றி, எங்கள் இரு பெற்றோர்களும் அனுப்பும் வெகுமதிகளுக்காகவே காத்திருப்பாள். எனினும்,

*" ... அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக" (சங். 85:8)*

என்ற வாக்கின்படி, ஆண்டவர் என்மேல் மனமிரங்கினார். என்னுடைய வீண் பெருமையை மன்னித்தார்.

1968-வது ஆண்டு கேரளா மாநிலத்திலுள்ள ஆலப்புழை என்ற நகரில் நான் பணிபுரிய சென்றபோது, ஆண்டவர் எங்களோடு முகமுகமாய் பின்வருமாறு பேசினார்:

"என் அன்பு பிள்ளைகளே, கொடிய தரித்திரத்தின் மத்தியில் கடந்துசென்றபொழுதும், நீங்கள் என்னை மறுதலியாமல் பின்பற்றி வந்தீர்கள். எனவே, இந்த தரித்திரத்தை நிரந்தரமாய் நான் உங்களைவிட்டு நீக்கிப்போடுவேன். இனி வாழ்நாள் முழுவதும் தரித்திரம் உங்களை தொடுவதில்லை." அவர் அவ்வாறே இன்றுவரை எங்களை தரித்திரத்திற்கு விலக்கிக் காத்துவருகிறார். இவ்வாறு 'வீண் பெருமை, மிஞ்சின நீதி' ஆகிய பாவங்களைக்கூட மன்னிப்பதற்கு ஆண்டவர் தயை பெருத்திருக்கிறார்.

## ஊழியத்தில் ஈடுபாடு!

10.10.'62 அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்கு 3 மணி நேரம் முகமுகமாய் தரிசனமாகி, என்னை தம்முடைய பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பினார். பிரசவத்திற்காக தன் பெற்றோர் வீட்டிலிருந்த என் மனைவி, இந்த செய்தியை கேட்டு ஆனந்தமடைந்தாள். தனக்கும் பரிசுத்த ஆவியானவருடைய நிறைவுவேண்டும் என்று ஆண்டவரிடம் மன்றாட தொடங்கினாள். அவள் குழந்தையோடு 7.2.'63 அன்று எங்கள் வீட்டிற்கு

வந்தபிறகு, முழுமூச்சுடன் ஜெபிக்க ஆரம்பித்தாள். 12.2.'63 அன்று அவளிடம் இயேசு பின்வருமாறு பேசினார்:

"என் அன்பு மகளே, உன் அன்பு கணவனை மோசேயைப்போல என் கையில் எடுத்து வல்லமையான பாத்திரமாய் பயன்படுத்த போகிறேன்; நீ அதற்கு குறுக்கே நிற்பாயா? அல்லது உதவியாய் இருப்பாயா?" உடன்தானே என் மனைவி சற்றும் தயங்காமல், "ஆண்டவரே, நான் ஒரு நாளும், நீர் உமது மகனை பயன் படுத்துவதற்கு குறுக்கே நிற்கவேமாட்டேன். நீர், அதற்கான கிருபையை எனக்கு தாரும்" என்று பலத்த குரலுடன் பதில் கொடுத்தாள். மறுகணம் ஆண்டவர், அப்படியானால், "உன்னை யும் வெகுவிரையில் என் ஆவியினால் நிரப்புவேன்" என வாக்கருளினார். அவ்வாறே 14.2.'63 அன்று இயற்கைக்கப் பாற்பட்ட விதத்தில், அவளையும் தம் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். இந்த உன்னத அனுபவத்தினால் ஊழியப்பாதையிலும் எங்கள் இதயங்கள் ஒன்றாய் இணைந்தன! அன்றுமுதல் இன்றுவரை மிக எளிதில் இடர்களை கண்டு சோர்ந்துபோகும் எனக்கு, பெரும் பக்கபலமாய் அவள் விளங்கி வருகிறாள். அவள் ஜெபத்துடன் கொடுக்கும் ஆலோசனைகள் என் உள்ளத்திற்கு புதுபெலன் தரும்.

நான் ஊழியத்திற்காக பல ஊர்களுக்கு செல்லும்பொழுது, என் மனைவியையும், இரண்டு குழந்தைகளையும் அழைத்து செல்வதுண்டு. அப்பொழுதெல்லாம் யாராவது ஒருவருடைய வீட்டில் எங்களை தங்கவைத்துவிடுவார்கள். சில வீடுகளில் எனக்கு மட்டும் படுக்க கட்டில் கொடுப்பார்கள்; என் மனைவியும், பிள்ளைகளும் தரையில் ஒரு சமுக்காளமோ, பாயோ விரித்து படுத்துக்கொள்ளவேண்டும். சாப்பாட்டு வேளையில் எனக்கு பலவித சிறப்பு உணவுவகைகளை கொடுப்பார்கள். என் மனைவி, பிள்ளைகளையோ "சாப்பிடுங்கள்" என்று கூட சொல்ல மாட்டார்கள். ஊழியத்தினிமித்தமாக அதிகமாக என் உடல் பழுதுபட்டபிறகுதான் மக்கள் இன்று எங்களை நல்ல வசதியுள்ள வீடுகளில், உணவு விடுதிகளில் தங்க வைக்கிறார்கள், பராமரிக்கிறார்கள். எனினும், நாங்கள் இந்த வசதிகளெல்லாம் இல்லாமல் உதாசீனப்படுத்தப்பட்டு ஊழியம் செய்த நாட்களே மிகமிக அதிகம். ஆண்டவருக்கென்று என் மனைவி எல்லாக் குறைவுகளையும் பொறுமையாய் சகித்துக்கொண்டாள்.

*"... தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்"*

*(லூக். 14:11)*

என்ற வாக்குப்படி, அருள்நாதர் இயேசுதாமே அவளுடைய மனத்தாழ்மையைப் பார்த்து, இன்று உலகம் முழுவதிலும் பத்திரிகை, புத்தகங்கள், பொதுக்கூட்டங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பெண்கள் மாநாடுகள், எஸ்தர் ஜெபக்குழுக்கள், வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுக்கள் போன்ற ஊழியங்கள் மூலமாய் அவளை வல்லமையாக பயன்படுத்தி பரவசப்படுத்தி வருகிறார்!

## அழுகையின் பள்ளத்தாக்கு!

*"அழுகையின் பள்ளத்தாக்கை உருவநடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் ..."* *(சங். 84:6)*

*எங்கள் குடும்ப வாழ்வில் இன்பத்தை அனுபவித்த நாட்களிலும், கண்ணீரை அனுபவித்த நாட்களே அதிகம் எனலாம்.*

*"தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மைசெய்து கொள்ளுகிறான்; கடூரனோ தன் உடலை அலைக் கழிக்கிறான்"* *(நீதி. 11:17)*

என்ற வாக்குப்படி, வங்கி ஒன்றில் உலக வேலையினை இரவு பகலென்று பாராமல் செய்துகொண்டு, எஞ்சிய நேரமெல்லாம் இறைத்தொண்டினையும் செய்து, என் உடலை வருத்தி பலவிதமான நோய்களை நானே வரவழைத்துக்கொண்டேன். முதலாவது, என்னுடைய இரண்டு நுரையீரல்களும் பழுதடைந்தன. திடீரென ஒரு நாள் என் இருதயம் ஒன்றரைமணி நேரம் ஓடாமல் நின்றுபோனது. ஏறக்குறைய மரித்த நிலைமையிலேயே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டேன். இப்படி பலவிதமான நோய்கள், பாடுகள், அழுகையின் பள்ளத்தாக்குகள்! எனினும், இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் இரவும் பகலும் மாதக்கணக்காக கண்விழித்து என் மனைவி எனக்கு பணிவிடை செய்துவந்தாள். நான் இரவு நேரங்களில் எப்பொழுது கண் விழித்தாலும், அவள் என் அருகே உட்கார்ந்து ஜெபம் செய்து கொண்டிருப்பதையே பார்ப்பேன். நான் சற்று புரண்டாலும் உடனே எழுந்து எனக்கு உதவிசெய்துவிட்டு மறுபடியும் ஜெபத்தில் ஆழ்ந்துவிடுவாள். "ஏன் எனக்கு இப்படிப்பட்ட வேதனை? நான் இனி ஆண்டவருடைய ஊழியத்தை செய்யவே மாட்டேன்" என்று நான் பிதற்றிய தருணங்கள் கணக்கற்றவை.

ஆனால், என் மனைவியோ, "நீங்கள் அப்படி எண்ணாமல், இதுகாறும் உங்கள் உயிரை காப்பாற்றி வந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். இந்த பலவீனமான சரீரத்திலும் அவர் பெலன் கொடுத்து, தம் ஊழியத்திற்கென்று கிருபையாய் பயன்படுத்துவதை நினைத்து ஸ்தோத்திரம் செலுத்துங்கள்" என்றே மறுபடியும் மறுபடியும் கூறி, என்னை உற்சாகப் படுத்துவாள். இன்றும் அப்படித்தான்! என் மனைவியின்மூலம் என்னை உற்சாகப்படுத்தி வரும் ஆண்டவருடைய காலில் விழுந்து அவருக்கே கோடாகோடி ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

## ஈடுகட்ட முடியாத இழப்பு!

அழுகையின் பள்ளத்தாக்கிற்கு முழுவதுமாய் சென்றுவிட்ட நாள் 21.5.86. அன்றுதான் எங்கள் அன்பு மகள் இவாஞ்சலினை (ஏஞ்சல்) கொடிய கார் விபத்தில் இழந்தோம். துக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் குளிக்கும் அறையில் சென்று நன்றாய் அழுவேன்; கண்களை துடைத்துகொண்டு வெளியே வந்து, அழுதுகொண்டிருக்கும் என் மனைவிக்கு ஆறுதல் சொல்லு வேன். என் மனைவியும், நான் அழுதுகொண்டிருப்பதை எப்பொழுதாவது பார்த்துவிட்டால், தன்னையே மறந்து என்னை ஆறுதல்படுத்த முயற்சி செய்வாள். ஏஞ்சலைப்போன்ற பெண் பிள்ளைகளை பார்க்கும்போது, எங்களையுமறியாமல் அவர்க ளைத் தழுவி, முத்தமிட்டு மகிழ்வோம். ஒருவிதத்தில் நடமாடும் மனநோயாளிகளாகவே வாழ்ந்து வந்தோம். இவ்வாறு மூன்று ஆண்டுகள் உருண்டோடின!

## புலம்பலுக்கு பதிலாக ஆனந்த தைலம்!

2.6.'89 அன்று எங்கள் மகன் பால் தினகரனின் திருமணம் நடைபெற்றது. இந்த திருமணத்தின்மூலம் மறைந்த என் மகள் இவாஞ்சலினுக்கு (ஏஞ்சல்) பதிலாக ஒரு புதிய இவாஞ்சலினை ஆண்டவர் என் மகனுடைய மனைவியின் ரூபத்தில் அனுப்பி வைத்தார். திருமண நாளில் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மரித்த எங்கள் மகள் ஏஞ்சல் எங்கள் மகனின் மனைவி இவாஞ்சலின் ரூபத்தில் எங்களிடம் திரும்ப வந்து விட்டதாகவே உணர்ந்தோம்.

நான் என் பெற்றோருக்கு ஒரே மகன்! எனவே என் தாய் ஒவ்வொருநாளும் பல தடவைகள் என்னை முத்தமிட்டுக் கொண்டேயிருப்பார்கள்; எனக்கு திருமணமானபிறகு என்

மனைவிக்கும் சேர்த்து முத்தங்களை வாரி வழங்கிக்கொண்டே யிருப்பார்கள். அதில் அவர்களுக்கு பெரிய மகிழ்ச்சி. எனவே, நானும் என் மனைவியும்கூட எங்களுக்கு கிடைத்த அன்பு மகன் பால் தினகரனையும், மகள் ஏஞ்சலையும் அனுதினமும் பலமுறை முத்தமிட்டு மகிழ்வோம். என் அன்பு மகள் ஏஞ்சல் தன்னுடைய நாள் குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்த காரியமும் இதுதான்: "நான் அதிகமாக விரும்புவதெல்லாம் என் தந்தையின் முத்தங்களைத்தான்" ***(The best I like is the kisses of my father).***

இத்தகைய பழக்கத்தை உடைய எங்கள் வீட்டிற்குத்தான் புதிய இவாஞ்சலின் வந்து சேர்ந்தாள். வந்தவுடன்தானே, அவள் என்னையும், என் மனைவியையும் அணைத்துக்கொண்டு எங்கள் இருவருக்கும் முத்தங்களை தாராளமாய் கொடுத்து மகிழ்ந்தாள். நாங்களும் அவளை கட்டித் தழுவி, முத்தமிட்டு பரவசமடைந் தோம்! முதல் நாளிலிருந்தே அவள் எங்களை "அம்மா, அப்பா" என்று அழைக்க ஆரம்பித்தபொழுது, எங்கள் காதுகளை எங்களால் நம்பவே முடியவில்லை. மறைந்துபோன மகள் ஏஞ்சல் மறுபடியும் உயிர்பெற்று எழுந்துவந்து எங்களை வாயார "அம்மா, அப்பா" என்று அழைப்பதுபோலவே உணர்ந்தோம். இந்த அனுபவங் களால் எங்கள் உள்ளத்தில் எழுந்த பேருவகையை வார்த்தை களால் விவரிக்கவே முடியாது.

அதே சமயம், எங்கள் உள்ளத்தில் வேறொரு பெரிய சத்தியத்தையும் ஆண்டவர் உணரும்படி செய்தார். புதிய இவாஞ்சலின் எங்கள் வீட்டிற்கு ஒரு மகளாய் வந்து சேர்ந்தது உண்மைதான்; எனினும், ஆண்டவருடைய பார்வையில் இருண்டு கிடந்த எங்கள் வீட்டில் ஒளியேற்ற அவரால் தெரிந்து அனுப்பப்பட்ட ஒரு "விலையேறப்பெற்ற முத்து" என்ற சத்தியமே அது. எனவே, ஒவ்வொருநாளும் நானும் என் மனைவியும், எங்கள் புதிய மகள் இவாஞ்சலினை முழு இருதயத்தோடும் நேசித்து, அவளுக்கு விருப்பமானவைகளை வாங்கிக்கொடுத்து, இன்பம் காண்போம்; அவளுக்காக பின்வருமாறு ஜெபிக்கவும் ஆரம்பித் தோம்:

*"ஆண்டவரே, இவாஞ்சலின், மரித்துப்போன எங்கள் அன்பு மகள் ஏஞ்சலுக்கு பதிலாக நீர் கொடுத்த விலையேறப்பெற்ற*

முத்து. இந்த முத்தை ஆன்மீகப்பிரகாரமாகவும், உலக வாழ்விலும் காப்பாற்றுவது எங்கள் கடமை. ஆகவே, இவாஞ்சலினை அன்பு மகளாக என்றும் போற்றி வளர்க்க எங்களுக்கு உதவிசெய்யும்"

இவ்விதமான மனப்பான்மை ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர்களிடம் ஏற்படுமானால், குடும்பத்தில் உள்ள அநேக சண்டை, சச்சரவுகள், மனவேற்றுமைகள் ஒரே நாளில் மேகம்போல் மறையும் என்பதில் சந்தேகமேயில்லை.

"ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்..."

(நீதி. 15:20)

"... ஞானமுள்ள பிள்ளையை பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள். உன்னை பெற்றவள் மகிழுவாள்"

(நீதி. 23:24,25)

என்ற இறைவாக்குகளின்படி, ஆண்டவர் எங்களுக்கு ஞானமுள்ள மகன் பால் தினகரனை கொடுத்து, எங்களை வெகுவாய் சந்தோஷப்படுத்தி வருகிறார். மட்டுமல்ல, சாமுவேல், ஷேரன், ஸ்டெல்லா ரமோலா என்ற மூன்று பேரக்குழந்தைகளையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். அவர்கள் சிறு குழந்தைகளாய் இருக்கும்பொழுதே, என் மனைவி அவர்களை தன் மடியில் படுக்கவைத்துக் கொண்டு பின்வருமாறு பிரார்த்தனை செய்வாள்:

"ஆண்டவரே, எத்தனையோ பிள்ளைகள் உலகத்தின் ஆசாபாசங்களில் மூழ்கி உம்மைவிட்டு தூரம் சென்றுவிடுகின்றனர். அநேக வருடங்களுக்குப்பிறகுதான் தட்டுத்தடுமாறி உம்மை சொந்த இரட்சகராக கண்டுகொள்கின்றனர். என் பேரக்குழந்தைகளையோ நீர் சிறுவயதிலேயே உமது ஆவியினால் நிரப்பும். அவர்கள் வழித்தப்பிப்போகாமல் காத்துக்கொள்ளும்."

ஆண்டவர் இந்த பிரார்த்தனைகளையெல்லாம் கேட்டு, தமது அருள்வாக்கின்படி, சிறுவயதிலேயே அவர்கள் ஆண்டவருடைய ஊழியத்தில் (டி.வி. ஊழியத்தில்) ஈடுபடுமாறு அருள்புரிந்துள்ளார். இதன்மூலம் நாங்கள் அடையும் ஆறுதலுக்கும், மகிழ்ச்சிக்கும் அளவே கிடையாது. 12.5.2002 அன்று இருவரையும் தமது பரிசுத்த ஆவியினாலும் நிறைத்து தம் ஊழியத்தில் வல்லமையாக உபயோகித்துவரும் ஆண்டவரை எவ்வளவு துதித்தாலும் போதாது.

"கூடி ஜெபிக்கும் குடும்பம் என்றும் கூடி வாழும்" ***(The family that prays together stays together)*** என்றொரு மூதுரை உண்டு. அதன்படி எங்கள் இல்லற வாழ்வு எல்லாவிதமான இடி, மின்னல், புயல், பெருங்காற்று இவற்றின் மத்தியிலும் அருள்நாதர் இயேசுவால் கடந்த 43 ஆண்டுகளுக்கு மேலாக கட்டிக்காக்கப் பட்டு வருவதின் முக்கிய இரகசியம், காலையிலும், மாலையிலும் நாங்கள் செய்யும் குடும்ப பிரார்த்தனையே! அது மட்டுமல்லாமல், உணவு அருந்தும் முன்னதாகவும், வெளியே புறப்படும் முன்னதாகவும், போய் திரும்பிய பின்பும், குறிப்பாக, ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகிறோம். இதுதவிர, அடிக்கடி நாங்கள் கலந்துகொள்ளும் நற்செய்தி கூட்டங்களின் ஆசீர்வாதத்தை நாடி, குடும்பத்தில் யாராவது ஒருவர் மாறி மாறி உபவாச ஜெபம் செய்துகொண்டேயிருப்போம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொருநாளும் எங்கள் இல்லற வாழ்வு ஆண்டவரின் அருட்கரத்தினால் வேலி அடைக்கப்பட்டு பாதுகாக்கப்பட மன்றாடும்படி மாதந்தோறும் கணக்கற்ற "இயேசு அழைக்கிறார்" ஜெப வீரர்களை நினைவுபடுத்திக்கொண்டேயி ருப்போம். அவர்கள் ஜெபங்களே எங்கள் குடும்பத்திற்கு கோட்டையாக, அரணாக இருக்கும்படி, ஆண்டவரை தூண்டு கிறது.

*ஆம், எந்த ஒரு குடும்பத்தையும் கட்டிக்காக்க வல்லவர் நாசரேத்தூர் தச்சனாகிய, கானாவூர் அதிசய நாதராகிய, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து மட்டுமே! எங்கள் குடும்ப வாழ்க்கையில் நேரிட்ட பாடுகள், நோய்கள், வறுமை, இழப்புகள், எல்லாவற்றின் மத்தியிலும், எங்கள் குடும்ப வாழ்வு இன்பமயமாய் காக்கப்படுவதற்கு இந்த ஜெபங்களே காரணம் எனக்கூறினால் அது மிகையாகாது!*

# 6. இரட்சிப்பின் இன்பம் பெற்ற குடும்பம்!

- சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்

*"இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே" (லூக். 19:9)*

இயேசு கிறிஸ்து "சகேயு" என்ற ஒரு மனிதனின் வீட்டிற்கு சென்றபோது இந்த வார்த்தையை கூறினார். சகேயு வரிவசூலிக்கிற ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்தான். அவனைப் பார்த்த மக்கள் யாவரும் அவனை 'பாவி' என்றே சொன்னார்கள். ஆனால், அவனோ ஆண்டவர் இயேசு எரிகோ நகரில் பிரவேசித்து, அதின்வழியாக நடந்துபோகையில், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக் கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரை பார்க்கும்படி, ஒரு காட்டத்திமரத்தில் ஏறி, இயேசுவின் வருகையை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருந்தான்.

*"உங்கள் முழுஇருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" (எரே. 29:13)*

என்று வேதம் கூறுகிறபடி, சகேயு தன் முழுஇருதயத்தோடும் அவரை பார்க்கவேண்டும் என்ற வாஞ்சையோடும் காத்திருந்தபடியினால், எரிகோ நகருக்குள் நுழைந்த இயேசு, அந்த வழியே சென்றபோது, சகேயு காட்டத்தி மரத்தில் ஏறி ஒளிந்திருப்பதை தன் ஆவியில் உணர்ந்தார். அவன் உட்கார்ந்திருந்த மரத்தினடியிலே வந்து நின்று, அண்ணாந்து பார்த்து, பல நாட்களாக அவனை அறிந்திருந்தது போல, "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா! இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டும்" என்றார். அதைக் கேட்டதும், அவனுடைய உள்ளம் பரவசமடைந்தது! அவன் சீக்கிரமாய் மரத்திலிருந்து இறங்கி, இரட்சகர் இயேசுவை சந்தோஷத்தோடே தன் வீட்டிற்கு அழைத்து சென்றான். இயேசு அந்த வீட்டிற்கு சென்றபொழுது, "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்று கூறினார்.

## மனுக்குல இரட்சகர்!

### சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பை கொண்டு வந்தது யார்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து! அவர் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அருளுகிற இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் (1 தீமோ. 4:10), எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபை நிறைந்தவர் (தீத்து 2:11)! மனுமக்களின் இரட்சிப்பின் அதிபதி (எபி. 2:10)! நமது இரட்சகர் (தீத்து 2:13)! அவர் சகல ஜனங்களுக்கும் இரட்சகராய் இருந்தபடியினால்தான் அவருக்கு "இயேசு" என்று பெயரிட்டார்கள் (லூக். 2:10,11).

### இயேசு இந்த உலகில் வாழ்ந்தபொழுது, எப்படிப்பட்ட மக்களுக்கு இரட்சிப்பை அருளினார்?

பரிசேயன் ஒருவன் இயேசுவிடம் வந்து, தன்னுடனே போஜனம்பண்ணவேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் அந்த பரிசேயன் வீட்டில் பிரவேசித்து, அவனோடு பந்தியிருக்கையில், அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ, ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டுவந்து, அவர் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தை பூசினாள். இயேசு அவளை பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது; சமாதானத்தோடே போ" என்றார் (லூக். 7:37,38,48,50).

ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு, இயேசுவின் பாதத்தில் விழுந்து, மரண அவஸ்தைப்படுகிற தன் மகள் ஆரோக்கியமடையும்படிக்கு, அவள்மீது கைகளை வைக்கும்படி, அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். அவர் அவனோடேகூட போகும் வழியில், திரளான ஜனங்கள் அவருக்கு பின்சென்று அவரை நெருக்கினார்கள். அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய் பெரும் பாடுள்ள ஒரு ஸ்திரீ, தனக்கு உண்டானவைகளையெல்லாம், அநேக வைத்தியர்களுக்கு செலவழித்தும், சற்றும் குணமடையாமல், அதிக வருத்தத்தோடு, 'அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்' என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்கு பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். இயேசு அவளை பார்த்து, "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு" என்றார் (மாற்கு 5:28,34).

இயேசு கதரேனருடைய நாட்டில் பிரவேசித்தபோது, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளை தகர்த்துப்போடுவான், அவனை அடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. இரண்டாயிரத்துக்கும் அதிகமான பிசாசுகளால் அலைக்கழிக்கப்பட்ட அந்த வாலிபனை நோக்கி: "(மகனே) உன் பேர் என்ன?" என்று இயேசு கேட்டார். அதற்கு அவன், "என் பேர் லேகியோன்" என்று சொல்லி அவரை வேண்டிக்கொண்டதும், அவனை அலைக்கழித்த அசுத்த ஆவி அவனைவிட்டு புறப்பட்டுப் போகும்படி அவர் உத்தரவிட்டார்; உடனே அவனுக்குள்ளிருந்த அத்தனை பிசாசுகளும் ஓடிப்போயின! அவன் பூரண விடுதலை பெற்றான் (மாற்கு 5:1-15).

இயேசு கலிலேயா நாடெங்கும் ஜெப ஆலயங்களில் பிரசங்கம்பண்ணிக்கொண்டும், பிசாசுகளை துரத்திக்கொண்டும் இருந்தபொழுது, குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு, "(ஆண்டவரே) உமக்கு சித்தமானால், என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்று வேண்டிக் கொண்டான். இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, "எனக்கு சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார். உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான் (மாற்கு 1:40-42).

இவ்விதமாக ஆண்டவர் இயேசு உலகத்தில் சுற்றி சஞ்சரித்த நாட்களில், பாவத்தினாலும், நோயினாலும், பிசாசின் கட்டுகளினாலும் அவதிப்பட்ட மக்களுக்கு இரட்சிப்பை அருளி, சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கட்டளையிட்டார்.

"இயேசு அழைக்கிறார்" நற்செய்தி பெருவிழா ஒன்றில் காலையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூட்டத்திற்கு, ஒரு சகோதரர் வந்திருந்தார். அவருடைய இடுப்பிலிருந்து கால் வரையும் "யானைக்கால்" போன்று வீக்கமாயிருந்தது. அவரால் உடையணிய முடியவில்லை. பல மருத்துவ நிபுணர்கள் பரிசோதித்தும், இந்த வீக்கத்திற்கு என்ன காரணம் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால், அந்த வீக்கத்திலிருந்து சுகம் கிடைக்கவேண்டும் என்று வாஞ்சையோடு வந்து கூட்டத்தில் உட்கார்ந்திருந்தார். செய்தி முடிந்து, ஜெபிக்கும் வேளையில், கர்த்தருடைய வல்லமையினால் நிறைந்து, அவரது நோயை குறிப்பிட்டு,

அவருடைய நோயின் காரணத்தை சொல்லி ஜெபித்த வேளையில்தானே, கர்த்தர் அவரை தொட்டு சுகப்படுத்தினார். அன்று மாலையில் நடந்த கூட்டத்திற்கு, அவர் அழகாய் உடையணிந்து, இரண்டு கால்களிலும் எந்தவொரு வீக்கமுமின்றி, சுகத்தோடு வந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள்முன் நின்று சாட்சி பகர்ந்தபோது, எல்லோரும் கரகோஷம் எழுப்பி, கர்த்தரை மகிமைப்படுத்தினர்!

ஆம், மனுக்குல இரட்சகர் எந்த பாகுபாடுமின்றி எல்லா மக்களையும் சந்தித்து, பாவத்திலிருந்தும், நோய்களிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் விடுவித்து, ஆசீர்வதித்து, அவர்களின் சகல தேவைகளையும் அருளிச்செய்கிறார்!

## சாபத்தை நீக்க வந்த இரட்சகர்!

இயேசு, சகேயு அமர்ந்திருந்த காட்டத்தி மரத்தடியில் வந்து நின்றபொழுது, "ஆண்டவரே, நீர் என் வீட்டிற்கு வாரும்" என்று அவன் அவரை வருந்தி அழைக்கவில்லை. ஆனால், அவனுடைய வீட்டில் வேண்டாத சாபம் இருக்கிறது, அது அகலும் வரைக்கும் அவனுடைய வீட்டிற்கு இரட்சிப்பு இல்லை என்பதை நன்கு அறிந்திருந்த இயேசு, சகேயுவைப் பார்த்து, "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா! இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும், (உன் வீட்டிலிருக்கும் சாபத்தை நீக்கி, உன் வீட்டிற்கு இரட்சிப்பு அருள வேண்டும்)" என்றார். இன்று அநேகர், "ஐயா, என் வீட்டில் ஏதோ ஒரு சாபம், தோஷம் இருக்கிறது. எதை செய்தாலும் அதில் ஆசீர்வாதமேயில்லை, நான் இருக்கிற வீட்டை மாற்றிவிடட்டுமா?" என்று ஆலோசனை கேட்டு, கண்ணீரோடு எங்களுக்கு கடிதம் எழுதுகிறார்கள்.

இரட்சகர் இயேசு, இந்த சாப தோஷம் நீங்கவே, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக பூமிக்கு இறங்கிவந்தார் (யோவான் 1:29). தம் சரீரத்தில் பல பாடுகள் அனுபவித்து, சகல ஜனங்களுக்காகவும் சிலுவை மரத்திலே தொங்கி, சாபமானார். ஆகவேதான், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் (நம் குடும்பத்திலுள்ள) சகல பாவங்களையும் (சாப தோஷங்களையும்) நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7).

இயேசு சகேயுவின் வீட்டிற்கு சென்றபோது, எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அருளிச்செய்யும் தேவ கிருபையாகவே சென்றார். அவர் வீட்டினுள் நுழைந்தவுடன், சகேயு நின்று,

பாவத்தினிமித்தம் தன் வீட்டிலிருக்கும் தோஷத்தை உணர்ந்தவனாய், தன்னையு மறியாமல், ஆண்டவரை நோக்கி: "ஆண்டவரே, (என் வீட்டிற்குள் தவறாக வந்த செல்வத்தினால் தோஷம் இருக்கிறது), நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாக திரும்ப செலுத்துகிறேன். மற்ற என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன் (எப்படியாவது என் சாப தோஷம் நீங்கினால் போதும்)" என்று புலம்பினான் (லூக்கா 19:8). உடனே இயேசு, சாப தோஷத்தை நீக்கி, "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்றார்.

ஆம், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அருளும் தேவ கிருபையே அருள்நாதர் இயேசு கிறிஸ்து. சகேயுவின் வீட்டில் இருந்த தோஷத்தைபோலவே, இன்று குடும்பங்களில் தோன்றும் வேறு பல தோஷங்களும் உண்டு.

## பாவம் எனும் தோஷம்!

*"... நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்..."* (ஆதி. 4:7).

*"நன்மை செய்யும்படி உனக்கு திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே"* (நீதி. 3:27).

*"ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால், அது அவனுக்கு பாவமாயிருக்கும்"* (யாக். 4:17).

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு வீட்டில் ஒரு சிறு குழந்தை ஒரு நாணயத்தை விழுங்கிவிட்டது. அந்த நாணயம் குழந்தையின் தொண்டையில் சிக்கி குழந்தை துடித்தது. பெற்றோர் குழந்தையை தூக்கிக்கொண்டு, அவர்கள் வசித்துவந்த தெருவில் இருந்த ஒரு மருத்துவரிடம் ஓடினார்கள். மருத்துவரின் வீடோ உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. தாயார் குழந்தையை கையில் வைத்துக்கொண்டு கதறிக்கொண்டிருந்தார்கள். குழந்தையின் தந்தையோ, மருத்துவரின் அடைக்கப்பட்டிருந்த வீட்டின் கதவை தட்டிக்கொண்டே, "ஐயா, என் குழந்தையின் உயிர் போய்க் கொண்டிருக்கிறது; தயவுசெய்து கதவைத் திறந்து, என் குழந்தைக்கு உதவிசெய்து உயிரை காப்பாற்றுங்கள்" என்று கதறினார். அந்த மருத்துவருக்கு ஒரு பழக்கம் உண்டு. அவர் இரவு

10 மணிக்குமேல் கதவைத் திறந்து எந்த நோயாளிக்கும் மருத்துவம் பார்ப்பதில்லை. அந்த தகப்பனார் ஒரு மணி நேரம் விடாமல் தட்டியும், கதவு திறக்கப்படவேயில்லை. அந்தோ, அந்த குழந்தை அதற்குள் பரிதாபமாக துடிதுடித்து மரித்துப்போனது. நாட்கள் கடந்தன! ஒரு நாள் திடீரென்று அந்த மருத்துவரின் குழந்தை, எந்த காரணமுமின்றி மரிக்கும் தருவாயிலிருந்தபோது, அவரும் தன் குழந்தைக்காக பரிகாரம் தேடி அங்குமிங்குமாக ஓடினார். எந்த பயனுமில்லை. அந்தோ, அவரது குழந்தையும் பரிதாபமாக மரித்துப்போனது.

*"...மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்"*

*(கலா. 6:7)*

*ஆம், நன்மைசெய்ய திராணியிருக்கும்போது, அதை செய்யாதிருப்பது பாவம்! தேவனுடைய ஆசீர்வாதம் அப்படிப் பட்டவர்களின் குடும்பத்தினுள் நுழையக்கூடாது என்பதற்காக, பாவம் அந்த வீட்டு வாசற்படியில் படுத்திருக்கும். ஆகவே, நன்மைசெய்ய திராணியிருக்கும்போது நன்மைசெய்து, பாவ தோஷத்தை குடும்பத்திலிருந்து அகற்றுவோம். தேவ ஆசீர்வா தத்தை நிறைவாய் பெற்று மகிழ்வோம்!*

## சாபம் எனும் தோஷம்!

*"துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது..."* *(நீதி. 3:33)*

ஒரு குறிப்பிட்ட நகரில் செல்வந்தர் ஒருவர் தன் மனைவியை இழந்து தனிமையாய் வாழ்ந்துகொண்டிருந்தார். ஒருபக்கம் தனிமை உணர்வு அவரை வாட்டியது, மறுபக்கம், அவரது சரீரத்தை குஷ்டரோகம் தாக்கியது! அவருக்கு ஏராளமாய் பணமிருந்தபோதிலும், உறவினர்களில் ஒருவர்கூட அவரை தேடி வரவில்லை. அவரின் வியாதியின் மும்முரத்தினால் பல நாட்கள் மயக்க நிலையில் கிடந்தார். அவருக்கு உதவிசெய்ய அவ்வப்போது சென்ற தேவனுடைய ஊழியருக்குள், இனிமேல் அவர் பிழைக்கமாட்டார் என்று தெரிந்ததும், "செல்வந்தரின் உறவினர்கள் எங்கேயோ இருக்கிறார்கள். இவருடைய சொத்துக்களையெல்லாம் நமது பெயருக்கு மாற்றிக்கொண்டால் என்ன?" என்ற குறுக்கு எண்ணம் தோன்றியது. உடனே மயங்கிய நிலையில் படுத்திருந்த அந்த மனிதரின் கை ரேகையை ஒரு ஸ்டாம்ப் பேப்பரில் பதித்து, ஒரு வழக்கறிஞரின் உதவியோடு,

அவரது சொத்துக்களையெல்லாம் தன் பெயரில் எழுதிக் கொண்டார். மயங்கிய நிலையில் இருந்த அந்த செல்வந்தர் இறந்தபின்பு, அவரது உறவினர்கள் சொத்துக்களின் விபரங்களை தெரிந்துகொள்ள முயற்சிக்கும்போது, இந்த ஊழியரின் பெயருக்கு சொத்துக்கள் மாற்றப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந் தார்கள்!

ஊழியரின் வீட்டிலோ செல்வம் கொழிக்க ஆரம்பித்தது. ஆனாலும், அவரால் மனநிம்மதியோடு வாழ முடியவில்லை. தினந்தோறும் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், அவரது வீட்டில், இறந்துபோன அந்த மனிதர், உயிரோடிருக்கும்போது கால்களில் பூட்ஸை அணிந்துகொண்டு எப்படி நடப்பாரோ அதேபோல "டக் டக்" என்ற சத்தம் ஊழியரின் அருகாமையில் கேட்கும். உடனே அவர், "ஐயோ, யாரோ என் கழுத்தை நெரிக்கிறார்களே" என்று கூச்சலிடுவார். பல ஊழியர்கள் அந்த குறிப்பிட்ட நேரத்தில் வந்து பிரார்த்தித்தும், அந்த பிசாசை துரத்தவே முடியவில்லை. இவருடைய வீட்டில் அந்த மனிதருடைய அத்தனை சொத்துக்களின் தஸ்தாவேஜுக்களும் இருக்கின்றன என்பதும், இதனால் தேவனுடைய சாபம் அந்த வீட்டில் குடிகொண்டிருக்கி றது என்பதும், அந்த வீட்டிலுள்ளவர்களுக்கும், மற்ற ஊழியர் களுக்கும் தெரியாது. வழக்கம்போல ஒருநாள் மீண்டும் அந்த சத்தம் தொனித்தது. அந்தோ, அவர் துடிதுடித்து பரிதாபமாய் மாண்டுபோனார்.

*"தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தை கருக்காக்குவார் ..." (சங். 7:11,12).*

ஆகவே, நம் குடும்ப வாழ்க்கையில் சாபம் வராதபடி நீதியின் பாதைகளில் நடந்து கர்த்தரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள் வோம் (உபா. 23:5).

## ஊழியர்களை நிந்திக்கும் சாபம்!

எரேமியா ஜனங்களுக்காக கண்ணீருடன் மன்றாடிய ஒரு தீர்க்கதரிசி! ஆகவேதான் அவன், ஒரு தீர்க்கதரிசிக்கு விரோதமான எல்லாக் குரோதமும், தீதான நினைவுகளும், நிந்திக்கும் நிந்தையும், கர்த்தரின் சாபத்தை கொண்டுவரும். கர்த்தர் அவர்களுக்கு இருதய வேதனையைக் கொடுப்பார்; அவருடைய சாபம் அவர்கள்மேல்

*இருக்கும் (புல. 3:60, 61, 65). என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; நான் என் ஜனத்திற்காய் இரவும் பகலும் அழுவேன் (எரே. 9:1) என்கிறான்.*

*ஆம், ஆண்டவருக்கும் மனிதனுக்கும் நடுவே நிற்கும் மத்தியஸ்தனே ஒரு தீர்க்கதரிசி. அப்படிப்பட்ட ஆண்டவருடைய ஊழியர்களை, தீர்க்கதரிசிகளை தூஷிப்பவர்களின் வீட்டில் இருதய வேதனை, ஆண்டவரின் சாபம் நிரந்தரமாய் தங்கியிருக்கும்.*

ஒரு சமயம் தேவ ஊழியர் ஒருவர், ஒரு கட்டிடத்தை, வங்கியில் கடன் பெற்று, மிகவும் சிரமப்பட்டு விலைக்கு வாங்கினார். ஏழை எளிய மக்கள் கொடுத்த நன்கொடைகளினால் அதை திரும்ப செலுத்திவந்தார். அந்த கட்டிடத்தை இவருக்கு விற்ற மனிதர் கட்டிடத்தை பதிவுபண்ணும்போது, திருப்பிக்கொடுத்து விடுகிறேன் என்று உறுதி கூறி, கூடுதலாக பணம் வாங்கிக் கொண்டார். நாட்கள் பல கடந்தும், அவர் அதை திரும்பக் கொடுக்கவேயில்லை. பலரிடமும் சொல்லி கேட்டுப் பார்த்தும், அவர் கொடுப்பதாக இல்லை. ஒரு நாள் அந்த போதகர் மிகவும் மனம் நொந்துபோய் தன்னையுமறியாமல், "நான் மக்களிடம் கேட்டு வாங்கிய இந்த காணிக்கைப் பணத்தை திருடிய இவன் சபிக்கப்பட்டுப்போவானாக" என்றார். ஒரே வாரத்தில் அவன் அவ்வாறே சாபத்திற்குள்ளாகி தன் வீட்டையும், சொத்தையும், மற்றெல்லா ஆசீர்வாதங்களையும் இழந்து தவித்தான்.

மக்களுக்காய் உண்மையாய் கண்ணீர் வடித்து, மற்றவர்களின் துயரத்தை தன் துயரமாக எண்ணி இரத்தக்கண்ணீர் வடிக்கும் தீர்க்கதரிசிகளுக்கு, ஆண்டவருடைய ஊழியர்களுக்கு விரோதமாய் பேசுபவர்களின், செயல்படுவோரின் இல்லங்களில் ஆண்டவரின் சாபம் இறங்கும்; அவர்கள் இருதய வேதனையடைவது உறுதி!

*ஆகவே இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, "ஆண்டவரே, நான் துன்மார்க்கமாய் நடக்கிறேனா? அடுத்தவர் சொத்தை, பொருளை அபகரித்திருக்கிறேனா? மற்றவர்களிடம் கடன் வாங்கி செலுத்தாமல் இருக்கிறேனா? தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாய் பேசியிருக்கிறேனா?" என்று யோசித்துப் பார்த்து, "ஆண்டவரே, என் வீட்டில் உமது சாபம் இருக்கிறதே! எனக்கு இரங்கும்" என்று அவரிடம் கெஞ்சும் ஒவ்வொருவருக்கும் அவர் மனமிரங்குவார்! குடும்பங்களில் ஆண்டவர் அருளும் ஆசீர்வாதம் நிறைவாய் தங்கியிருக்கும்!*

## மகா இரட்சகர்!

எல்லா சாபங்களிலிருந்தும் விடுதலை அருளுகிற ஓர் இரட்சகர் நமக்கு உண்டு! அவர் தான் சிலுவையில் நமக்காக தொங்கிய 'இயேசு' எனும் மனுக்குல இரட்சகர்!

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலா. 3:13).

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது, இத்தாலி தேசத்தின் சர்வாதிகாரியாக விளங்கிய முசோலினி, ஹிட்லரோடு யுத்தத்தில் ஓர் உடன்படிக்கை செய்திருந்தார். ஆனால், யுத்தம் தோல்வியில் முடிந்தது. முசோலினி தேசத்தைவிட்டு இரவோடு இரவாய் ஓடிவிட முயன்றார். அதைக்கண்ட சிலர், அவரை சுட்டு வீழ்த்தி ஒரு கம்பத்தில் கட்டி தொங்கவிட்டார்கள். பொழுது விடிந்ததும், மக்கள் எல்லாரும் முசோலினியின் உடலை அடையாளம் கண்டுகொண்டனர். மிகுந்த கோபத்தோடு அவனை சபித்து, கட்டையிலிருந்து கீழே இறக்கி, காலால் எட்டி உதைத்துத் தள்ளினார்கள். ஒரு வயதான தாய் ஒரே ஓட்டமாய் தன் வீட்டிற்கு சென்று தன் துப்பாக்கியைக்கொண்டுவந்து, "இவனால் தான் என் ஒரே மகன் யுத்தத்தில் மடிந்துபோனான். என் குடும்பமே சபிக்கப்பட்டுப்போனது" என்று சொல்லி, அவனது உயிரற்ற சடலத்தை இரண்டு தரம் சுட்டுவிட்டு, "சபிக்கப்பட்டவனே, நீ ஒழிந்துபோ" என்று கூச்சலிட்டார்கள். அந்த மனிதன் எல்லாராலும் சபிக்கப்படுவதற்கு அநேக காரணங்கள் இருந்தன!

ஆனால், இரட்சகர் இயேசுவோ, "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக்கூடும்?..." (யோவான் 8:46) என்று சவால்விட்டார். அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப் படவுமில்லை (1 பேதுரு 2:22,23). அவரை நியாயம் விசாரித்த பிலாத்துவும்கூட, "இவரிடத்தில் நான் ஒரு குற்றமும் காணேன்" (யோவான் 19:4,6) என்றே கூறினான்.

ஆம், பாவம் அறியாத பரிசுத்தராகிய இயேசு, "என் ஜனங்கள் சாபத்தில் மடிவதற்கு பதிலாய் நான் சாபத்தில் மடியட்டும்; எல்லா சாபமும் என்மீது வரட்டும்" என்று தம்மை முற்றிலுமாய் கல்வாரி சிலுவையில் அர்ப்பணித்தார்; நம்மை சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்க, அவரே நமக்காக சாபமானார். சிலுவை மரணத்தின் மூலம் சாபத்திற்கு நிரந்தர முடிவை உண்டுபண்ணினார்.

***"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்"*** *(நீதி. 28:13)*

என்ற வாக்குப்படி, ஆண்டவர் இயேசு, தங்கள் பாவங்களை, சாபங்களை, தோஷங்களை அறிக்கையிடும் ஒவ்வொரு குடும்பத்தினரின் பாவத்தையும், சாபத்தையும், தோஷத்தையும், மாற்றி இரட்சிப்பை அருளி, ஒவ்வொரு குடும்பமும் பேரின்பத்தினால் நிறைந்து, இன்புற்று வாழச் செய்யும் மனுக்குல இரட்சகர்!

பிரியமானவர்களே, அவர் அருளிச்செய்யும் இரட்சிப்பின் இன்பம் குடும்பத்தில் தனிப்பட்ட ஒருவரோடு நின்றுவிடுவதில்லை.

***" ... கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் ..."*** *(அப். 16:31).*

*"...நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்"* *(யோசுவா 24:15)*

என்ற வேத வசனங்களின்படி, நாளடைவில் அந்த இல்லம் முழுவதும் தெய்வீக இரட்சிப்பின் இன்பதை பெற்று மகிழ அருள்புரிவார்.

***"இதோ, நானும், கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்"*** *(ஏசாயா 8:18)*

***"உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்"*** *(ஏசாயா 59:21)*

என்ற வேதவாக்குகளின்படி, எங்கள் குடும்பத்தை - கணவன், மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் என குடும்பம் முழுவதையும், "இரட்சிப்பின் இன்பம் பெற்ற குடும்பமாக" மாற்றிய இரட்சகர் இயேசு, அவரை முழு இருதயத்தோடும் தேடும் ஒவ்வொரு குடும்பத்தையும் அவ்வாறே இரட்சித்து, இரட்சிப்பின் இன்பம் பெற்ற குடும்பமாக திகழச்செய்வார்!

# 7. இறை ஆசி பெற்ற குடும்பம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

*"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது: தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்"* (1 நாளா. 29:11).

இன்றைய நாட்களில் அநேகர் குடும்ப வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் நேரிடும் பலவிதமான வியாதிகளினால், துன்பங்களினால், தோல்விகளினால், கணவனின் பொல்லாத செய்கைகளினால் கண்ணீரில் தவிக்கின்றனர்! அநேகர் தங்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளினிமித்தம், ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஏற்படும் கசப்பினிமித்தம் மரணத்தை தவிர வேறு வழியே இல்லை என்று தற்கொலை செய்து தங்கள் வாழ்வை மாய்த்துக் கொள்ளவும் துணிவதை பார்க்கிறோம். ஆனால், நம் ஆண்டவர் இத்தகைய நிலைமையை முற்றிலும் மாற்றி, அவருக்குள் நாம் சகலவிதத்திலும் பரிபூரணமுள்ளவர்களாயிருந்து, பரிபூரண ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள செய்கிறார் (கொலோ. 2:10).

நம் ஆண்டவர் மகத்துவமுள்ளவர், மகிமை நிறைந்தவர், ஜெயம் கொடுக்கிறவர், கர்த்தாதி கர்த்தா, ராஜாதி ராஜா! ஆகவேதான் அவர் எல்லாவற்றிலும் நம்மை வாழ்ந்திருக்க செய்கிறார்!

**அவர் என்னென்ன ஆசீர்வாதங்களை நம் வாழ்வில் அருளிச்செய்ய விரும்புகிறார்?**

## பரிபூரண சந்தோஷம்!

*"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர் நம் ஆண்டவர்!"* (எபே. 3:20)

உலகமோ பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1 யோவான் 5:19). இந்த பொல்லாங்கனாகிய உலகத்தின் அதிபதியாகிய பிசாசுதான் (யோவான் 14:30) குடும்பங்களில் சிறுசிறு குழப்பத்தை விளைவித்து, கணவனுக்கும் மனைவிக்குமிடையே பிரச்சினையை, பிரிவினையை உருவாக்குகிறான்.

"இயேசு அழைக்கிறார்" நற்செய்திக் கூட்டம் ஒன்றில் ஒரு குடும்ப தலைவர், "நான் 20 வருடங்களாக குடிபழக்கத்துக்கு அடிமையாயிருந்தேன். இதனால் எனக்கும், என் மனைவிக்குமிடையே பலவிதமான பிரச்சினைகள்! எங்கள் குடும்பத்தில் சந்தோஷமேயில்லை. ஆனால், இன்று ஆண்டவர் என்னை முற்றிலும் மாற்றினார்; அவரை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டேன்; இனிமேல் நான் குடிக்கமாட்டேன்" என்று மிகுந்த சந்தோஷத்துடன் கைகளை உயர்த்தி, "அல்லேலூயா" என்று ஆர்ப்பரித்தார். அவருடைய மனைவியை அழைத்து விசாரித்தபோது, தன் கணவரின் குடிபழக்கத்தினிமித்தம் தான் அடைந்த வேதனையை கூறி, தற்போது தன் கணவரின் வாழ்வில் நிகழ்ந்துள்ள மாறுதலைக் கண்டு, அவர்கள் ஆனந்தக்கண்ணீர் வடித்தார்கள்.

*ஆம், குடும்பத்தில் நிலவுகிற சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கெடுப்பதற்காக பொல்லாங்கனாகிய பிசாசு பலவிதங்களிலும் மனவேதனைகளை, பிரிவினைகளை ஏற்படுத்தி, வாழ்வின் ஆசீர்வாதங்களை இழக்கச்செய்துவிடுகிறான். மட்டுமல்ல, மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை (1 யோவான் 2:16) ஆகிய உலகத்தின் ஆசை இச்சைகளையும் மனதில் போட்டு, தேவனுடைய ராஜ்யத்தையும் சுதந்தரிக்கவிடாதபடி, விபச்சாரம், வேசித்தனம் போன்ற பாவ செயல்களில் ஈடுபடுத்துகிறான் (கலா. 5:19-21). திருடன் (பிசாசு) திருடவும் கொல்லவும் அழிக்கவுமே வருகிறான் (யோவான் 10:10).*

*"வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு" (யாக்.3:16). இவைகளெல்லாம், "லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" (யாக். 3:15). இந்த பொல்லாத நிலைமையிலிருந்து நம் வாழ்க்கையை மாற்றியமைக்கவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்து, உலகத்தின் அதிபதியாகிய பிசாசை, மரணத்தை ஜெயித்தவராக உயிரோடெழுந்தார்; என்றென்றும் ஜீவனோடுமிருக்கிறார்! அவரை நம் இதய தெய்வமாக ஏற்றுக்கொண்டு, பாவ வழிகளிலிருந்து விடுபட வேண்டும் என்பதே அவருடைய சித்தம்!*

*" ... பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று"* *(ரோமர் 5:20)*

***"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்***

*பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது..."* *(ஏசாயா 53:5).*

ஒரு மனிதர் தன் நண்பனுடன் தனக்கு ஏற்பட்ட விரோதத்தி னிமித்தம், அவரை கொன்றுவிடவேண்டுமென்று எண்ணி, அரிவாளை தீட்டிக்கொண்டு ஒரு நற்செய்தி கூட்டம் நடைபெற்ற இடத்தின் வழியாய் கடந்து சென்றுகொண்டிருந்தார். அங்கு கூடியிருந்த ஜனங்களை பார்த்த அவர் "இங்கே, திரளான ஜனக்கூட்டம் இருக்கிறதே, என்ன நடக்கிறது பார்க்கலாம்" என்று மைதானத்தின் கடைசியில் வந்துநின்று கொண்டிருந்தார். அன்று செய்தியளித்த தேவமனிதர், "உன்னை குணப்படுத்த, பரிபூரணப் படுத்த, உன் ஆத்துமா இரட்சிக்கப்பட, நீ சந்தோஷமாய் வாழ, உன் பகை, விரோதம் எல்லாவற்றிலிருந்தும் உனக்கு மீட்பு கொடுக்க, இயேசு தம்மையே பலியாக சிலுவையில் அர்ப்பணித் தார்" என்று கூறிய வார்த்தைகள், அந்த மனிதரின் உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்தது. அவருடைய உள்ளம் நொறுங்குண்டு, கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. காரணம், தேவ ஊழியர் மூலம் வெளிவந்த தேவனுடைய வார்த்தைகள் அவரைத் தொட்டது. ஆகவே ஆண்டவரை நோக்கி: "ஆண்டவரே, நான் வழிதவறிப் போய்விட்டேன். என்னை மன்னியும்; உம் சித்தம்போல் என்னை நடத்தும். எனக்கும் அன்பு, சந்தோஷம், சமாதானம் வேண்டும்" என்று கதறினார். தேவ ஊழியர், "இயேசுவை யார் யார் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறீர்கள்?" என்று அழைப்பு கொடுத்தபொழுது, இவர் மேடைக்கு நேரே ஓடோடி சென்று இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, "இனிமேல் நான் இயேசுவின் பிள்ளை" என்று பரவசத்தோடு சாட்சியும் கொடுத்தார்!

*பிரியமானவர்களே! ஆண்டவர் நம்மைப் பார்த்து, "மகனே, மகளே, நீ என்னிடத்தில் வந்து, உன்னுடைய குற்றங்களை அறிக்கையிட்ட மாத்திரத்தில் உன் பாவங்களையும், அக்கிரமங்க ளையும் நான் மன்னிப்பேன்; நான் சிலுவையில் சிந்திய என் இரத்தத்தினால் உன்னை பாவமற கழுவுவேன்; என் கிருபையால் உன்னை நிரப்புவேன்" என்கிறார். அவர் சமுகத்தில் நம் குறைகள், குற்றங்களை அறிக்கையிடும்போது, ஆண்டவர் தம் பரிபூரண சந்தோஷத்தினால் நிரப்புவார்; புதுவாழ்வைத் தருவார்!*

## பரிபூரண ஆசீர்வாதம்!

*"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் ..."* *(நீதி. 28:20)*

**"... உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்கு பிரியம்"**

*(நீதி. 12:22)*

தாவீது ஆண்டவரை பார்த்து, "ஆண்டவரே, நான் உமக்கு முன்பாக மனஉண்மையும், உத்தமமுமாய் நடந்தேன்" என்கிறான். ஆகவேதான் ஆண்டவர் அவனை நோக்கி, "உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்: உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" (2 சாமு. 7:16) என்றார்.

"என் குடும்ப வாழ்க்கையை இப்பொழுதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன். ஆண்டவர் எனக்கு நிலையான ஆசீர்வாதமான குடும்ப வாழ்க்கையை தருவாரா?" என்ற ஏக்கம் அநேக இளம் மனைவிமாருடைய உள்ளத்தில், கணவன்மாருடைய உள்ளத்தில் எழுகிறது. ஆனால், ஆண்டவர், "உன் வீடு நிலைபெற்றிருக்க வேண்டுமானால், தாவீதைப்போல உண்மையும், மனஉத்தமமுமாய் நடந்துகொள்" என்கிறார்.

எசேக்கியா ராஜா மரணத்திற்கேதுவான நோய்வாய்ப்பட்டபோது, ஆண்டவரைப் பார்த்து, கண்ணீரோடு பின்வருமாறு கதறுகிறான்:

**"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மனஉத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதை செய்தேன் என்பதை நினைத்தருளும்..."**

*(2 இரா. 20:3; ஏசாயா 38:3).*

ஒருவேளை நம் வாழ்க்கையில் பல குறைவுகள் இருக்கலாம். "ஆண்டவரே, உம்மைப்போல் என்னை மாற்றும், என்ன வந்தாலும் உமக்காய் நான் திடமனதுடன் நிற்க, உண்மையாய் உம்மை பின்பற்ற கிருபை தாரும்" என்று எசேக்கியா ராஜாவைப்போல் கண்ணீரோடு கேட்கும்போது, ஆண்டவர் மனமிரங்குவார், பரிசுத்தமான வாழ்க்கையை கட்டளையிடுவார்.

ஒரு அலுவலகத்திலே தேவனுடைய அடியார் ஒருவர் உயர் அதிகாரியாக பணிபுரிந்து வந்தார். அவர் வருகிற மக்களை அன்போடு உபசரிப்பார். தன்னால் இயன்ற அளவு உதவிசெய்வார்; அவருடைய முகத்தில் எப்பொழுதும் தெய்வீக சந்தோஷம், சமாதானம் நிறைந்திருக்கும். ஒரு நாள் அவருடைய உடன் அதிகாரி ஒருவர் வந்து அவருக்கு எதிராக உட்கார்ந்துகொண்டார். வேலையில் கவனமாயிருந்த அவர் அவரை கவனிக்கவேயில்லை.

சிறிது நேரத்திற்குப்பின் நிமிர்ந்த அவர் எதிரில் அந்த அதிகாரி அமர்ந்திருப்பதைக் கண்டதும், மிகுந்த பணிவுடன், "ஐயா, நீங்கள் வந்ததே எனக்கு தெரியவில்லை; என் கவனம் முழுவதும் வேலையில் இருந்தபடியினால், உங்களை கவனிக்கவில்லை; தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றார். ஆனால், இயேசு கிறிஸ்துவை அறியாத அந்த அதிகாரி, "மனதில் குழப்பத்தோடு, கண்ணீரோடு, வேதனையோடு வந்தேன். ஆனால், உங்கள் அருகில் அமர்ந்திருக்கையில் ஒரு தெய்வீக சமாதானம் என்னை நிரப்பியதை உணர்ந்தேன். இந்த தெய்வீக சமாதானத்தைப் பெறவே இங்கு வந்தேன்; அதை பெற்றுக்கொண்டேன்" என்றார்.

*"... மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது"*

*(மத். 5:16).*

என்ற இறைவாக்குப்படி, ஆண்டவருக்கு முன்பதாக உண்மையும் மனஉத்தமமுமாய் நடந்து, மற்றவர்களுக்கு அன்பு காண்பித்து, தன்னால் இயன்ற உதவிகளை செய்யும்போது, ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்!

## தேவைகளை அருளிச்செய்கிறார்!

*"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக்கொடுக்கப்படும்" (மத். 6:33).*

*"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையை கூட்டார்" (நீதி. 10:22).*

ஒரு சிறுவன் தன் தகப்பனிடம் தினமும் பலூன் வாங்கி வரும்படி கேட்பான். தகப்பனார் காலையில் அலுவலகத்திற்கு புறப்படும் பொழுது, 'நிச்சயம் இன்று வாங்கிக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லுவார். ஆனால், மாலையில் வரும்பொழுது, வேலை பளுவின் மத்தியில் மறந்துவிடுவார். வீட்டில் வந்ததும், மகன், "அப்பா, பலூன் வாங்கி வந்தீர்களா?" என்று கேட்பான். அப்பொழுதுதான் அவருக்கு ஞாபகம் வரும். ஒருநாள், அவர் தன் மகனுக்கு ஒரு காரியத்தை சொல்லிக்கொடுத்தார். "மகனே, நீ உன் அப்பாவை நம்பினால் இப்படித்தான் மறந்துவிடுவேன். ஆனால், உன் பரலோக அப்பாவிடம் முழங்கால்படியிட்டு, "இயேசப்பா,

எனக்கு பலூன் வேண்டும் என்று கேள். அவர் உனக்கு நிச்சயம் தருவார்" என்றார். அந்த மகன் அப்படியே தகப்பன் சொல்லுக்கு கீழ்ப்படிந்து ஜெபம்பண்ணினான். அடுத்தநாள் காலையில், வழக்கம்போல் அப்பா அலுவலகம் சென்றார். மாலையில் திரும்பிவந்து பார்த்தால், வீடு முழுவதும் பலூன்கள்! தந்தை மகனைப்பார்த்து, "இத்தனை பலூன்களும் உனக்கு எப்படி கிடைத்தது?" என்று கேட்டார். "பக்கத்து வீட்டில் வசிக்கும் என் சிநேகிதனுடைய உறவினர் ஊரிலிருந்து அவனுக்கு நிறைய பலூன்களை வாங்கி வந்திருந்தார். அதில் எனக்கும் கொடுத்தான்" என்றான்.

*"கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார்" (சங். 115:13) என்ற வசனத்திற்கேற்றார்போல், பெரியவர்களின் ஜெபத்தை மாத்திரமல்ல, சிறுவர்களின் ஜெபத்தையும் கேட்டு ஆசீர்வதிக்கிற பரம தகப்பன் தான் நம்முடைய தேவன்!*

*உலகப்பிரகாரமாக மட்டுமல்ல, ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நிறைவாய் ஆசீர்வதிப்பார்!*

***"... அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்"***

*(எபே. 1:3, 1 கொரி. 1:5).*

நான் அநேகமுறை, "ஆண்டவரே, நீர் எனக்காக ஜீவனைக் கொடுத்தீரே, எனக்காக வாரினால் அடிக்கப்பட்டீரே, உம்முடைய முகத்தில் துப்பினார்களே; எனக்காய் இத்தனை கோரப்பாடுகளை சகித்த உமக்காய் நான் செய்யும் காரியங்கள் மிகவும் குறைவாயிருக்கிறதே; இன்னும் அதிகமாய் உம் நாம மகிமைக்கென்று என்னை எடுத்து உபயோகியும். உமது தெய்வீக வல்லமையினால் என்னை நிரப்பும். 'இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்' (யோவான் 1:50) என்று சொன்னீரே, உம் வாக்குப்படியே என்னை ஆசீர்வதியும்" என்று கண்ணீரோடு ஜெபிப்பேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, இன்று பெண்களுக்கென அநேக ஊழியங்களை செய்து, அவர் நாமத்தை மகிமைப்படுத்த உதவிசெய்து வருகிறார்.

*கொர்நெலியு என்ற நூற்றுக்கதிபதி தன் குடும்பத்தோடு ஆண்டவருக்கு பயந்து பக்தியாய் நடந்தான் (அப். 10:2). ஆகவே, ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரனாகிய பேதுருவை அவன் வீட்டிற்கு அனுப்பி, அவன் மூலமாய் பரிசுத்த ஆவியானவரை*

*குடும்பத்தார் அனைவர்மேலும் பொழியும்படி செய்தார் (அப். 10:44).*

"இயேசு அழைக்கிறார்" கூட்டங்களுக்கு பலவிதமான மக்கள் வருவார்கள். அவர்கள் பிரார்த்தனை நேரத்தில், "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கதறும்போது, ஆண்டவர் அவர்களின் சரீரப்பிரகாரமான தேவைகளை அருளிச்செய்வதோடு, இரட்சிப்பின் சந்தோஷத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையையும் அவர்கள் உள்ளத்தில் ஊற்றி அவர்களை மகிழ்வித்து அனுப்புவார்.

ஒரு சமயம் மூன்று சகோதரிகள் மேடைக்கு வந்து பின்வருமாறு சாட்சி பகர்ந்தார்கள்: "எங்கள் சகோதரன் பிசாசின் பிடியில் சிக்கி அலைக்கழிக்கப்பட்டதினிமித்தம் பல வருடங்களாய் நாங்கள் குடும்பமாய் கண்ணீரில் வாழ்ந்து வந்தோம். நாங்கள் அடைந்த மனவேதனைக்கு அளவேயில்லை. இங்கு வந்து பிரார்த்தனை செய்தபொழுது, ஆண்டவர் எங்கள் உள்ளத்தில் இறங்கி வந்தார். எங்களை இரட்சித்து, அபிஷேகித்தார்; சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷத்தால் எங்களை நிறைத்தார்!"

*ஆம், ஆண்டவர் நம் அருகில் இருந்து, நம் வேண்டுதலைக் கேட்டு, நம் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் பதில் தருவார்; நம்மை ஆசீர்வதிப்பார்.*

## உபத்திரவத்தில் பரிபூரண சந்தோஷம்!

*"... எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" (2 கொரி. 7:4)*

*நாம் இயேசுவுக்கு பிரியமாய் வாழும்பொழுது, சகல உபத்திரவத்திலேயும், சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷத்தை அவர் நமக்கு அருளுகிறார். இந்த சந்தோஷத்தை ஒருவராலும் எடுத்துப்போடவே முடியாது.*

*தேவனுடைய மனுஷனாகிய மோசே ஆண்டவரை நோக்கி:*

*"தேவரீர் எங்களை சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தை கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" (சங். 90:15)*

*என்று வேண்டுதல் செய்தான். காரணம், ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, பாலும் தேனும் ஓடுகிற கானான்*

தேசத்திற்கு நேராக வழிநடத்தி வரும்போது, வழியில் எதிரிகளாலும், சொந்த ஜனங்களாலும் மிகுந்த பாடுகளை அனுபவித்தான்.

இன்று நம்மில் பலரும் பலவிதமான உபத்திரவங்கள், துன்பங்கள், கண்ணீரின் வழியாய் கடந்து செல்கிறோமல்லவா! வேதமும், "...தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12) என்றே கூறுகிறது.

**நான் ஆண்டவரை ஏற்றுக்கொண்டபொழுது, ஆரம்பத்தில் அதிகமாக வேதம் வாசித்துக்கொண்டிருப்பேன். என் உறவினர் ஒருவர் என்னைப் பார்த்து, "அதிகம் வேதம் வாசிக்காதே, அப்படி வாசித்தால் அதிகமாக உபத்திரவம் வரும்" என்று சொன்னார். அவர் சொன்னபடியே, என் வாழ்க்கையிலும் துன்பங்கள் வந்தன! ஆனாலும், நான் துன்பத்தைக் கண்டு பயப்படவேயில்லை. கடந்த அநேக வருடங்களாக துன்பங்கள், தொல்லைகள், பாடுகள் ஒன்றன்பின்ஒன்றாக வந்துகொண்டேயிருந்தும், அவைகளின் மத்தியில் ஆண்டவருடைய கிருபையே என்னை தாங்கி வருகிறது.**

ஆம், **"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே..."** (புல. 3:22)

என்ற இறைவாக்கு எத்தனை உண்மையானது!

யோசேப்பு என்ற வாலிபன் தனது 17 வயதில் ஆண்டவரை முழுமனதுடன் நேசித்தான். தனது மற்ற சகோதரர்களின் பொல்லாத வழிகளைக் குறித்து, தன் தகப்பனிடம் வந்து சொல்லுவான். அவனுடைய எதிர்காலத்தைக்குறித்து ஆண்டவர் அவனுக்கு காண்பித்த சொப்பனத்தை தகப்பனிடத்தில் கூறிய பொழுது, அவரும்கூட அவனை கடிந்துகொண்டார். அவன் சகோதரர்களோ அவனை பகைத்து, கொலை செய்யவும் தீர்மானித்தார்கள். பொய்யான குற்றச்சாட்டு அவனுக்கு நேராக வந்தது; சிறைச்சாலையில் தள்ளப்பட்டான், அவனோ அந்த பாடுகள் எல்லாவற்றின் மத்தியிலும் ஆண்டவரை விடாமல் பற்றிக்கொண்டான். ஆகவே, கர்த்தர் அந்த கடின சூழ்நிலையிலும் அவனோடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான், அவன் செய்ததையெல்லாம் அவர் வாய்க்கப்பண்ணினார் (ஆதி. 39:2, 21, 23); சிறைச்சாலை தலைவன் கண்களில் அவனுக்கு தயவு கிடைக்கும்படி அருள்செய்தார்.

யோசேப்பு பார்வோன் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தை

அவனிடம் வெளிப்படுத்திக் கூறியபோது, பார்வோன் ஆச்சரியப்பட்டு, யோசேப்பை நோக்கி: "தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரண்மனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன்" என்று சொல்லி, தன் கையில் போட்டிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அவன் கையிலே போட்டு, எகிப்து தேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான் (ஆதி. 41:38-43).

நாட்கள் கடந்தன! தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள். அதேபோல் அவன் சகோதரர்களும் அவனிடத்தில் உதவியை நாடி வந்தபோது, தன் சகோதரர்களை நோக்கி: "நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகுஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்" என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய் பேசினான் (ஆதி. 50:21).

ஆம், ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்களுக்கு உபத்திரவம் உண்டு. அந்த உபத்திரவத்தின் மத்தியிலும் ஆண்டவர் அவர்களுடன் கூடவேயிருப்பார்; உபத்திரவத்தின் பாதையில் சென்ற யோசேப்பின் வாழ்க்கையை ஆசீர்வதித்த கர்த்தர், தேவபக்தியாய் நடக்க விரும்புகிறவர்களின் வாழ்க்கையில் நேரிடும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் அவர்களை விடுவித்து, இரட்டிப்பான ஆசீர்வாதங்களை அருளி கனப்படுத்துவார்!

தேவனுடைய ஊழியர் ஒருவர் மரண இருளின் பாதையில் கடந்து செல்ல நேரிட்டது. அப்போது அவர், "நான் ஆண்டவருக்காய் உண்மையாக உழைத்தேனே! எனக்கு ஏன் இந்த உபத்திரவம், கண்ணீர்?" என்று ஆண்டவரை நோக்கி கதறினார். ஒரு நாள் ஆண்டவர் அவருக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார். அந்த தரிசனத்தில், வெகுதூரம் போய்க்கொண்டிருந்த ஒரு பெரிய சாலை திடீரென்று முற்றுப்பெறுகிறது. அதன்பிறகு பெரிய பள்ளத்தாக்கு. அதையடுத்து கொஞ்சதூரத்தில் அந்த சாலை திரும்பவும் தொடருகிறது. அந்த சாலையில் நடந்து போய்க்

கொண்டிருந்த இந்த தேவ ஊழியர் சாலை முற்றுப்பெற்றதும், "இந்த பள்ளத்தாக்கை எப்படி தாண்டி செல்வது?" என்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, மேலேயிருந்து ஒரு பெரிய கரம் வந்தது. அந்த நேரத்தில் ஒரு குரல், "இந்த கரத்தில் நீ ஏறிக்கொள்" என்று ஒலிக்க, அவர் மகிழ்ச்சியோடு அதில் ஏறிக்கொண்டார். அந்த கரம் அவரை மறுகரைக்கு தூக்கிச் சென்றது. அந்த பள்ளத்தாக்கினுள்ளிருந்த கரிய உருவங்கள், அவரை எப்படியாவது பள்ளத்தாக்கிற்குள் இழுத்துவிடவேண்டும் என்று எட்டி எட்டி குதித்தன! அவை எவ்வளவு உயரமாய் குதித்து எழுந்தனவோ, அவ்வளவுக்கதிகமாய் அந்த நேசகரம் அவரை மேலாக உயர்த்தி, மறுகரைக்கு பத்திரமாய் கொண்டுபோய் சேர்த்தது. மீண்டும் அதே குரல் "தொடர்ந்து செல், பின்னிட்டுப் பாராதே" என்று ஒலித்தது! ஆண்டவர் அற்புதவிதமாக அந்த தேவ மனிதரை மரண இருளிலிருந்து வெளியே கொண்டுவந்தார்.

***"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னை தாங்குவேன்"*** *(ஏசாயா 41:10)*

*என்று வாக்கருளிய தேவன், அக்கினி மதிலாயிருந்து காப்பார் (சக.2:5); ஒன்றும் உன்னை சேதப்படுத்தாது (லூக். 10:19). உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் (ஏசாயா 54:17). வனாந்தரம்போல் இருக்கும் வாழ்க்கையை புஷ்பத்தைப்போல் செழிக்க செய்து (ஏசாயா 35:1), குடும்பத்தை பூரண சந்தோஷத்தினால், பரிபூரண ஆசீர்வாதங்களினால் நிரப்புவார்.*

## சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுவார்!

*தேவனாகிய கர்த்தர் ஒரு நாள் பக்தன் மோசேயிடம், "மோசே, நீ ஆரோனையும் அவனுடைய குமாரர்களையும் நோக்கி, நீங்கள் என் ஜனங்களை (இஸ்ரவேல் புத்திரரை) ஆசீர்வதிக்கும் போது, அவர்களைப் பார்த்து:*

***"...கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னை காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர்... இவ்விதமாய் அவர்கள் என்***

*ஆசீர்வாதத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்"*

*(எண். 6:22-27).*

அதேபோல், இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபியருக்கு எதிராக வந்து பாளயமிறங்கியபோது, அவர்களைப் பார்த்த பாலாக் ராஜா, "ஏராளமான ஜனங்கள் நமக்கெதிராக இருக்கிறார்களே" என்று மிகவும் பயந்து, பிலேயாமை நோக்கி: "நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன், ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தை சபிக்கவேண்டும்" என்று சொன்னான். ஆனால், பிலேயாம் ஆண்டவரிடம் ஜெபித்தபொழுது, "இதோ, (இந்த ஜனங்களை) ஆசீர்வதிக்க கட்டளை பெற்றேன்; அவர் (கர்த்தர்) ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது" *(எண். 23:20)* என்றான்.

ஆம், இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள்! அவர்களை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் *(எண். 24:1).* ஆகவேதான், தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் சாபத்தை நீக்கி, ஆசீர்வாதத்தை கட்டளையிட்டார் *(உபா. 23:5).*

*"அவர் (கர்த்தர்) உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்"*

*(யாத். 23:25)*

என்றே கூறுகிறார்.

**தென் ஆப்பிரிக்கா தேசத்தில் பாஸ்டர் ரோலன்ட்ஸ் என்ற தேவ ஊழியர் ஒருவர் ஊழியம் செய்துவந்தார். அவர் தன் ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலே அதிகமாக கஷ்டப்பட்டார். அங்குள்ள மக்கள் அவர்மீதுகொண்ட பொறாமையினாலும், வெறுப்பினாலும் ஒன்பது முறை ஆகாரத்தில் விஷம் கலந்து கொடுத்தார்கள். ஆனால், அவர் எதை உண்டாலும், அருந்தினாலும் ஸ்தோத்திரம் பண்ணி ஜெபித்து உண்ணுவது, குடிப்பது வழக்கம். ஆண்டவருடைய பாதுகாப்பும், ஆசீர்வாதமும் அவரோடிருந்தபடியினால், அவருக்கு விரோதமாக வைக்கப்பட்ட விஷத்தையும், தீய சக்திகளின் வல்லமையையும் முறித்துவிட்டது.**

ஆண்டவர் நமக்கு கொடுக்கிற ஆகாரத்தையும், தண்ணீரையும் அருந்துவதற்கு முன்பாக, அவரை நோக்கி ஸ்தோத்திர ஜெபம் செய்யும்பொழுது, கர்த்தர் அந்த ஆகாரத்தை ஆசீர்வதிக்கி

றார் (1 தீமோ. 4:4,5); நம் குடும்பத்தின் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுகிறார்!

## கர்த்தருக்கு பயப்படுவோர்மேல் தேவ ஆசீர்வாதம்!

ஆண்டவர், யோபு என்ற பக்தனைக் குறித்து பிசாசிடம்: "(என் மகன்) யோபு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன்" (யோபு 1:8) என்று சாட்சி கொடுத்தார்.

நாமும் யோபைப்போல, ஆண்டவரை உண்மையாய் தேடி, அவரது வழியில் தெய்வ பயத்துடன் நடக்கும்பொழுது, அவர் நம்மையும் ஆசீர்வதிப்பார். நம் தனி வாழ்வையும், வீட்டையும், நமக்கு உண்டான எல்லாவற்றையும் வேலியடைத்து காப்பார். ஏனென்றால், வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தர் (சங். 115:15), அவருக்கு பயந்து அவரைத் தேடுகிற ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பார்.

**ஒரு சமயம் நாங்கள் மூன்று திருமணங்களுக்கு சென்றிருந்தோம். அந்த மணமகன்கள் மூன்று பேரும் ஆண்டவரை அதிகமாய் நேசிப்பவர்கள்! ஆகவே, அந்த திருமண வைபவத்தில் மணமகன் பேசும் தருணம் வந்தபொழுது, அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டவரையே மகிமைப்படுத்தி உயர்த்தி பேசினார்கள். ஒரு மணமகன் நேரே சகோதரர் தினகரன் அவர்களிடம் வந்து, "அங்கிள், நீங்கள் பாட்டுபாடி எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்; நீங்கள் ஆசீர்வதிக்கும்போது ஆண்டவர் எங்களை ஆசீர்வதிப்பார்" என்றார். வேறொரு மணமகன் தன் உரையிலே, "நான் அங்கிள் தினகரனைபோல ஊழியம் செய்ய, வல்லமையாய் ஆண்டவரால் உபயோகிக்கப்பட விரும்புகிறேன்" என்று கூறி, தன் மனைவியோடுகூட சேர்ந்து ஆண்டவரை மணமேடையிலேயே போற்றி துதித்தார். மூன்றாவது மணமகனும் நன்றாய் படித்தவர், நல்ல வேலையில் இருப்பவர்! ஆனாலும், தன்னை மிகவும் தாழ்த்தி ஆண்டவரையே உயர்த்தி பேசினார்.**

ஆம், வாலிபப் பிள்ளைகள் தங்கள் வாலிப நாட்களிலே ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்து, அவரை கனப்படுத்தும்போது, குடும்ப வாழ்வை நிறைவாய் ஆசீர்வதிப்பார். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சிறுவர்களாய் இருக்கும்போதே கர்த்தருக்கு பயப்படும் பயத்தை போதித்தால், அவர்கள் வாலிபர்களாகும்போதும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு வளருவார்கள். குடும்ப

வாழ்க்கையில் இணைக்கப்படும்போது, எல்லாவற்றிலும் கர்த்தருக்கு முதலிடம் கொடுக்க அவர்களாகவே முன்வருவார்கள்; கர்த்தர் அவர்களின் அர்ப்பணிப்பை கவனித்து, சகலவிதங்களிலும் அவர்களை ஆசீர்வதிப்பார்!

### வாசஸ்தலத்தை ஆசீர்வதிப்பார்!

"...நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் (ஆண்டவர்) ஆசீர்வதிக்கிறார்"

(நீதி. 3:33)

"நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு..."

(நீதி. 15:6)

"ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் (நீதிமானுடைய) வீட்டிலிருக்கும்"

(சங். 112:3)

"கர்த்தர் (நீதிமானாகிய) ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார். கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்..."

(ஆதி. 24:1, 35)

### கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதிக்க காரணம் என்ன?

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளை திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்து பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல். 3:10)

ஆம், ஆபிரகாம் கர்த்தரின் கட்டளையின்படி அவனுக்குண்டான ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் (எபி. 7:2).

ஒரு சகோதரி தன் சொந்த வீட்டை விரிவுபடுத்துவதற்காக கடன் வாங்கினபோது, அந்த கடனிலே பத்தில் ஒரு பாகத்தை எடுத்து ஊழியத்திற்கென்று கொடுத்தார்கள். ஆண்டவரின்மேல் அவர்கள் வைத்திருந்த விசுவாசத்தை அவர் கனப்படுத்தி, அவர்கள் கட்டின வீட்டை ஆசீர்வதித்தார். மறுபடியும் அந்த வீட்டை விரிவாக்க நினைத்து கடன் வாங்கினார்கள்; அதிலும் பத்தில் ஒரு பாகத்தை ஆண்டவருக்கென்று கொடுத்தார்கள். நடந்தது என்ன? அவர்கள்

வீட்டுக்கு யார் யார் குடி இருப்பதற்காக வருகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் ஆண்டவர் ஒரு சொந்த வீட்டை கொடுத்து விடுவார். அவர்கள், "அம்மா, எங்களுக்கென்று ஆண்டவர் சொந்த வீட்டை கொடுத்துவிட்டார்; நாங்கள் போய் வருகிறோம்" என்று சொல்லி பரவசத்தோடு செல்வார்கள். ஆண்டவர் அவர்களையும் ஆசீர்வதித்தார், அவர்கள் வீட்டில் தங்கியவர்களையும் ஆசீர்வதித்தார்.

*அதுபோல, ஆண்டவருக்கு கொடுக்கிற ஒவ்வொரு குடும்பத்தின் மக்களையும், அவர்களை சேர்ந்தவர்களையும் அவர் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். நான் என்றைக்கும் இந்த கடனில்தான் வாழவேண்டுமா? எப்பொழுதும் வறுமையில் வாடி தவிக்க வேண்டுமா? என்று பலவிதங்களில் கண்ணீரில் வாழ்கிறீர்களா? ஆண்டவருக்கென்று கொடுத்துப்பாருங்கள்; அவர் உங்கள் குறைவை மாற்றி நிச்சயம் நிறைவைத் தருவார்!*

**கர்த்தர் குடும்பத்தில் அருளும் ஈவுதான் என்ன?**

***"வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம், புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு"*** *(நீதி. 19:14)*

*மனைவியானவள் குடும்பத்தில் மிகமுக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறாள். அவள்தான் ஒரு குடும்பத்திற்கு முதுகெலும்பாய் திகழ்கிறாள். அவள் தனது பிரார்த்தனையின்மூலமாய் குடும்பத்தை கட்டியெழுப்புகிறாள்.*

*குணசாலியான ஸ்திரீ முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றவள் (நீதி. 31:10)*

*அவள், "இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங் கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்கு படியளக்கிறாள்" ((நீதி. 31:15).*

நான் திருமணத்திற்குமுன்பு காலையில் தாமதமாய் (7.00 மணிக்கு) எழும்பிவிட்டு, என் அம்மாவிடம் காபி கேட்பேன்; கொஞ்சம் ஆறிப்போய்விட்டாலும் அம்மாவிடம் சண்டை போடுவேன். திருமணம் நிச்சயிக்கப்பட்டு, அந்த வைபவத்தில், நீதிமொழிகள் 31:10-31 வரையுள்ள வசனங்களை வாசிக்கக் கேட்டதும், என் வாழ்க்கையை பின்னிட்டுப் பார்த்தேன். மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும், "ஆண்டவரே, உம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி, என் சுபாவக்குறைவுகளை எல்லாம் நீக்கி, குணசாலியான பெண்ணாக என்னை மாற்றும். என் புருஷனுக்கு கிரீடமாய் இருக்க, உம் அருள் தாரும்" (நீதி. 12:4) என்று

கண்ணீரோடு ஜெபித்து அன்றைக்கு என் வாழ்வை முற்றிலுமாய் ஆண்டவருக்கு அர்ப்பணித்தேன்.

அதுபோல ஆண்டவருக்கு தங்களை முற்றிலுமாய் அர்ப்பணித்து, குணசாலியான ஸ்திரீயாக வாழ்கிற ஒவ்வொருவரின் குடும்பத்தையும் அவர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

## சந்ததியை ஆசீர்வதிப்பார்!

***"...உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்"***

*(ஏசாயா 44:3)*

***"... செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்"***

*(சங். 112:2)*

ஆண்டவர் நம் குடும்பத்தை ஆசீர்வதிக்க வேண்டுமானால், நாம் ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்து குடும்பமாய் தேவனுடைய சமுகத்தில் உட்கார்ந்து பாடல் பாடி, அவருடைய வார்த்தைகளை வாசித்து, அவருக்கு நன்றி செலுத்தி, அவரை மகிமைப்படுத்தவேண்டும். அப்பொழுது ஆண்டவரின் பிரசன்னம் நம் குடும்பத்தின் மத்தியில் இறங்கிவரும். அந்த நாள் முழுவதும் அவர் நம் குடும்பத்தில் உலாவுவார். யாவற்றிலும் கரம்பிடித்து வழிநடத்துவார். அவரை உண்மையாக தேடுகிற ஒவ்வொரு குடும்பத்தையும் அவர் ஆசீர்வதித்து, தேவபக்தியுள்ள சந்ததியை கொடுப்பார் (மல். 2:15).

சகோதரர் தினகரனின் தகப்பனார் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்தவராயிருந்த நிலைமையிலும், பள்ளிக் கூடத்தில் இயேசுவின் வல்லமையை குறித்த காரியங்களை யெல்லாம் கேட்டு, ஆண்டவர் பக்கமாக தன் வாழ்வை திருப்பினார். தேவ ஊழியர் ஒருவரின் போதகத்தின் மூலம் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். ஆண்டவர் அவரின் பிரார்த்தனையைக் கேட்டு, குடும்பம் முழுவதையும் தம் பக்கமாய் திருப்பினார். அவரது மகன் சகோதரர் தினகரன் மீது, ஆண்டவர் தமது ஒப்பற்ற பரிசுத்த ஆவியானவரை பொழிந்தருளினார். அதைத் தொடர்ந்து சந்ததி சந்ததியாக இந்த தெய்வீக அக்கினி ஒவ்வொருவர் வாழ்விலும் இறங்கியது. ஆண்டவரின் நாமத்தை சந்ததிசந்ததியாக மகிமைப்படுத்துவதை தகப்பனார் கண்டு மகிழவும் அருள்புரிந்தார்.

“அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும், அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள்”

*(ஏசாயா 61:9).*

“உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்”

*(ஏசாயா 59:21).*

என்ற வேத வாக்குகளின்படி, இந்த தெய்வீக ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஆண்டவர், அவருக்கு பயந்து வாழ்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்து, ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம் என்று யாவரும் அறிந்துகொள்ளும்படி செய்வார். சந்ததி சந்ததியாக தேவ ஆவியினால் நிரப்பி இறை ஆசி பெற்ற குடும்பமாய் திகழும்படி அருள்புரிவார்.

# 8. நிலைத்துநிற்கும் குடும்பம்!

(பாகம் - 1)

- சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்

*"நான் (இயேசு) சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" (மத். 7:24,25).*

பல ஆண்டுகளுக்கு முன்பு என் நண்பர் ஒருவர், சற்று மேடான பகுதியில் தன் வீட்டை கட்டினார். அதைப் பார்த்த எல்லோரும் அவரிடம், "நீ உன் வீட்டை கன்மலையின்மேல் கட்டினபடியினால் உன் வீட்டுக் கிணற்றிலிருந்து குடிக்க ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைக்காது" என்றனர். அதன்படியே சில நாட்களுக்குள்ளாக மிகக்கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால், சொற்ப நாட்களுக்குள்ளாகவே பெருமழை பெய்ய ஆரம்பித்தது. எங்கும் தண்ணீர் காடாய் காட்சியளித்தது. மழை நீர் தேங்கியதால், அநேக வீடுகள் சாய்ந்துபோயின. என் நண்பரின் வீட்டை சுற்றிலும் ஒரு சொட்டு தண்ணீர்கூட தேங்கி நிற்கவில்லை. அவரது வீடோ நிலைத்து நின்றது. காரணம், அந்த வீடு கன்மலையின்மேல் கட்டப்பட்டிருந்தது!

*நம்முடைய தேவன் கன்மலை (உபா. 32:4)!*

*நம்முடைய தேவனையன்றி கன்மலையும் யார்? (சங். 18:31)!*

*அந்த கன்மலை கிறிஸ்துவே (1 கொரி. 10:4)!*

கன்மலையாகிய தேவன், "யோவான்" என்ற பக்தனுக்கு காட்சியளித்தபொழுது, அவன் அவரை பின்வருமாறு விவரித்தான்:

*"(பரலோகத்தில்) வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்த சிங்காசனத்தை சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று" (வெளி. 4:3)*

நம்முடைய ஆண்டவர் வச்சிரக்கல் மட்டுமல்ல, அழகிய பதுமராகக் கல்லாகவும் திகழ்கிறார். இந்த அழகிய கல்லின்மீது நம்முடைய இல்லம், கட்டப்படுகிறதினால் தான், என்றென்றும் அசையாமல் நிலைத்து நிற்கிறது.

நம்முடைய இல்லற வாழ்க்கையை அழிக்க, நமக்கு விரோதமாக காற்று, பெருமழை, பெருவெள்ளம் போன்ற போராட்டங்கள் எழும்பி வரும்பொழுது நாம் அழிந்து போவதில்லை. கன்மலையாகிய அவர் நம்மை பார்த்து, "நான் உங்களை தாங்குவேன், ஏந்துவேன், சுமப்பேன், (உங்களுக்கு விரோதமாக வரும் எல்லாவிதமான பெரு வெள்ளத்திற்கும், காற்றிற்கும் விலக்கி) தப்புவிப்பேன்" (ஏசாயா 46:4) என்கிறார்.

**காற்று, பெருமழை, பெருவெள்ளம் போன்ற போராட்டங்கள் நமக்கெதிராக எவ்வாறு எழும்பி வருகின்றன?**

**காற்று!**

ஒரு நாள் வனாந்தரத்திலிருந்து பெருங்காற்று நான்கு திசைகளிலுமிருந்து எழும்பி வந்து, யோபின் வீட்டின்மீது மோதி அதை இடித்து தள்ளியது. அவனுடைய பத்து பிள்ளைகளும், அதற்குள் சிக்கி மாண்டுபோனார்கள் (யோபு 1:19). அவன் எல்லாவற்றையும் இழந்தான்; துக்கத்தின்மேல் துக்கம் அவனை வாட்டி வதைத்தபொழுது, யோபின் மூன்று உயிர் நண்பர்கள் ஓடிவந்து, அவனோடுகூட ஏழு நாட்கள் அழுதுபுலம்பினார்கள் (யோபு 2:12,13). அதன்பின் அவர்கள் வேதனையான வார்த்தைகளைக் கூறி, அவன் உள்ளத்தை உடைத்தார்கள். அப்பொழுது யோபு அவர்களைப் பார்த்து, "உங்கள் வார்த்தைகள் வெறும் காற்றைப் போன்ற வார்த்தைகள், எந்த மட்டும் உங்கள் வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள்; காற்றைப் போன்ற வார்த்தைகளுக்கு முடிவிராதோ?" என்று அங்கலாய்த்து புலம்பினான் (யோபு 19:2; 16:3).

ஒரு கல்லூரியில் ஒரு நல்ல மனிதர் விரிவுரையாளராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு மிகவும் அழகுள்ள மனைவி இருந்தாள். ஒரு நாள் மதியம் இவர் சாப்பிட வீட்டிற்கு வந்தபொழுது, மனைவி தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு நிற்பதைக் கண்டு மனம் பதைத்துப்போனார். "ஏன் இப்படி நிற்கிறாய்?" என்று கேட்டதும், "உங்கள் தாயின் கடின வார்த்தைகளை என்னால் தாங்க முடியவில்லை. தினமும் நெருப்பைப்போல என்மீது எரிந்து விழுகிறார்கள். அவர்களின்

வார்த்தைகள் அக்கினியைப்போல என்மீது கொந்தளித்து வருகிறது. இனி இந்த உலகில் என்னால் வாழ முடியாது. ஆகவே, மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு அக்கினியினாலே என்னை அழித்துக் கொள்ளப்போகிறேன்" என்று மனம் நொந்து கூறினாள். கணவனுக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. ஒரு பக்கம் அன்பு மனைவி, மறுபக்கம் தன் மனைவியை வெறுக்கும் தன் பாசமிகு தாய்! சில வினாடிகளுக்குள் தான் சொன்னபடியே அவரது மனைவி தன் உடலில் தீ வைத்துக் கொண்டாள். கணவன் பதறியபடியே அவளை காப்பாற்ற ஓடோடி வந்தார். அந்தோ, பரிதாபமாக மாண்டுபோனாள்.

*இப்படி தீக்காற்றைப்போல பேசுகிறவர்களின் வார்த்தைகளினால், எரிந்து சாம்பலாகும் குடும்பங்கள்தான் இன்று எத்தனை, எத்தனை!*

*ஆம், அவரது தாயின் நிந்தனையான, நொறுக்குதலான, தீக்காற்றைப்போன்ற வார்த்தைகள் அவர் மனைவியின் உள்ளத்தை உடைத்து, உயிரையே மாய்த்துக்கொள்ளும்படி செய்தது.*

*வஞ்சக வார்த்தைகள் காற்றுக்கு சமானமானவை (நீதி. 25:14). அவைகள் தீக்காற்று (எரே. 4:11), எரிகிற அக்கினி (நீதி. 16:27), தீயை இறைக்கிறது போன்றவை (சங். 57:4). இவைதான் நம் குடும்பத்தின்மேல் காற்றைப்போல வீசி அழித்துப்போடுகின்றன!*

**இதற்கு தப்புவித்துக்கொள்ள என்ன வழி?**

*நானே காற்றுக்கு ஒதுக்கிடம் என்று ஆண்டவர் சொல்லுகிறார் (ஏசாயா 32:2)! பரிசுத்த ஆவியானவரோ சங்காரப்புசல் போன்றவர்! அவர் நெருப்பையும் அணைக்கும் வல்லமையுடையவர் (ஏசாயா 28:2)!*

ஒரு செல்வந்தர் வீட்டில் ஒரு வேலைக்காரப் பெண் இருந்தாள். அந்த பெண்ணிற்கு அடிக்கடி பயங்கர கோபம் வரும். ஒருநாள் அவள் தன்னுடைய கோபக்குணத்தைக் குறித்து மனஸ்தாபப் பட்டு, தன்னை அந்த கோபக் குணத்திலிருந்து விடுவிக்கும்படி, ஆண்டவருடைய உதவியை நாடி, உபவாசத்தோடு பிரார்த்தனை செய்தாள். ஆண்டவர் அவளுடைய பிரார்த்தனையைக் கேட்டு, சங்காரப் புசல்போன்ற தமது பரிசுத்த ஆவியை அவளுக்குள் வல்லமையாய் ஊற்றினார். இந்த சங்காரப் புசல் அவளுக்குள்ளிருந்த கோபம் என்ற தீக்காற்றை ஒரே வினாடியில் முற்றிலுமாய் அடக்கினது. அவள் அன்பே உருவானவளாக, ஒரு தீர்க்கதரிசி

னியாக மாறி, ஆண்டவரால் வல்லமையாக உபயோகப் படுத்தப்பட்டாள். அநேகர் அவளைத் தேடிவர ஆரம்பித்தனர். அந்த வீட்டின் தலைவனும், தலைவியும்கூட அவளை கனம்பண்ணத் தொடங்கினர். மட்டுமல்ல, நாட்டிலுள்ள தலைவர்களும், ஆன்மீக உலகின் தலைவர்களும் அவளிடம் ஆலோசனை கேட்க நாடி வந்தனர். முதிர் வயதிலே அவள் மாண்டபொழுது, அவளுடைய மரித்த உடலை கல்லறைக்கு தூக்கிசெல்ல நகரத்தின் மேயர் போன்ற பெரியோர்கள் பலரும் போட்டியிட்டார்கள். அவளால் அந்த குடும்பத்தினருக்கு எத்தனை பெருமை!

*நெருப்பைப்போல பேசுபவர்கள் இல்லத்தில் இருப்பதினால் தான், பலவிதமான பிரச்சினைகள், சண்டைகள் எழுகின்றன! அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் நிந்திக்கும், இருதயத்தை நொறுக்கும் வார்த்தைகளைக் கேட்டு கலக்கம் ஏற்படுகின்றது. அப்போது இல்லத்தை தாங்கிக் கொண்டிருக்கிற வச்சிரக்கல்லாகிய இயேசுவிடம், "ஆண்டவரே, இந்த வேண்டாத பெருங்காற்றை எங்கள் குடும்பத்திலிருந்து அகற்றிவிடும்" என்று கெஞ்சும்போது, அவர் சங்காரப்புசல்போன்ற தம் ஆவியை அனுப்பி, அற்புதமாய் இல்லத்தை காப்பாற்றுவார்!*

## பெருமழை!

*ஆதியிலே உலகம் கொடுமையினால் நிறைந்திருந்தபோது, அதை அழிப்பதற்காக ஆண்டவர் பெருமழையை கட்டளை யிட்டார். அந்த பெருமழையால் ஏற்பட்ட ஜலப்பிரளயம் மலையின் சிகரங்களையெல்லாம் மூடிவிட்டது. ஆனாலும், "நோவா" என்ற ஒரு நீதிமானை ஆண்டவர் கண்டு, அவனையும், அவனது குடும்பத்தையும் ஒரு பேழைக்குள் வைத்து பத்திரமாக காப்பாற்றினார் (ஆதி. 7:12). இறுதியில் அந்த பேழை அரராத் மலையின் உச்சியில் போய் நின்றது (ஆதி. 8:4). உலகில் அப்பொழுது வாழ்ந்த அனைத்து மக்களும் பெருமழையில் சிக்கி அழிந்து போயினர்! இன்றும்கூட துருக்கிக்கும், ரஷ்யா நாட்டிற்கும் நடுவில், இந்த அரராத் மலை இருக்கிறது. இந்த மலையின் உச்சியில் இருக்கும் அந்த பேழையின் பெரும்பகுதி அழிந்துபோனாலும், அதன் தோற்றம் அப்படியே இருக்கிறது.*

*குடும்பங்களை அழிக்க அடிக்கடி பெய்யும் இரண்டுவித மழையைக் குறித்து வேதத்தில் காணலாம்.*

## ஒழுகச் செய்யும் அடைமழை!

*“அடைமழை நாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரியான ஸ்திரீயும் சரி”* *(நீதி. 27:15)*

*“... மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு”* *(நீதி. 19:13)*

கிராமம் ஒன்றில் ஒரு கணவனும், மனைவியும் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு குழந்தையில்லை. மனைவி எப்பொழுதும் சண்டைபோட்டுக்கொண்டேயிருப்பாள்; கணவனோ வாயைத் திறக்கவேமாட்டார். ஒரு நாள் மாலையில் கணவன் எப்பொழுது வருவார், சண்டை ஆரம்பிக்கலாம் என்று வழக்கம் போல வீட்டு திண்ணையிலே காத்திருந்தாள். திடீரென்று வீட்டின் முன் ஒரு கார் வந்து நின்றது. காரினுள்ளிருந்து நான்குபேர் சேர்ந்து அவளுடைய கணவனை தூக்கிக்கொண்டு வந்து அவள்முன் வைத்துவிட்டு, “அம்மா, இவருக்கு திடீரென்று மாரடைப்பு வந்து உடனே உயிர் போய்விட்டது” என்று கண்ணீர் வடித்தார்கள். அவள் உள்ளம் குமுறி, அந்த பிணத்தின்மீது விழுந்து, கூச்சலிட்டு அழுது புரண்டாள். சிறிது நேரத்தில் அவளது உயிரும் பிரிந்தது. அக்கம்பக்கத்திலுள்ளவர்கள், “அந்த மனிதன் உயிரோடிருக்கும் போது, சண்டைபோட்டே அவனைக் கொன்று விட்டாள். தொடர்ந்து சண்டைபோட மறுஉலகத்திற்கும் போய்விட்டாளே” என்று ஏளனமாக பேசிக்கொண்டனராம்.

*இன்று இப்படிப்பட்ட அடை மழையால் (ஓயாத சண்டையால்) தவிக்கும் குடும்பங்கள் ஏராளம், ஏராளம்!*

## அடித்துக்கொண்டு போகிற மழை!

*“ஏழைகளை ஒடுக்குகிற தரித்திரன் ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடித்துக்கொண்டுபோகிற மழையைப் போலிருக்கிறான்”* *(நீதி. 28:3).*

ஒரு சமயம் வெளிநாடு ஒன்றிற்கு சென்றிருந்தபோது, அங்கிருந்த அகதிகள் முகாம் ஒன்றிற்கு சென்றேன். அவர்கள், “ஐயா, நாங்கள் இந்த நாட்டிற்கு அகதிகளாய் ஓடிவந்து விட்டோம். இங்கே எங்களுக்கு அழகிய வீடுகளை கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையையும் கொடுக்கிறார்கள். ஆனால், பொல்லாதவர்கள் சிலர், ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகை வந்ததும், ‘ஒரு குறிப்பிட்ட தொகையை நீங்கள்

எங்களுக்கு கொடுக்காவிட்டால் உங்களை கொன்றுபோடுவோம்' என்று எங்களை மிரட்டி வாங்கிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். நாங்களோ மீதமுள்ள இந்த சொற்பப்பணத்தில் வாழ முடியாமல் தவிக்கிறோம் என்று கூறி கலங்கினார்கள்.

*இப்படித்தான், பல குடும்பங்களிலும் பொல்லாத மக்களால் வேதனை, பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளால் சஞ்சலம், அன்பற்ற கணவன்மாரால் சண்டைகள், பிரிவினைகள்! இதனால், குடும்பத்தில் சஞ்சலம், வேதனை! ஆனால், அருள்நாதர் இயேசுவை குடும்பத்தில் குலதெய்வமாக ஏற்றுக்கொள்ளும்போது, வச்சிரக் கல்லாகிய அவர், அன்பினால் மக்களை கட்டியிழுக்கிற அவர் (ஓசியா 11:4), அதே அன்பினால் குடும்பத்தை கட்டியெழுப்புவார்.*

## பெருவெள்ளம்!

***"கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்கு பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்கு திடனும், பெருவெள்ளத்துக்கு தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். வறட்சியான இடத்தின் காங்கை மேகத்தினால் தணிவதுபோல், அந்நியரின் மும்முரத்தை தணியப்பண்ணுவீர்; மேகத்தின் நிழலினால் வெயில் தணிகிறதுபோல் பெலவந்தரின் ஆரவாரம் தணியும்"***

*(ஏசாயா 25:4,5).*

*கொடூரமானவர்களின் சீறல் நம்முடைய குடும்பத்தை நோக்கி பெருவெள்ளம்போல் வரும்போது, ஆண்டவர் நமக்கு அடைக் கலமாயிருக்கிறார். அவரே பெரு வெள்ளத்திற்கு புகலிடம் (ஏசாயா 32:2)!*

ஒரு சமயம் ஒரு ஏழைப்பெண் கண்ணீரோடு பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தாள்: "ஐயா, எங்களுக்கு சொத்து என்று இந்த உலகத்திலிருப்பதெல்லாம் ஒன்றரை கிரவுண்டு நிலம்தான். அதை நம்பி தான் நாங்கள் வாழ்ந்து வந்தோம். ஆனால், திடீரென்று எங்களுடைய நிலத்திற்கு அருகில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலமுள்ள ஒரு செல்வந்தர் எங்களுடைய நிலத்தையும் சுற்றி வேலி போட்டார். நாங்கள் அவரிடம் ஓடிப்போய், 'ஐயா, இது எங்கள் நிலம் அல்லவா?' என்று கேட்டதற்கு,' அது உங்கள் நிலம்தான், நான்தான் வேலி போட்டிருக்கிறேன். இனிமேல் அது எனக்கு சொந்தம்' என்கிறார். 'அதற்குரிய பணத்தையாவது எங்களுக்கு கொடுங்கள்' என்று எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தும், 'பணம் எதுவும் கொடுக்க முடியாது. என்ன வேண்டுமென்றாலும்

செய்து பாருங்கள்' என்று பணபலம் படைத்த அந்த மனிதர் எங்களிடம் சீறுகிறார். ஐயா, எங்களிடம் இருந்த ஒரே சொத்தும் போய்விட்டது. நீதிமன்றத்திற்கு போகவும் எங்கள் கையில் பணமில்லை. தயவுசெய்து எங்களுக்காக ஜெபியுங்கள்".

*இப்படித்தான் கொடூரமானவர்களின் சீறல் பெருவெள்ளம் போல் பல குடும்பங்களினுள் எழும்பி வருகிறது.*

## கொந்தளிக்கும் ஜலம்!

*"தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி, கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டுபோயிருக்கும்..." (சங். 124:4,5)*

*ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரண்டுபோகிறது*

*(சங்கீதம் 69:2,15)*

*என்று சங்கீதக்காரன் புலம்பும் அனுபவம் நமக்கும் வரத்தான் செய்கிறது.*

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஊரில் பெரிய நகை வியாபாரி ஒருவர் தனது மனைவி மற்றும் 5 குழந்தைகளுடன் தற்கொலை செய்துகொண்டார். தற்கொலைக்கு முன்பதாக அவர் காவல் துறையினருக்கு பின்வருமாறு ஒரு கடிதம் எழுதியிருந்தார்: "ஐயா, நான் ஒரு மனிதரிடம் என் வியாபாரத்திற்காய் 5 லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தேன். அதை சரியான நேரத்தில் என்னால் திருப்பிக்கொடுக்க முடியாததால், அந்த மனிதன் தகாத வார்த்தைகளால் என்னை திட்டினான். இன்று காலையிலும், 'வாங்கின 5 லட்சம் ரூபாய் கடனை அடைக்க முடியாத நீ எதற்கு வாழ்கிறாய்?' என்று கடினமான வார்த்தைகளை கூறிவிட்டான். அந்த வார்த்தைகள் என்னுடைய உள்ளத்தை கொந்தளிக்கச் செய்து உடைத்துவிட்டன. இனிமேல் வாழ்ந்திருந்து என்ன பயன்? என முடிவுசெய்து, குடும்பமாய் தற்கொலை செய்துகொள்கிறோம். காவல் துறை அதிகாரி அவர்களே, தயவுசெய்து இந்த வீட்டை விற்று அந்த மனிதரின் கடனை அடைத்துவிடுங்கள்".

*இப்படித்தான் பிரச்சினைகள் கொந்தளிக்கும் ஜலம்போல் புரண்டுவந்து நம் தொண்டையை அடைக்கிறது. குடும்பத்தையே கண்ணீரில் மூழ்கும்படி செய்துவிடுகிறது.*

## வெள்ளம் போன்ற சத்துரு!

*"....வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்"*

*(ஏசாயா 59:19)*

*இந்த உலகம் அனைத்திற்கும் கொடிய சத்துரு "பொல்லாத பிசாசு". அவன் யாரை விழுங்கலாமோவென்று வகைதேடி சுற்றித் திரிகிறான். எந்த குடும்பத்தை அழித்து, நாசமாக்கலாம் என்று வெள்ளம்போல் பாய்ந்து வந்து, வாழ்வில் பலவிதமான நோயையும், பாடுகளையும் கொண்டுவந்து போடுகிறான். ஆனால், நம் குடும்பம் வச்சிரக்கல்லாகிய இயேசுவின்மீது கட்டப்பட்டிருந்தால், "நானே சத்துருவுக்கு விரோதமாக கொடியேற்றி அந்த குடும்பத்தை பாதுகாப்பேன்" என்கிறார்!*

ஒரு மந்திரவாதி இருந்தான். யாருக்கு எந்த காரியம் ஜெயமாக வேண்டுமென்றாலும் அதற்கேற்ற மந்திரத்தை செய்து வெற்றி கண்டவன்! ஒருநாள் வாலிபன் ஒருவன் அவனிடம் சென்று, "ஐயா, எங்கள் தெருவில் 'எஸ்தர்' என்று ஓர் அழகான பெண் இருக்கிறாள்; அவளை நான் திருமணம் செய்துகொள்ளும்படி விரும்புகிறேன். அவளோ மறுக்கிறாள்; அவள் எனக்கு வேண்டும்" என்றான். உடனே மந்திரவாதி "500 ரூபாய் கொடு; நான் மந்திரம் செய்கிறேன். அவள் தானாக உன்னைத் தேடி உன் வீட்டிற்கே வருவாள்" என்று கூறி பணம் வாங்கிக்கொண்டு, குறிப்பிட்ட நாளில் எஸ்தருக்காக மந்திரம் செய்ய ஆரம்பித்தான். மந்திரத்தை 100 தடவை சொல்லி முடித்து அடுத்த முறை ஆரம்பித்த உடன் அவன் அருகே இருக்கும் எலுமிச்சம்பழம் சுற்ற ஆரம்பிக்கும். அதுதான் மந்திரம் பலித்துவிட்டது என்பதற்கு அடையாளம். ஆனால், அன்று 101-வது முறை மந்திரத்தை சொல்ல ஆரம்பித்தபோது, திடீரென்று வானத்திலிருந்து ஒரு பிரகாசமான ஒளி இறங்கி வந்து அவன் மந்திரம் செய்துகொண்டிருந்த அறை முழுவதையும் நிரப்பியது. அந்த ஒளியில் ஒருவர் நின்றுகொண்டு, "நானே இயேசு! எஸ்தர் என்னுடைய மகள், நீ அவளை சேதப்படுத்த முடியாது; நிறுத்து உன் மந்திரத்தை. இன்று முதல் நான் உன்னை என் அடிமையாக மாற்றுகிறேன்" என்றார். மந்திரவாதி நடுங்கிப்போனான். அன்றே இயேசுவுக்கு தன் உள்ளத்தை பறிகொடுத்தான்; இன்றும் அவன் ஆண்டவர் இயேசுவின் வல்லமையை குறித்து எங்கும் பிரசங்கித்து வருகிறான்.

*ஆம், வச்சிரக்கல்லாகிய, பதுமராகக்கல்லாகிய இயேசுவின் மீது நம் குடும்பம் கட்டப்பட்டிருக்குமானால், பெருங்காற்று பெருமழை, பெருவெள்ளம், கொந்தளிக்கும் ஜலம் போன்ற துன்பங்கள் குடும்பத்தின்மேல் மோதினாலும் அசைக்கவே முடியாது. நம் குடும்பம் வச்சிரக்கல்லாகிய இயேசுவின்மீது என்றென்றும் நிலைத்து நிற்கும்!*

# 9. நிலைத்துநிற்கும் குடும்பம்!

(பாகம் - 2)

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

குடும்பம் இயேசுவில் நிலைத்திருக்க நாம் செய்யவேண்டிய சில முக்கியமான காரியங்கள்:

## கர்த்தருக்கு பயப்படும் பயம்!

***"கர்த்தருக்கு பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது. அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான், தீமை அவனை அணுகாது"*** *(நீதி. 19:23).*

இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையில் சோர்வு, சலிப்பு, சஞ்சலம் நேரிடுகிறது. ஆனால், கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் திருப்தியாயிருப்பார்கள்; தீமை அவர்களை அணுகாது. தேவகிருபை அவர்களைக் காக்கும். ஏனென்றால், கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கண்கள் நோக்கமாயிருக்கிறது. ஆகவே, "நான் தனிமையாயிருக்கிறேன், எனக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை. நான் ஓர் அநாதை" என்று ஒரு நாளும் அங்கலாய்க்க வேண்டியதில்லை.

ஒரு நாள் ஆகார் என்ற அடிமைப்பெண், "என்னுடைய பிள்ளை மரித்துப்போகப்போகிறான்; இனி என் வாழ்க்கையில் என்ன சந்தோஷம் இருக்கப்போகிறது? எல்லாம் முடிந்து போயிற்று" என்று தனிமையில் கண்ணீரோடு கதறினாள். அவளின் கண்ணீரைக் கண்ட கர்த்தர் அவளைத் தேடிவந்து ஆறுதல்படுத்தி, ஆசீர்வதித்தார். அவள், "என்னை காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா" என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு, "நீர் என்னை காண்கிற தேவன்" என்று பேரிட்டாள் (ஆதி. 16:13) எல்லாராலும் கைவிடப்பட்ட அவளை ஆண்டவர் கைவிடவில்லை.

***"கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்"*** *(சங். 128:1)*

ஒருவேளை திருமண வயதை தாண்டியும் இன்னும் திருமணமாகாமல் மிகுந்த மனவேதனையோடு காத்துக்கொண்டிருக்கிற, திருமணத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிற வாலிபப் பிள்ளைகளுக்கு ஓர் ஆலோசனை. 'ஆண்டவருக்கு பயந்து, அவர் வழிகளில் நான் நடக்கிறேனா?' என்று உங்களை சோதித்து பார்த்து, "ஆண்டவரே, உமக்கு பயப்படும் மகளாக, மகனாக என்

*குடும்பத்தை நான் ஆரம்பிக்க எனக்கு அருள்புரியும்" என்று பிரார்த்தித்து, தீர்மானம்பண்ணுகிற பிள்ளைகளுக்கு, அவர் ஏற்ற வாழ்க்கைத் துணையை அமைத்து தருவார். அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் ஒலிவமரக்கன்றுகளைப்போல இருப்பார்கள். குடும்ப வாழ்க்கையில் பாக்கியமும் நன்மையும் 'உண்டாயிருக்கும்.*

*அநேக பெண்கள், "நான் அழகாய் இல்லையே, கறுப்பாய் இருக்கிறேனே, எனக்கு வாழ்வு உண்டா?" என்று கவலைப் படுகிறார்கள். ஆனால் ஆண்டவர், அழகைப் பார்த்து எவரையும் உயர்த்துகிறதில்லை. "கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" என்றுதான் அவருடைய வார்த்தை கூறுகிறது (நீதி. 31:30).*

ஒரு வாலிபப் பெண் இருந்தாள். அவளை திருமணம் செய்துகொள்வதற்காக வரன்கள் வரும்பொழுதெல்லாம், தேவ மனுஷனாகிய சகோதரர் தினகரன் அவர்களுக்கு, "எனக்கு ஒரு வரன் வந்திருக்கிறது, நான் இவரை திருமணம் செய்து கொள்ளலாமா என்று நீங்கள் பிரார்த்தனை செய்து எழுதுங்கள்" என்று கடிதம் எழுதுவாள். ஒரு குறிப்பிட்ட வரனைக் குறித்து எழுதியபொழுது, சகோதரர் தினகரன் ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்துவிட்டு, "ஆண்டவர் உங்களுக்கென்று இவரையே தெரிந்துகொண்டிருக்கிறார்" என்று எழுதினார். அதன்படியே அந்த சகோதரிக்கு திருமணம் முடித்து வைத்தார்கள். சில மாதங்கள் கழித்தபின்பு, சகோதரரிடத்தில் பிரார்த்தனைக்காக ஆசையோடு தன் கணவரையும் அழைத்து வந்தாள். அந்த சகோதரனோ இடைவிடாமல் சிகரெட் பிடித்துக் கொண்டேயிருந்தார். "ஆண்டவர் தெரிந்தெடுத்த இவரா இப்படியிருக்கிறார்! இந்த சகோதரியின் மனதில் மிகுந்த கவலையிருக்குமே! இவர் எப்படி மாறப்போகிறார்?" என்று பல கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்தன. ஆனால், அந்த சகோதரியின் முகத்தில் எந்தவித கவலையும் இல்லை. தன் கணவனைப் பற்றி ஒரு குறையும் சொல்லவுமில்லை. சகோதரர் தினகரன் அலுவலகம் முடிந்து வந்ததும் அவர்களுக்காக பிரார்த்தனை செய்து அனுப்பி வைத்தார்.

வருடங்கள் கடந்தன! ஒரு நாள் அவர்களின் ஊருக்கு செல்லும் சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைத்தது. இருவரும் சந்தோஷமாக வந்து எங்களை வரவேற்றபோது, அவரது முகத்தில் காணப்பட்ட பெரிய மாற்றத்தைக் கண்டு பிரமித்தோம்! அவர்கள் வீட்டிற்கு சென்று, பிரார்த்தனைசெய்தபோது, அந்த சகோதரியைவிட,

அவர்களின் கணவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அதிகமாய் நிறைந்து, பிரார்த்தனை செய்தார். முடிவில் அந்த சகோதரி, "ஆண்டவர் என் கணவரை முற்றிலும் மாற்றிவிட்டார்; எங்களுடைய குடும்ப வாழ்க்கை மிகவும் ஆசீர்வாதமாக இருக்கிறது; இப்பொழுது நாங்கள் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்துகொண்டிருக்கிறோம். என்னைக் காட்டிலும் என் கணவர் தான் ஆண்டவருக்குள் மிகவும் வைராக்கியமாக இருக்கிறார்" என்றார்கள். நாங்கள் ஆச்சரியமடைந்தோம்!

மனைவிகளே, பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையினால், உங்கள் கணவன்மாரை ஆண்டவருக்குள் ஆதாயப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு பயந்து, அவரை பற்றிப்பிடித்துக்கொண்டு, பயபக்தியோடு கூடிய நல்நடக்கையினால் உங்கள் கணவருக்கு அன்பு காண்பிக்கும் பொழுது, எப்பேர்ப்பட்ட கடின இருதயமுடைய கணவன் மாரையும் மாற்றி, அன்பிற்குள் கொண்டுவரமுடியும் (1 பேதுரு 3:1,2).

## அன்பின் பூரணம்!

*"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பும் நமக்குள் பூரணப் படும்"* *(1 யோவான் 4:12)*

*"தேவன் அன்பாகவே இருக்கிறார்"* *(1 யோவான் 4:8,16).*

ஆகவே, நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புடன் வாழும் போது, ஆண்டவர் நம் குடும்பத்தில் வந்து வாசம்பண்ணுவார்; தேவ அன்பு பூரணப்படும்.

கணவன் மனைவியை, மனைவி கணவரை நேசிப்பது, பெற்றோர் பிள்ளைகளை நேசிப்பது, பிள்ளைகள் பெற்றோரை, பெரியோரை கனப்படுத்துவது, ஊழியர்களை தாங்குவது இவை யெல்லாம் அன்பின் கிரியைகள்!

*"(ஆகவே) நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர் களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்"* *(பிலி. 2:2)*

**குடும்ப வாழ்வில் மனைவிமார் கணவன்மாரோடு நடந்துகொள்வது எப்படி?**

*"சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள்..."* *(1 பேதுரு 3:6)*

*"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்து குறையாது"* *(நீதி. 31:11).*

என் திருமணத்திற்கு முன்னதாகவே ஆண்டவர் என்னை கிருபையாக தம் பக்கம் இழுத்துக்கொண்டார். திருமணத்திற்கான ஏற்பாடுகளை என் பெற்றோர் ஆயத்தம்பண்ணுகிறார்கள் என்று அறிந்ததும், பயம் எனக்குள் எழுந்தது. "இயேசு சுவாமி, அழகு, அந்தஸ்து, வேலை இவைகளைப் பற்றி எனக்கு கவலையில்லை. உம்மைப்பற்றும் பயத்தோடு, உம்மில் அன்பாயிருக்கிற ஒருவரை எனக்கு வாழ்க்கைத் துணையாய் தாரும்" என்று கண்ணீருடன் ஜெபித்தேன். பெற்றோரின் தெரிந்துகொள்ளுதலின்படி திருமணம் நடந்தது. என் கணவர் சகோதரர் தினகரன், மிகுந்த பக்தியுள்ளவர், ஆண்டவரை அதிகமாக தேடுகிறவர். ஆகவே, "நான் என் கணவரை ஆண்டவரிடத்திலிருந்து கிருபையாய் பெற்றுக்கொண்ட ஒரு கனமான பாத்திரம்; அவருக்கு ஊழியம் செய்வது எனக்கு கிடைத்த பெரிய சிலாக்கியம்" என்று எண்ணி காலையில் எழுந்தவுடன் வேதம் வாசித்து ஜெபித்துவிட்டு, நேரத்தை வீணாக்காமல் மிகுந்த கவனத்துடன் எல்லா வேலைகளையும் செய்ய ஆரம்பித்தேன். அன்றிலிருந்து இன்றுவரை ஆண்டவர் என்னை அந்த பாதையில் அதிசயமாய் வழிநடத்தி வருகிறார்.

*ஒருவேளை கணவன்மார் தெய்வ பயமில்லாதவர்களாய் இருந்தாலும், "ஆண்டவரே, நான் உமக்காக வாழ்வதை நீர் கண்ணோக்கிப் பார்த்து, என் கணவரை உம் பிள்ளையாக மாற்றும்" என்று பிரார்த்தித்து, சின்னஞ்சிறு குறைவுகளை பெரிதுபடுத்தாது, அவருக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை செய்து அன்பு செலுத்தும்போது, ஆண்டவரின் அன்பிற்குள் அவர் நிச்சயமாய் ஈர்க்கப்பட்டு, அவருக்கு சாட்சியாய் வாழ அருள் செய்வார்.*

### குடும்பத்தில் மாமனார், மாமியார், கணவரின் உடன்பிறந்தவர்களுடன் கூடி வாழ்வது எப்படி?

*"நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது..."*

*(ரோமர் 5:5)*

*என்ற வசனத்தின்படி, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று தெய்வீக அன்பினால் நிரம்பி வாழ்வது குடும்ப வாழ்க்கைக்கு மிகவும்*

அவசியம். ஆண்டவருடைய அன்பினால் நிறைந்து வாழும் பொழுது மாத்திரமே, கணவரின் பெற்றோரை நம் பெற்றோராகவும், அவருடைய உடன்பிறப்புகளை நம் உடன்பிறப்பினராகவும் எண்ணி அன்பு செலுத்த ஆண்டவர் கிருபை தருவார். குடும்பத்தில் சண்டை, பிரிவினைக்கு இடமேயிராது. தேவசமாதானம் எப்பொழுதும் நிறைவாய் தங்கியிருக்கும்.

ஆண்டவருக்கு தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்த ஒரு சகோதரி திருமணமாகி, தன் கணவரின் வீட்டிற்கு சென்றதும், எல்லோரும் அவளிடத்தில் வந்து, "உன்னுடைய மாமியார் பொல்லாதவர்கள்! அவர்கள் பேசும் கடின வார்த்தையை யாராலும் தாங்க முடியாது. நீ எப்படிதான் வாழப்போகிறாயோ? இவ்வளவு நாட்களும் சந்தோஷமாய் வாழ்ந்தாய்; இனிமேல் கடினமான வாழ்க்கை தான் உனக்கு காத்திருக்கிறது" என்று பயமுறுத்தினார்கள். அவளோ, "நான் எப்பொழுதும் ஆண்டவரையே நோக்கிப் பார்த்து வாழப்போகிறேன்; அவர் என்னை சமாதானமாய் வழிநடத்துவார்" என்றே பதில் கூறிவிட்டு, ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து, "ஆண்டவரே, நீர் இன்றைக்கு எனக்கு சமாதானமான வாழ்க்கையை தாரும்" என்ற ஜெபத்துடன் ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்பாள். அவள் மாமியார் மற்றவர்கள் சொன்னதுபோன்றே கடினமாக நடத்தினார்கள். ஆனால், அவள் அந்த நேரத்தில் ஆண்டவருடைய சமுகத்தில் போய், "ஆண்டவரே, நீரே எனக்கு ஆறுதல்! மாமியாரின் கடின வார்த்தைகள் என் காதில் விழவேண்டாம். உம்முடைய இனிய குரல் மட்டும் என் காதுகளில் தொனிக்கட்டும், நீர் என்னை ஆசீர்வதியும், என் மாமியாரை உம்முடைய அன்பினால் நிரப்பும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்வாள்; அவள் உள்ளத்தில் தேவ அன்பு, சந்தோஷம், ஆறுதல், பெருக்கெடுத்தோடும். பின்பு ஒன்றும் நடவாததுபோல மாமியாரிடத்தில் சென்று அன்போடு பேசுவாள். கடைசியாக, மாமியார் மரிக்கும் தருவாயில், மிகுந்த அன்போடு மருமகளை பார்த்து, "மகளே, நீ எனக்கு மிகவும் பிரியமானவள்! உன்னை நான் எவ்வளவோ வேதனைப்படுத்தியிருக்கிறேன். ஆனாலும், நீ ஒருநாளும் முறுமுறுத்ததில்லை; எந்தவித குறைவோடும் என்னை நடத்தினதுமில்லை. உன் தாயைப்போல் நினைத்து என்னிடம் நடந்துகொண்டாய். ஆண்டவர் நிச்சயமாய் உன்னை ஆசீர்வதிப்பார். அவருடைய ஆசீர்வாதம் உன் வாழ்வில் என்றென்றும் நிறைவாய் தங்கியிருக்கும்" என்று ஆசீர்வதித்தார்கள்.

அன்பு பிள்ளைகளே, நம் இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு ஊற்றப்பட்டிருக்குமேயானால், எப்படிப்பட்ட கடின இருதயம் கொண்ட மாமியாரையும் கிறிஸ்துவின் பக்கமாய் இழுக்கமுடியும். நம் மூலமாய் கிறிஸ்துவின் அன்பு அவர்கள் உள்ளத்திலும் ஊற்றப்படும்பொழுது, அவர்கள் நம்மை நேசிப்பவர்களாகவே மாறுவார்கள். குடும்பத்தில் பிரச்சினைகளுக்கு இடமேயின்றி, சந்தோஷம் நிறைவாய் தங்கியிருக்கும்!

## விசுவாசத்தில் நிலைத்திருத்தல்!

***"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள்..."***

*(1 கொரி. 16:13)*

***"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்"*** *(1 பேதுரு 5:8)*

குடும்ப வாழ்க்கையில், நிலைத்திருக்கவேண்டுமானால், விசுவாசம் மிகமிக அவசியம். எதிராளியாகிய பிசாசு பல்வேறு பிரச்சினைகளைக் கொடுத்து குடும்பத்தை எப்படி அழிக்கலாம் என்று காத்திருக்கிறான். திருடனாகிய பிசாசு கொல்லவும் அழிக்கவும் தான் வருகிறான் (யோவான் 10:10). ஆனால், ஆண்டவர் ஒவ்வொரு குடும்பத்தினரையும் பார்த்து: "நீங்கள் விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள்; உங்கள் குடும்ப வாழ்க்கையில் என் ஜீவனைக் கொடுக்க நான் காத்திருக்கிறேன்; அந்த ஜீவன் உங்களில் பரிபூரணமாக்கப்படவேண்டும்" என்கிறார்.

பிரியமானவர்களே, ஆண்டவரை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. ஏனென்றால், அவர் அதிசயமானவர்! (ஏசாயா 9:6) ஒருவராய் பெரிய அதிசயங்களை செய்கிறவர் (சங். 136:4)! குடும்ப வாழ்க்கையில் இனி குழந்தையே பிறக்காது என்று மருத்துவர் சொல்கிறாரா? கவலைப்படாதிருங்கள்! அன்னாள், தனக்கு குழந்தையில்லாத குறையை ஆண்டவரிடத்தில் கண்ணீரோடு முறையிட்ட பின்பு அவள் முகம் முன்போல் துக்கமுகமாயிருக்கவில்லை (1 சாமு. 1:18); தெய்வீக சமாதானம் நிறைவாயிருந்தது. கர்த்தர் அன்னாளின் விண்ணப்பத்திற்கு பதிலளித்தார். அன்னாளின் விண்ணப்பத்திற்கு பதிலளித்து அவளுடைய மனக்கிலேசத்தை நீக்கி சந்தோஷத்தை அருளிச் செய்தவர், உங்களுக்கும் சந்தோஷத்தை கட்டளையிடுவார்.

நாங்கள் தென் ஆப்பிரிக்க தேசத்திற்கு போயிருந்தபொழுது, தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து ஒருவர் பின்வருமாறு கொடுத்த சாட்சி என் உள்ளத்தை உருக்கியது. "அதிகாலையில் எழும்பி குடும்பமாக ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து அந்நாளை ஆரம்பித்து, இரவில் அவருக்கு நன்றி செலுத்தி அந்த நாளை முடிக்கிறவர்களின் குடும்ப வாழ்க்கை ஆசீர்வாதம் நிறைந்ததாய் இருக்கும்" என்பதைக்குறித்து நான் பேசின ஒலிநாடா ஒன்றை, அவர் காரில் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு நாள் கேட்டாராம். அவர் கிறிஸ்துவை அறிந்தவர்தான். ஆனால், அவருடைய குடும்பத்தில் 'குடும்ப ஜெபம்' இல்லாமலிருந்தது. இந்த செய்தியை அவர் கேட்கக் கேட்க, அவருக்குள் விசுவாசம் பெருகியது. அவரால் தொடர்ந்து காரை ஓட்ட முடியவில்லை; ஓரமாக காரை நிறுத்தி கண்ணீர்விட்டு கதறினார். "ஆண்டவரே! இன்று முதல் நானும் என் வீட்டாரும் யோசுவா சொன்னதுபோல உம்மையே சேவிப்போம், அதிகாலையில் குடும்பமாக உம்மை தேடுவோம்; இரவில் உமக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்" என்று தீர்மானம் எடுத்தார். அன்றிலிருந்து அவர் குடும்பத்தில் ஒரே சந்தோஷம், சமாதானம், யாவற்றிலும் ஆசீர்வாதம்!

*ஆம், குடும்ப ஜெபம், குடும்ப வாழ்க்கையில் ஐக்கியத்தை, ஒருமனதை, ஒற்றுமையை கொண்டுவரும். அதிகாலையில், இரவில் நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் ஆண்டவரை தேடுகிற அன்பானவர்களின் குடும்ப வாழ்க்கையை ஆண்டவர் கட்டியெழுப் புவார். விசுவாசத்தினாலே குடும்பம் நிலைவரப்படும்!*

# 10. நீதிமானின் குடும்பம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

*"... நீதிமான்களுடைய வீடோ நிலைநிற்கும்"*

(நீதி. 12:7)

*"நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை ..."*

(நீதி. 10:30)

என்னுடைய கணவர் சிறுவயதாயிருக்கும்போது, தன்னுடைய சித்தப்பாவோடு அடிக்கடி குளிக்கசெல்வது வழக்கம்! என் கணவருக்கு நீச்சல் தெரியாது. ஆகவே, அவருடைய சித்தப்பா, "மகனே, நான் உனக்கு நீச்சல் கற்றுக்கொடுக்கிறேன்" என்பார். இவரோ, "சித்தப்பா, நான் தண்ணீருக்குள் மூழ்கி விடுவேன்; எனக்கு ஒரே பயமாயிருக்கிறது" என்று கூறி, தண்ணீருக்குள் இறங்கவேமாட்டார். சித்தப்பாவோ, "இல்லை மகனே, நீ தண்ணீருக்குள் குதித்துவிடு" என்பார். அவருக்கு நீச்சல் தெரியாததினால், தண்ணீருக்குள் மூழ்கும்போது, "ஐயோ, நான் தண்ணீரில் மூழ்கப்போகிறேனே" என்று கூச்சலிடுவார். அப்பொழுது சித்தப்பா, "இல்லை மகனே! நான் உன்னை என் கரத்தினால் தாங்கிக்கொள்வேன். பயப்படாதே" என்று சொல்லி தன் கரங்களினால் தாங்கிக்கொள்வார்.

*அதேபோல்தான், ஆண்டவர் இயேசுவின் துணையுடன், நாம் இந்த உலகில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் சறுக்குவது போன்று, வாழ்க்கை முடிந்துபோய் அமிழ்ந்துபோகிறதுபோன்று தோன்றினாலும், அவர் நம்மைப் பார்த்து, "உன் துன்ப நேரத்தில் என் கரத்தை வைத்து, உன்னை தாங்கிக்கொள்கிற பரம தகப்பன் நான்; நீ பயப்படாதே" என்பார்.*

*"... நீதிமானோ நெருக்கத்தினின்று நீங்குவான்" (நீதி. 12:13)*

*என்று வேதம் கூறுகிறபடி, என்ன நெருக்கம் வந்தாலும், நீதியின் பாதையில் நடக்கிறவர்களுக்கு அவர் போதுமானவராயிருப்பார்!*

## யார் நீதிமான்?

*"தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல ..."*

(2 கொரி. 10:18)

*இரண்டுபேர் ஜெபம்பண்ணுவதற்காக தேவாலயத்திற்கு*

சென்றார்கள். ஒருவன் பரிசேயன், மற்றொருவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று, "தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலில்லாமல், பரிசுத்தவானாக இருப்பதற்காக உம்மை துதிக்கிறேன். நான் வாரத்தில் இரண்டுமுறை உபவாசம் செய்கிறேன்; ஒழுங்காக தசமபாகம் கொடுக்கிறேன்" என்று தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான்.

அந்த ஆயக்காரனோ, தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பில் அடித்துக் கொண்டு, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று தன்னை தாழ்த்தி ஜெபம்பண்ணினான். தன்னைத்தான் புகழ்ந்த அந்த பரிசேயனல்ல, 'தேவாலயத்திற்குள் பிரவேசிக்க தான் தகுதியற்றவன்' என்ற எண்ணத்தோடு தூரத்தில் நின்று, தேவசமுகத்திற்கு முன்பாக தன்னை தாழ்த்தி, 'தான் ஒரு பாவி' என்று அறிக்கையிட்ட ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டான் *(லூக். 18:13,14)*.

**ஆண்டவர் நீதிமானின் குடும்பத்தை எப்படி நெருக்கத்தினின்று நீங்கலாக்குகிறார்?**

## நெருக்கத்தில் அடைக்கலம்!

**"... எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்கு தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்"** *(சங். 59:16)*

**"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்"** *(சங். 91:1,2)*

**"(தேவனே) நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்;... நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்"** *(சங். 71:3)*.

என்று சங்கீதக்காரன் கர்த்தர் தனக்கு அடைக்கலமாயிருப்பதை வர்ணிக்கிறான்.

ஒரு குடும்பத்தில் திடீரென்று குடும்பத்தின் தலைவர் இறந்துபோனார். தாய் மிகவும் சிரமப்பட்டு, தன் மூன்று சிறு குழந்தைகளையும் பராமரித்து வந்தார்கள். பிள்ளைகளுக்கு அடிக்கடி ஆண்டவரைப் பற்றி கூறுவதோடு, துன்பங்கள், கஷ்டங்கள் வரும்பொழுது, "நீங்கள் இயேசுவின் நாமத்தை

சொல்லுங்கள்; அவர் உடனே இறங்கிவந்து உங்கள் கஷ்டங்கள் எல்லாவற்றையும் நீக்குவார்" என்று கற்பித்து வந்தார்கள். அந்த ஏழைத்தாய் விதைத்த வார்த்தைகள் அந்த பிஞ்சு உள்ளங்களில், அப்படியே பதிந்துவிட்டன!

நாட்கள் கடந்தன! ஒரு நாள் அந்த பிள்ளைகள் மூவரும் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்தார்கள். எப்பொழுதும் உற்சாகமாய் ஓடியாடி வேலைசெய்துகொண்டிருக்கும் தாய், அன்று வீட்டில் படுத்துக்கிடப்பதைக் கண்டு கண் கலங்கினர். தாயினருகில் சென்று, "அம்மா, அம்மா" என்று அழைத்தார்கள். அவர்களோ சத்தம் கொடுக்கவில்லை. அந்த தாயின் கண்கள் மூடியேயிருந்தது. "ஆபத்து நேரத்தில் இயேசுவையே நோக்கி கூப்பிடுங்கள்" என்று தாயார் சொல்லிக்கொடுத்த வார்த்தைகள், அவர்கள் நினைவுக்கு வந்தன! மூவரும் சேர்ந்து கைகளை கோர்த்துக்கொண்டு, "இயேசுவே, நீர் இறங்கிவந்து எங்கள் அம்மாவை தொட்டு, எங்கள் அம்மாவின் சுகவீனத்தை மாற்றும், எங்கள் அம்மா எங்களுக்கு வேண்டும்" என்று கண்ணீரோடு முறையிட்டு, சோர்வடைந்தவர்களாய், அந்த இடத்திலேயே தூங்கிவிட்டார்கள். சிறுபிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், அந்த பிள்ளைகள் மூவரின் ஜெபத்தையும் கேட்டார்; தாய் திடீரென்று கண்விழித்தபோது, பிள்ளைகள் மூவரும் தன் அருகில் தூங்கிக்கொண்டிருப்பதை பார்த்து பிரமித்தார்கள்! சற்று நேரத்தில், பிள்ளைகள் விழித்ததும், நடந்ததெல்லாவற்றையும் தங்கள் தாயாரிடம் கூறியதும், தாயார் பிள்ளைகளை அரவணைத்து, முத்தமிட்டு மகிழ்ச்சியுடன் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்கள்.

*ஆம், சஞ்சல நேரத்தில், நெருக்கத்தில் நம்பிக்கையோடு ஆண்டவரை அண்டிக்கொள்பவர்களுக்கு, அவர் நிச்சயம் விடுதலை, அடைக்கலம் தருவார்!*

## நெருக்கத்தில் துணை!

*"அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் (இயேசு) நெருக்கப்பட்டார் ..." (ஏசாயா 63:9)*

*சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று எபிரெய வாலிபர்கள் கர்த்தருக்காக வைராக்கியமாக நின்று, அவரை தஞ்சமாக கொண்டார்கள். நேபுகாத்நேச்சார் என்ற ராஜா, தான் பண்ணுவித்த பொற்சிலையை, இம்மூவரும் வணங்காததினால்*

*அவர்களை அக்கினி சூளையிலே போடும்படி கட்டளையிட்டார். அவர்கள் மூவரும் கட்டுண்டவர்களாய் அக்கினி சூளையில் போடப்பட்டபொழுது, ராஜாவே வியக்கும்வண்ணம் ஒரு சம்பவம் அந்த அக்கினி சூளையில் நிகழ்ந்தது. ராஜா பிரமித்து, தீவிரமாய் எழுந்து தன் மந்திரிமார்களை நோக்கி, "மூன்று புருஷரையல்லவா அக்கினி சூளையில் கட்டுண்டவர்களாய் போடுவித்தோம்; நாலு பேர் அக்கினியின் நடுவில் விடுதலையாக உலாவுகிறதை காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனின் சாயலாய் இருக்கிறதே" என்று ஆச்சரியத்தோடு கூறினார் (தானி. 3:24,25).*

*யோசேப்பின் வாழ்க்கையிலும், அவன் தவறுகள் ஏதும் செய்யாதபொழுதிலும், அவனை மிகவும் கஷ்டப்படுத்தி சிறைச் சாலையிலே அடைத்தார்கள். சிறைச்சாலையிலும் ஆண்டவர் அவனோடு கூடவேயிருந்தார் (ஆதி. 39:2-23).*

*பக்தன் பவுலும்கூட, எல்லோராலும் கைவிடப்பட்ட நிலைமையில், ஆண்டவர் அவனுக்கு முன்பாக தோன்றி, "பவுலே, திடன்கொள்: நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும் (அப். 23:11) தொடர்ந்து உன் ஊழியத்தை நிறைவேற்று" என்றார்.*

*தாவீதும், "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங். 23:4) என்று நம்பிக்கையோடு கூறினான்.*

1990-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் என் கணவருக்கு ஏற்பட்ட இருதய சுகவீனத்தினிமித்தம், அவரை மருத்துவமனையில் சேர்த்தோம். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நாள் வந்தது. மருத்துவர் என் மகனிடம், "உன் தகப்பனாரை அறுவை சிகிச்சைக்கு கொண்டுசெல்லப்போகிறோம், அதற்கு முன்பாக அவரைப் பார்க்க விரும்பினால் வந்து பாருங்கள்" என்றார். என் மகன் ஓடோடிசென்று, தகப்பனாரை பார்த்தபொழுது, துக்கம் தொண்டையை அடைத்தது. "ஆண்டவரே, உம்மையே நம்பிக்கொண்டிருக்கிற என் தகப்பனாருக்கு மட்டும் ஏன் இந்த வேதனை?" என்று கதறி அழுதான். ஆனால், எனக்கோ அந்த நிலைமையிலும் ஆண்டவர் ஒரு திடமனதைக் கொடுத்தார். "ஆண்டவரே, நீர்தான் என் தஞ்சம்" என்று அவரையே இறுக பற்றிக்கொண்டேன். பல மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. அந்த நேரத்தில் ஆண்டவர் என்னோடுகூடயிருந்து, என்னை

தைரியப்படுத்தி, திடப்படுத்தினார். அறுவை சிகிச்சை வெற்றியாய் முடிய கிருபைசெய்தார்!

***“நானே திராட்சசெடி; நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” (யோவான் 15:5)***

என்று ஆண்டவர் இயேசுவே கூறியிருக்கிறார். ஆகவே, ஒருபோதும் கைவிடாத ஆண்டவரை, நீங்கள் எவ்வளவாய் பற்றிப்பிடித்துக் கொண்டு, வேதம் வாசித்து ஜெபிக்கிறீர்களோ, அவரோடு நேரத்தை செலவழிக்கிறீர்களோ, அவரில் நிலைத்திருக்கிறீர்களோ, அவ்வளவுக்கதிகமாய் அவர் உங்களுக்கு ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார். இயேசு சிலுவையில் தொங்கியபோது, “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” (மத். 27:46) என்று கதறினார். அதேபோல் சோதனை நேரத்தில் “ஆண்டவரே, எனக்கு உதவிசெய்ய யாருமில்லை, நீரும் என்னை மறந்துவிட்டீரோ! உம்முடைய முகத்தை எனக்கு மறைத்துக்கொண்டீரோ” என்று அவரை நோக்கி கதறும்போது, அவர், “நானும் என் பிதாவை நோக்கி கதறினேனே! இப்பொழுது என் பிள்ளைகள் என்னை நோக்கி கதறுகிறார்களே, நான் ஓடோடி சென்று அவர்களுக்கு உதவிசெய்யட்டும்” என்று விரைந்து வந்து உதவிசெய்வார்.

***“அவர் (இயேசு) தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்” (எபி. 2:18)***

அவரை தஞ்சமாய் கொண்டவர்களுக்கு நெருக்கத்தில் அவர் துணைநிற்பார்; கட்டாயம் உதவிசெய்வார்!

## நெருக்கத்தில் விசாலம்!

***“என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்கு செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர் ...” (சங். 4:1)***

***“இந்த ஏழை கூப்பிட்டான்; கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்” (சங். 34:6)***

தாவீதின் வாழ்க்கையில் நெருக்கம் வந்தது. அவனுக்கு இருந்த எல்லா உடமைகளையும், பகைவர்கள் வந்து பறித்துக் கொண்டு போய்விட்டார்கள். அதினிமித்தம் தாவீதோடிருந்தவர்களெல்

லாரும் அவனுக்கு விரோதமாக மாறினார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். அவனோடிருந்த சகல ஜனங்களும் தங்கள் மனைவிமார், குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசத்தினால் அவனை கல்லெறிந்து கொல்லவேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள். அந்த நேரத்தில் தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக்கொண்டான் *(1 சாமு. 30:6)*. ஆண்டவர் கொடுத்த சமாதானம் அவனை சூழ்ந்து கொண்டது. தாவீது ஆண்டவரை பற்றிப்பிடித்துக்கொண்ட படியினால், இழந்த எல்லாவற்றையும் ஒன்றும் குறைவுபடாமல் திரும்ப பெற்றுக்கொண்டான் *(1 சாமு. 30:19)*.

யோனா மீனின் வயிற்றில் சிக்கித்தவித்தபோது,

**"என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தை கேட்டீர்"** *(யோனா 2:2)*

என்றே கூறினான்.

நேபாளத்திலிருந்து ஒரு தம்பதியர், மனைவியின் வயிற்றில் ஏற்பட்ட பயங்கரமான நோயினிமித்தம் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு குறிப்பிட்ட மருத்துவமனைக்கு செல்லும்முன்பு, சகோதரர் தினகரனை பார்த்து ஜெபிப்பதற்காக சென்னையில் உள்ள "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரத்திற்கு வந்தபோது, அங்கிருந்த ஜெபவீரர்கள் அவர்களை மெரினா கடற்கரையில் நடந்த பேரின்பப் பெருவிழா கூட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அன்று நான் தமிழில் பிரசங்கித்தேன். ஆனால், அந்த தம்பதியருக்கு தமிழ் மொழியே தெரியாது. எனினும், தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது, சுகமளிக்க, பிரச்சினைகளை தீர்க்க வல்லமையுள்ளது என்பதை நிரூபிக்கும்படியாக, அந்த வார்த்தைகள் அவர்களது இருதயத்தில் கிரியை செய்தது. ஜெப வேளையில், "ஆண்டவரே, ஜனங்கள்மீது உம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஊற்றும்" என்றே மிகுந்த பாரத்தோடு ஜெபித்தேன். ஆனால், அந்த நேரத்தில் மிகுந்த பலவீனத்தோடு இருந்த அந்த சகோதரி பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள். முடிவில் சாட்சி நேரத்தில் அழைப்பு கொடுத்தபோது, அந்த தம்பதியர் மேடைக்கு ஓடோடி வந்தார்கள். கணவர் மிகுந்த ஆனந்தத்துடன், "பரிசுத்த ஆவியானவர் என் மனைவிக்குள் வந்தபோது, ஆண்டவர் என் மனைவியை வியாதியிலிருந்து

பூரணமாய் விடுதலையாக்கினார்" என்று மெய்சிலிர்க்க சாட்சி கொடுத்தார்.

நான் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவேன்; உங்களைத் தேற்றுவேன், தொய்ந்த ஆத்துமாவை நிரப்புவேன் (எரே. 31:25) என்று சொன்ன ஆண்டவர், நெருக்கத்தில் அவரை நோக்கி கூப்பிடுகிற ஒவ்வொருவரையும் தம்முடைய பரிசுத்த ஆவியினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்புவார்.

ஆம், "கர்த்தருக்கு பயந்து, அவருடைய வழிகளில் நடப்பேன்; அவரையே என் வாழ்க்கையின் குறிக்கோளாக கொள்வேன்" என்று தீர்மானம் செய்கிற ஒவ்வொரு குடும்பத்தினரையும் கர்த்தர் ஆசீர்வதித்து, சங்கீதம் 128-ல், அடங்கியுள்ள அத்தனை ஆசீர்வாதங்களும் குடும்பத்தில் தங்கும்படி கிருபை செய்வார். என்றும் அசைக்கப்படாமல் நிலைத்து நிற்கும் குடும்பமாக திகழச்செய்வார்!

# 11. குடும்பத்தின் பிள்ளைகள்!

- சகோதரன் பால் தினகரன்

**"வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னை பூரிப்பாக்கட்டும் ..."**

*(பிர. 11:9)*

குடும்பத்தில் ஒவ்வொரு வாலிபனும், வாலிபப் பெண்ணும் சந்தோஷமாக இருக்கவேண்டும், மகிழ்ச்சியினால் நிறைந்து பூரிப்படையவேண்டும் என்றே ஆண்டவர் விரும்புகிறார்.

**இந்த சந்தோஷத்தை எவ்வாறு பெறுவது?**

**சிருஷ்டிகரை நினை!**

**"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை ..."**

*(பிர. 12:1)*

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகளை சந்திக்கும் நிலை வருகிறது. ஆகவேதான் வேதம் சொல்கிறது, அந்த தீங்கு வருவதற்கு முன்பதாகவே, இளமையாக இருக்கும்பொழுதே, உன் சிருஷ்டிகரை நினை! அப்பொழுது உன் வாழ்நாள் முழுவதும் சந்தோஷம் உன்னை பின்தொடரும்!

நான் கல்லூரியில் பிரவேசித்தபோது என்னுடைய நண்பர்கள், "நீ சகோதரன் தினகரனின் மகன் அல்லவா! உன் வாழ்வில் உலக இன்பம், ஒன்றையும் நீ அனுபவித்திருக்கமாட்டாய் அல்லவா? ஐயோ எவ்வளவு இன்பத்தை நீ இழந்து போகிறாய் தெரியுமா? பால், உன் அப்பாவுக்கு வயதாகிவிட்டது. ஆகவேதான் பிரசங்கம் செய்கிறார். ஆனால், நீயோ மிக இளமையாயிருக்கிறாய்! உண்மையாக உன்னைப்பற்றி தான் எங்களுக்கு அதிக கரிசனை! தேவன் இந்த உலகத்தை நாம் அனுபவிக்கும்படியாகத்தான் சிருஷ்டித்திருக்கிறார். இந்த வயதில் நீ உலகத்தை அனுபவிக்கா விட்டால் தேவன் மிகவும் துக்கப்படுவார். ஆகவே, எங்களோடு வா! நாங்கள் உனக்கு உலகத்தை காண்பிக்கிறோம்! நமக்குத்தான் ஒன்று தெரியுமே! நாம் மரித்துப்போகும்பொழுது நம்முடைய பெற்றோர்களின் ஜெபம் நம்மை பரலோகத்திற்கு கொண்டுபோய் விடும் என்று! ஆகவே கவலைப்படாதே! நாம் உலகத்தை அனுபவிப்போம்" என்று வஞ்சகமாக கூறினார்கள்.

இன்றும் அநேக வாலிபர்கள் வாலிபப் பிராயத்தில் சிருஷ்டி கரைத் தேடி உண்மையான தெய்வீக சந்தோஷத்தை கண்டடை

*வதற்கு பதிலாக, வாலிப வயது கடந்தபின்பு ஆண்டவரைத் தேட முற்படுகிறார்கள். அது மிகவும் தாமதமாகி விடுகிறது. அதற்குள் தீங்கு அவர்களை ஆழமாய் பற்றிக்கொள்கிறது.*

ஒரு கப்பற்சேதத்தில் இரண்டுபேர் உயிர் தப்பி உயிர்மீட்சி ரப்பர் குழாயில் மிதந்துகொண்டிருந்தனர். காற்று சமுத்திரத்திற்குள்ளே அவர்களை தள்ளிக்கொண்டுபோய் சாகும் தருவாயில் இருந்தார்கள். அந்த சமயத்தில் திடீரென்று ஒரு மனிதன் ஜெபிக்க ஆரம்பித்தான். அவன் ஒரு குடிகாரன்; எப்பொழுதும் போதையிலேயே இருப்பவன். அவன், "இப்பொழுதாவது தேவன் என்னை இரட்சிக்கும்படியாய் நான் தேவனிடத்தில் ஜெபம் செய்யட்டும்" என்று சொல்லி, "ஆண்டவரே, நான் ஒரு மோசமான குடிகாரன் என்று உமக்கு தெரியும். என்னை மன்னியும்! நீர் இப்பொழுது என்னை இரட்சித்தால், நான் இனி குடிக்கவே...' 'மாட்டேன்' என்று கூறி முடிப்பதற்குள், அருகிலிருந்தவன் அவன் கையைப் பிடித்து, "டேய், குடிக்கமாட்டேன் என்று மட்டும் சொல்லி விடாதே! ஏனென்றால், அதோ ஒரு கப்பல் தூரத்திலிருந்து வருகிறதை பார்க்கிறேன், நாம் பாதுகாப்படையப்போகிறோம், இனி ஆண்டவர் நமக்கு வேண்டியதில்லையே" என்றான்.

*சில நேரங்களில் இளைஞர்கள் இப்படித்தான் தங்களை வஞ்சித்துக்கொள்கிறார்கள். தேர்வு நெருங்கினதும், அல்லது வேலைக்காக நேர்முகத்தேர்வுக்கு போகுமுன்பதாகவும் ஆண்டவரை தேடுகிறார்கள். அவர்களின் தேவைகள் நிறைவேறின பின்பு ஆண்டவர் இயேசுவை ஒதுக்கிவிடுகின்றனர். இப்படிப்பட்டோரின் வாழ்க்கையில் சந்தோஷமும், மகிழ்ச்சியும் நிலையாக இருக்க வழியேயில்லை. ஆகவேதான், நீங்கள் இளம் பிராயத்திலேயே சந்தோஷமாயிருக்க, ஆண்டவர் இயேசுவை எப்பொழுதும் நினைவுகூரவேண்டும் என வேதம் வலியுறுத்துகிறது.*

**இந்த சந்தோஷத்தை நாம் எப்படி பெற்றுக்கொள்ள முடியும்?**

*நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிடுகிறேன்.*

ஒரு பிரெஞ்சு தளபதி ரஷ்ய குடிமகன் ஒருவனை கைதுசெய்து, அவனிடம், "நீ இப்பொழுது நெப்போலியனை பின்பற்ற வேண்டும்" என்றார். அதற்கு அவன், "நான் தொடர்ந்து ரஷ்ய ராஜாவுக்கே உண்மையுள்ளவனாயிருப்பேன். நீர் என்ன செய்தாலும் சரி, என் சரீரம் முழுவதும் ரஷ்ய ராஜாவுக்கே சொந்தம். நான் அவரை மறுதலிக்கவேமாட்டேன்" என்றான். இதைக்

கேட்டதும், பிரெஞ்சு போர்வீரர்கள் மிகுந்த கோபத்தோடு அவனை சுட ஆயத்தமானார்கள். ஆனால், அந்த பிரெஞ்சு தளபதி குறுக்கிட்டு, "அதைவிட வேறொன்றை செய்வோம்" என்று சொல்லி, ஒரு கூர்மையான ஊசியை எடுத்து அதிகமாக சூடேற்றி அவனுடைய உள்ளங்கையில் `N' என்ற அடையாளத்தை துளையாக இட்டான். பின்பு அந்த தளபதி ரஷ்ய குடிமகனை பார்த்து, "நீ இப்போது உன்னுடைய சரீரத்திலே நெப்போலியனை சுமந்துகொண்டிருக்கிறாய்; ஆகவே, இப்பொழுதாவது நெப்போலியனை பின்பற்று" என்று சொன்னான். அதற்கு அவன் சற்றும் தயங்காமல், ஒரு கோடரியை எடுத்து, "N என்ற அடையாளம் போடப்பட்ட கை எனக்கு வேண்டாம், இந்த சரீரத்தின் ஒவ்வொரு பகுதியையும், ரஷ்ய ராஜாவுக்கு கொடுப்பதிலேயே சந்தோஷ மடைகிறேன், இதை வெட்டி எறியட்டும்" என்று உறுதியாய் கூறினான்.

இவ்விதமாகவே நீயும் வாலிப பிராயத்திலே உன் வாழ்க்கையை முற்றிலுமாய் ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்கும் போது, அவருடைய சந்தோஷம் உன் இருதயத்தில் பொங்கி வழிவதை காண்பாய். தீங்கு நாட்கள் வந்து, உன்னை உபத்திர வப்படுத்துவதற்கு முன்பு, நித்தியமான சந்தோஷத்தை உனக்கு கொடுக்கக்கூடியவரை நினைத்துக்கொள். அவர் தம் இணையற்ற தெய்வீக சந்தோஷத்தினால் உன்னை நிரப்புவார்.

## குடும்பத்தில் ஞானமுள்ள பிள்ளையினால் சந்தோஷம்!

*"ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்..."*

*(நீதி. 10:1).*

ஒரு குடும்பத்தில் குழந்தை பிறக்கும்பொழுது, பெற்றோர், தாத்தா, பாட்டி மற்றும் உற்றார், உறவினர் எவ்வளவாய் சந்தோஷப்படுகிறார்கள்! குழந்தைக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு செல்லப்பெயரை சூட்டி, கொஞ்சி மகிழ்கிறார்கள்.

என்னுடைய பெற்றோருக்கு, முதலில் இரண்டு குழந்தைகள் நஷ்டமடைந்தபிறகு, நான் மகனாக பிறந்தேன். அப்போது என் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா மற்றும் உறவினர் யாவரும் அடைந்த சந்தோஷத்தை விவரிக்கவே இயலாது. எனக்கு பெயர் வைக்கும் நாள் வந்தபோது, முதலாவது என்னுடைய அப்பாவின் பெயர் எனக்கு சூட்டப்பட்டது. என் தகப்பனார், "இவன் வேதாகமப் பவுலைப்போல இருக்கவேண்டும்" என்று சொல்லி 'பால்' என்று

**பெயர் வைத்தார், என் அம்மா, "வீட்டில் எல்லோருடைய பெயரிலும் `E' என்ற எழுத்து முதலில் வருவதால் `*Emerson*' என்று பெயர் வைத்தார். தாத்தா, "என்னுடைய மாமனார் ஒரு பெரிய பரிசுத்தவான்; ஆகவே அவரது பெயராகிய 'அப்பாதுரை' என்று வைக்கவேண்டும்" என்றார். எங்கள் போதகர் வந்தார், நான் அதிக விசுவாசத்திற்கு பிறகு பிறந்தபடியினால், `*Faith*' என்று பெயர் வைத்தார். இப்படி பல பெயர்களை சூட்டி மிகவும் செல்லமாக வளர்த்தனர்.**

*இப்படி ஒவ்வொரு குடும்பத்திலும், குழந்தைகள் பிறக்கும் பொழுது இருக்கும் சந்தோஷம், அவர்கள் வாலிபர்களாகும்போது இருப்பதில்லை. சில பிள்ளைகள் வாலிப வயதை எட்டியதும், அவர்கள் நடக்கையினிமித்தம், குடும்பத்தினர் சந்தோஷத்தை இழந்து, கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால், "ஞானமுள்ள மகன்" குடும்பத்திற்கு சந்தோஷத்தை கொண்டு வருகிறான்.*

*உன் பெற்றோர் வயது முதிர்ந்தவர்களாகும்போது அவர்களை அநேக பிரச்சினைகள் சூழ்ந்துகொள்கின்றன! ஆனால், வாலிப சகோதரனே, சகோதரியே! உன் குடும்பத்திற்கு நீ தான் சந்தோஷம்! ஆண்டவர் அவ்வாறு உன்னை மாற்ற விரும்புகிறார்.*

**நீ எவ்வாறு உன் குடும்பத்திற்கு சந்தோஷம் கொடுக்க முடியும்? அதற்கான வழிமுறைகள் என்ன?**

*உன் வாழ்வை பிசாசு தொடாமல் பரிசுத்தமாய் காத்துக் கொள்வதிலும், உன் பாடங்களை நன்றாக படித்து முதல் மதிப் பெண்களை பெறுவதிலும், எல்லா நிலைமையிலும் முதன்மையா யிருந்து பெற்றோருக்கு உறுதுணையாயிருந்து, வீட்டு பாரங்களை சுமப்பதிலும், நீ ஞானமுள்ள பிள்ளையாய் இருக்கவேண்டும். அப்போது உன்மூலம் குடும்பத்தில் சந்தோஷம் பெருக்கெடுத் தோடும்.*

***"உன்னை பெற்ற தகப்பனுக்கு செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது, அவளை அசட்டைபண்ணாதே"***

*(நீதி. 23:22)*

*என்ற வேத வசனத்தின்படி, வாலிபப் பிள்ளைகள் பெற்றோரை அசட்டைபண்ணாமல் அவர்களுக்கு செவிகொடுக்கும்போது, அவர்கள் வாழ்வில்தான் எத்தனை சந்தோஷம்! பிள்ளைகளின் வாழ்விலும் ஆசீர்வாதம் நிறைவாய் தங்கும்!*

ஒரு தேசத்தின் ஜனாதிபதியைப்பற்றி பத்திரிகையில் வாசித்தேன். அவர் பாராளுமன்றத்தின் அங்கத்தினராக பதவி ஏற்கும்பொழுது, பின்வருமாறு கூறினார்: "இந்த பதவி, என்னுடைய தாயாரினாலே தான் எனக்கு கிடைத்தது. நான் வளர்ந்த பிறகும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்கள் எனக்கு வேதத்தை கற்றுத்தந்து, துதிபாடலை பாட வைப்பார்கள். நான் எந்த பாட பகுதியை படிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் எனக்கு சொல்வார்கள். அவர்கள் கற்றுத்தருவதையெல்லாம் நான் தவறாமல் பின்பற்றுவது வழக்கம்! ஆகவேதான், இன்று நான் இந்த தேசத்தின் ஜனாதிபதியாய் உயர்ந்திருக்கிறேன்". அவர் ஜனாதிபதியாய் பதவியேற்றபின்பும், ஒவ்வொருநாளும் தன்னுடைய தாயாரின் சுகநலத்தைப் பற்றி விசாரிப்பாராம். திடீரென்று தாயார் மிகவும் வியாதிப்பட்டபோது, அவர்களை சென்று பார்ப்பதற்கு ஒரு சிறப்பு ரயிலை ஏற்படுத்தி சென்றார்; தாயார் அவரை அணைத்து முத்தமிட்டார்கள். பின்பு தன் மகனின் கரங்களிலேயே மரித்து மோட்ச லோகம் சென்றார்கள். அவர் மிகுந்த பரவசத்தோடு, "நான் தேசத்தின் ஜனாதிபதியாக இருந்தாலும், என்னுடைய தாயாரை அசட்டைபண்ணாமல், கரிசனையுள்ளவனாய் இருக்கமுடிந்தது" என்று கூறி அகமகிழ்ந்தார்!

*நண்பனே! நீயும், உன் வயது சென்ற தாயாரை கனப்படுத்தி, உன்னை பெற்ற உன் தகப்பனாருக்கு செவிகொடுப்பதன்மூலம், உன் வாழ்வில் உயர்வு வரும்; அதினிமித்தம் உன் இருதயத்திலும், வாழ்க்கையிலும் சந்தோஷம் பெருகும்!*

## கீழ்ப்படிவதினால் சந்தோஷம்!

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபே. 6:1-3)*

*"என் மகனே, உன் தகப்பன் புத்தியை கேள், உன் தாயின் போதகத்தை தள்ளாதே; அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்கு சரப்பணியுமாயிருக்கும்" (நீதி. 1:8,9)*

என் தாய் எல்லா நேரங்களிலும் நான் எப்படி படிக்கவேண்டும், எழுதவேண்டும், வாழவேண்டும் என்று சிறுவயதிலேயே எனக்கு சொல்லித்தருவார்கள். தேர்வுக்கு செல்லுமுன், எல்லாவற்றையும் அவர்களிடம் ஒப்புவித்துவிட்டுதான் செல்லவேண்டும். அவர்களின் வார்த்தைகளுக்கு நான் கீழ்ப்படிந்ததினிமித்தமே இன்றைக்கு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்!

பெரிய டென்னிஸ் வீரர் மைக்கேல்ச்சாங் ***(Michael Chang)*** தனது 17-வது வயதிலேயே பிரெஞ்சு டென்னிஸ் சாம்பியனாக மாறினார். அவர் ஒரு பேட்டியில் இவ்வண்ணமாக கூறினார்: "என்னுடைய இந்த வெற்றிக்கு காரணம் என்னுடைய தகப்பனார்தான். அவர் பயிற்சி வேளையில் என்னோடுகூட வருவார். ஞாயிற்றுக் கிழமைகளில் என்னை ஆலயத்திற்கு அழைத்து செல்வார். ஆண்டவர் இயேசுவைப் பற்றி எனக்கு சொல்லிக் கொடுப்பார். நான் செய்கிற தவறுகளை எனக்கு சுட்டிக்காண்பிப்பார். ஒரு பக்கம், எனக்கு கற்றுக்கொடுப்பவர் சொல்வதை கேட்பேன்; மறுபக்கம், என் தகப்பன் சொல்லும் புத்திமதியையும் நன்றாக கவனித்து கேட்பேன். ஆகவேதான், ஆண்டவர் இன்றைக்கு என்னை ஒரு பெரிய சாம்பியனாக கனப்படுத்தியுள்ளார். என் வாழ்க்கையில் சந்தோஷம் நிறைவாய் இருக்கிறது".

*நீங்களும் உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, அவர்கள் வார்த்தைகளை கவனமாய் கேட்டு, நன்றாக படிக்கும்பொழுது, நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தால், நீங்கள் செழிப்பதோடு, உங்கள் வாழ்க்கையும் சந்தோஷத்தினால் நிறைந்திருக்கும்!*

## குடும்பத்தினருக்கு சேவை செய்வதினால் சந்தோஷம்!

*ஆண்டவர் இயேசுவும், அவருடைய சீஷரும் கானாவூரில் நடைபெற்ற கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் (யோவான் 2:2). அந்த கலியாண விருந்தில் திராட்சரசம் குறைவு பட்டபோது, இயேசுவின் தாயார் அவரை நோக்கி, "(என் மகனே) அவர்களுக்கு திராட்சரசம் இல்லை" என்றார்கள். தன் தாயாரின் பரிந்துரையைக் கேட்ட இயேசு, ஓர் அற்புதத்தை செய்தார். அங்கிருந்த ஜாடிகளில் தண்ணீரை நிரப்புங்கள் என்று சொல்லி, அந்த தண்ணீரை திராட்சரசமாய் மாற்றினார்.*

*பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வரும்பொழுது, நீங்களும் இயேசுவைப்போல் மாறுவீர்கள் (1 யோவான் 4:17)!*

*"(கடைசி நாட்களில்) நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; ... உங்கள் வாலிபர்கள் தரிசனங்களையும் காண்பார்கள்"*

*(யோவேல் 2:28)*

என்ற வாக்குத்தத்தத்தின்படியே, ஆண்டவர் உங்களுக்கும் செய்யப்போகிறார். உங்கள் மூலமாக குடும்பத்தின் மக்கள் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும்படியாக, ஆண்டவர் தம்முடைய வல்லமையினாலும், பரிசுத்த ஆவியினா லும் உங்களை நிரப்ப விரும்புகிறார்! உங்கள் மூலமாக உங்கள் பெற்றோரோடு பேசுவார், உங்கள் பெற்றோரைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும், வருங்காலத்தைக் குறித்தும் உங்கள் மூலமாய் வெளிப்படுத்துவார்.

**என் தகப்பனார் பரிசுத்த ஆவியின் வல்லமைக்காக 7 வருடங்கள் காத்திருந்து பெற்றுக்கொண்டபோது, அவர் 27 வயது நிரம்பிய வாலிபராக இருந்தார். அன்று இயேசு அவருக்கு தரிசனமாகி, 3 மணி நேரம் அவரோடு முகமுகமாய் பேசினார். அன்றிலிருந்து ஆண்டவர் என் தந்தைக்கு தரிசனமாகி, வரப்போகிற மகிமையை யும், ஊழியத்தின் காரியங்களையும் வெளிப்படுத்துவார். அவர், 30 வயதாயிருக்கும்பொழுது, என் தாத்தா அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, "இயேசு சுவாமியிடம் என்னைக் குறித்து கேட்டு சொல் மகனே" என்று சொல்வார். என் அப்பா தன் தகப்பனாரின் (என் தாத்தாவின்) மீது கைகளை வைப்பார்; இயேசு அவர் மூலமாய் என் தாத்தாவோடு பேசுவார். அப்படியே என் தகப்பனார், குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமாய் திகழ்கிறார்.**

ஆம், முதலாவது உங்கள் சிருஷ்டிகரை நினைவுகூர்ந்து, அவரால் நிரம்பியிருங்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் குடும்பத் திற்கு சந்தோஷத்தை கொண்டு வருவீர்கள்! பெற்றோரின் அறிவு ரைக்கு செவிசாய்த்து, கீழ்ப்படிந்து நடக்கும் நீங்கள், உலகத்தில் ஞானவான்களாய், யாவற்றிலும் சிறந்தவர்களாய் திகழ்வீர்கள்! உங்கள் குடும்பம் இணையற்ற மகிழ்ச்சி நிறைந்த குடும்பமாய் மாறும்.

# 12. இன்பம் நிறைந்த குடும்பம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்"

(3 யோவான் 2).

என்ற வாக்குப்படி, குடும்ப வாழ்வில் கணவனும் மனைவியும், அவர்களோடு சேர்ந்தவர்களும், இன்பத்தை அனுபவிக்கவேண்டும், என்றென்றும் சந்தோஷமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதே ஆண்டவருடைய சித்தம்!

நம் முற்பிதாக்கள் அநேகர், பல ஆண்டுகள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளோடு வயதுசென்ற காலம் வரைக்கும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தான் (ஆதி. 21:1,2). ஏனோக்கு, நோவா போன்ற முற்பிதாக்கள் தேவனோடு சஞ்சரித்தபொழுதிலும், குடும்ப வாழ்க்கையிலும் மனைவி, பிள்ளைகளோடு மகிழ்ச்சியாய் வாழ்ந்தார்கள் (ஆதி. 5:21; 6:10) ). போராட்டங்கள், வியாதிகள், துன்பங்கள், பிரச்சினைகள், கவலைகள் வந்தாலும், ஆண்டவர் இயேசுவோடுகூட வாழும் தம்பதியருக்கு, திருமணமாகி வருடங்கள் பலவானாலும் இல்வாழ்வு இன்பமாகவே இருக்கும்.

**நானும் இந்த இன்பத்தை 43 ஆண்டுகளுக்கு மேலாக என் குடும்ப வாழ்வில் அனுபவித்து வருகிறேன். இன்னும் அநேகர் 50 ஆண்டுகள், ஒரு சிலர் 75 ஆண்டுகள்கூட திருமண வாழ்வில் ஒன்று சேர்ந்து இன்புற்று வாழ்வதை சாட்சியாக சொல்லக் கேட்டிருக்கிறேன்.**

இன்றைய நாட்களில் ஒருசில குடும்பங்கள்தான், இந்த தெய்வீக இன்பத்தை அனுபவிக்கிறார்கள். ஏனையோருக்கு இதன் மேன்மை கண்களுக்கு புலப்படுவதேயில்லை. ஒரு மாதம், ஒரு வருடம், ஏன் ஒருநாள்கூட சந்தோஷமாக வாழாமல், திருமண வாழ்வில் தோல்வியை காண்பவர்களின் எண்ணிக்கை ஏராளம், ஏராளம். இதற்கெல்லாம் காரணம் என்ன?

திரியேக தேவன் அவர்கள் குடும்ப வாழ்வில் இணையாததே!

"...முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது" (பிர. 4:12)

என்று வேதம் கூறுகிறபடி, முப்புரிநூலாகிய திரியேக தேவன், இல்வாழ்வில் இணையும்போது, அந்த குடும்பம் நீடூழி காலம் இன்பம் அனுபவித்து நிலைத்து வாழும். திரியேக தேவன் தம்பதியரோடுகூட வாசம்செய்ய வேண்டுமென்றால், திரியேக தேவனை அவர்கள் ஏகமனமாய் இறுக பற்றிக்கொண்டு, குடும்ப வாழ்க்கையில் அவருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அதற்கு பதிலாக அழகு, பொருள், அந்தஸ்து, பதவி, பட்டம், பவிசு இவைகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பத்தில், தெய்வத்தின் திருப்பிரசன்னம் தங்கி அவர்களை வழிநடத்த முடியாமல் போகிறது. எந்த காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறோமோ, அதே காரியத்தின்மூலம் நமக்கு ஆசீர்வாதம் வரலாம் அல்லது அழிவு வரலாம். ஏனென்றால், ஆசீர்வாதத்தையும், அழிவையும் ஆண்டவர் நம்முடைய கையிலேதான் கொடுத்திருக்கிறார்.

## தெய்வீக அருள் நிறைந்த திருமணம்!

திருமணமாகுமுன்பு, என் தாய் ஒரு நாள் என்னிடம் சொன்னார்கள், "மகளே, உனக்கு ஏற்ற வாழ்க்கை துணைவரை தேடிக்கொண்டிருக்கிறோம்; இது உனக்கு தெரியவேண்டும் என்பதற்காகத்தான் நான் உன்னிடம் சொல்கிறேன்" என்றார்கள். அதுவரை "கவலை" என்பதே இன்னது என்று தெரியாதிருந்த என்னை ஓர் இனம்புரியாத கவலை வாட்டியது. "ஐயோ, நான் பெற்றோரைவிட்டு பிரியவேண்டுமே, எனக்கு வரும் துணைவர் எப்படிப்பட்டவராய் இருப்பாரோ? பக்திமானாய் இருந்தால் பரவாயில்லை; குடிவெறி, பொய், கெட்ட சிநேகம், தெய்வபக்தி இல்லாமை போன்ற காரியங்கள் நிறைந்தவராய் இருப்பாராயின், சந்தோஷமற்ற ஒரு வாழ்க்கை வாழவேண்டுமே! நான் என்ன செய்வேன்" என்பதுதான் அந்த கவலை! அந்த நேரத்தில் என்னுள்ளத்தில் ஒரு யோசனை தோன்றியது. என் வீட்டின் மேலறைக்கு சென்று பணிவுடன் முழங்காற்படியிட்டு, "என் தகப்பனே, இந்த இக்கட்டான நிலையில், நீர் ஒருவரே எனக்கு உதவி செய்யமுடியும். தயவுசெய்து உம்மை அதிகமாய் நேசிக்கிற ஒருவரை எனக்கு துணையாகத் தந்து என்னை சந்தோஷப்படுத்தும்; ஒரு வேளை துன்மார்க்கமாய் ஜீவிக்கும் ஒருவரை நீர் எனக்கு துணையாக கொடுப்பீரானால், அவரை உம்மை நேசிக்கிற மகனாய் மாற்றி, உம்முடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு கிருபை தாரும். இந்த இரண்டு

காரியங்களையும் உம்முடைய கையில் ஒப்புவித்துவிடுகிறேன். என் வாழ்க்கையை மலரச்செய்வது உம்முடைய பொறுப்பு" என்று என் உள்ளத்தைத் திறந்து, ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்தேன். "ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர்" (சங். 65:2), உடனே என் ஜெபத்தை கேட்டார் என்பதற்கு அடையாளமாக, என் உள்ளத்தில் காணப்பட்ட கவலையை முற்றிலும் நீக்கி, என் உள்ளத்தை உலகம் தரக்கூடாத தெய்வீக சமாதானத்தினால் நிரப்பினார்.

நான் பிரார்த்தனை செய்த சில மாதங்களுக்குள்ளாக, தெய்வ பக்தியுள்ள என் தாயும் தகப்பனும், மிகுந்த பிரார்த்தனைக்குப்பின், என் கணவரை எனக்கு துணையாக தெரிந்தெடுத்தார்கள். அதேபோன்று என் கணவருடைய பெற்றோரும் தெய்வ பக்தியுள்ளவர்களாயிருந்தபடியினால், இரு குடும்பத்தினரும் பிரார்த்தனைசெய்து தேவசித்தத்தை அறிந்து, திருமணத்தை முடிவுசெய்தனர். எங்கள் திருமணம் ஆண்டவருடைய பிரசன்னத்துடனும், பெற்றோர், உற்றார் உறவினர் அனைவரின் நல்லாசியுடனும் மிகவும் சிறப்பாக நடந்தது.

நாங்கள் இல்வாழ்க்கையை தொடங்கிய முதல் நாளில்தானே இரண்டுபேரும் ஒருமனதுடன் முழங்காற்படியிட்டு, "எங்கள் தகப்பனாகிய இயேசுவே, இனி நீரே எங்கள் வாழ்க்கையை பொறுப்பெடுத்து நடத்தவேண்டும்; எங்களுக்கு ஞானம், நீதி, பரிசுத்தம் எல்லாம் நீரே (1 கொரி. 1:31)! எங்களுக்கு வழியும் சத்தியமும், ஜீவனும் நீரே (யோவான் 14:6)! உம்முடைய தெய்வீக அன்பினால் ஒவ்வொருநாளும் எங்களை நிரப்பி, உமக்கு பிரியமாய் நடத்தும்" என்று எங்களை முழுவதுமாய் ஒப்படைத்தோம். அன்றிலிருந்து இன்று வரை ஆண்டவருடைய பிரசன்னம் அருமையாய் எங்களை வழிநடத்தி வருகிறது. இதுதான் தெய்வீக இன்பம் நிறைந்த இல்லறம்!

## திருமணம் தெய்வீகமானது!

*இன்று வாலிபர்கள் கண்களின் இச்சையினால், மாம்சத்தின் இச்சையினால், பெண்களோடு அல்லது வாலிப ஆண்களோடு மனம்விட்டு பழகுகிறார்கள்; முடிவில், தாங்களாகவே திருமணம் செய்துகொள்ளவும் முடிவுபண்ணுகிறார்கள். பிரார்த்தனைசெய்து, இறைவனால் வழிநடத்தப்பட்டு திருமணத்தில் ஈடுபடும்போது தான், அவர்களுக்கு சந்தோஷத்தை, ஆசீர்வாதத்தை கொண்டுவரும்*

*என்பதை சற்றும் சிந்தியாமற் போகும் வண்ணம், இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (பிசாசு) அவர்கள் மனதை குருடாக்கிவிடுகிறான் (2 கொரி. 4:4).*

மேலைநாடு ஒன்றிற்கு நாங்கள் சென்றிருந்தபோது, ஒருவர் என்னிடம் பேட்டி கண்டார். அப்போது அவர் கேட்ட கேள்வி: "நீங்கள் எவ்வாறு உங்கள் கணவரை தெரிந்து கொண்டீர்கள்?" நான் பணிவுடன், "என் பெற்றோர் பிரார்த்தனையுடன் தேடி கண்டுபிடித்து எங்களை இணைத்தார்கள்" என்றேன். அவர் மறுபடியும், "அப்படியானால், உங்கள் பெற்றோர் 10, 20 பேரை உங்கள் முன்நிறுத்தி, அவர்களில் ஒருவரை தெரிந்தெடுத்தி ருப்பார்களோ?" என்று சற்று ஏளனமாக கேட்டார். நான், "நீங்கள் நினைப்பதுபோல் 'திருமணம்' என்பது ஏலம் விடுகிற காரியமல்ல! அது தெய்வீகமானது! அந்த உன்னத அனுபவத்தை பெற்றவர்க ளுக்குத்தான் அதன் மேன்மை தெரியும்" என்றேன்.

*என் அன்பு பிள்ளைகளே, ஆண்டவர் உங்கள் இல்வாழ்வு இன்பமானதாய், தெய்வீகமானதாய் இருக்கவேண்டுமென்றே விரும்புகிறார். அதற்கு அவரே முக்கியமான அஸ்திபாரமாய் இருக்கிறார் என்பதை சற்றும் மறந்துவிடாதிருங்கள்.*

## கர்த்தரே உங்கள் பங்கு!

*திருமணத்தில் இணையப்போகும் தம்பதியரில் ஒருவர் பக்தியுள்ளவராகவும், ஒருவர் பக்தியற்றவராகவும் இருக்கலாம். இது மிகவும் கடினமான ஒரு காரியம்தான். ஆண்டவர் இயேசு, "மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்" (மத். 19:26) என்கிறார்.*

ஒரு சகோதரி திருமண வாழ்வில் பக்தியற்ற கணவனை துணையாக பெற்றார்கள். அந்த கணவர் "ஜெபம் என்றால் என்ன விலை?" என்று கேட்பவர். "இவரோடு எப்படி பக்தியாய் வாழ்வது?" என்ற கேள்விக்குறி சகோதரியின் உள்ளத்தில் எழும்பினாலும்,

*"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவு படாது" (சங். 34:10)*

*"...கேளுங்கள். அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 16:24)*

என்ற வேத வசனங்களை உறுதியாய் பிடித்துக்கொண்டு, உபவாசத்திலும், ஜெபத்திலும் காத்திருந்து, "ஆண்டவரே, நான் உம்மை விடப்போவதில்லை; உம்முடைய வார்த்தையின்படி, என் கணவரை என்னைவிட அதிக பக்தியுள்ளவராக மாற்றும்" என பிரார்த்தனை செய்தாள். நாட்களும், வருடங்களும் கடந்தன! அவருடைய வாழ்க்கையில் கொஞ்சமும் மாற்றமில்லை. ஆனால், அந்த சகோதரியோ, சற்றும் சோர்ந்துபோகாமல் விடாப்பிடியாக ஆண்டவருடைய சமுகத்தில் அழுது புலம்பினாள். ஆண்டவர் அவள் கூக்குரலை கேட்டார்; கண்ணீரை கண்டார்.

ஒரு சமயம் இந்த சகோதரி நற்செய்தி கூட்டம் ஒன்றிற்கு சென்றிருந்தாள். இரவு நேரமானதால் தன் மனைவியை அழைத்துவர கணவர் அந்த இடத்திற்கு சென்றார். தேவ ஊழியர், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அந்த வார்த்தைகள் அவருடைய உள்ளத்தைத் தொட்டன; ஆண்டவர் நேரடியாக தன்னோடு பேசுவதை உணர்ந்து, தன்னுள்ளத்தில் குத்துண்டவராய், கண்களிலிருந்து கண்ணீர்வழிய, "ஐயோ, நான் இத்தனை நாட்களாக, ஆண்டவருடைய அன்பை அறியாமல் போனேனே; இனி என் நாட்களை உலக இன்பத்திலும், ஆசாபாசங்களிலும் கழிக்கமாட்டேன்; இப்பொழுதே என் உள்ளத்தை ஆண்டவருக்கு கொடுக்க விரும்புகிறேன்" என்று சொல்லி, தன் கடந்தகால பாவங்களுக்காக உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு அழுதார்! தேவ ஊழியர், "இன்று நான் இயேசுவோடு வீட்டிற்கு செல்லவேண்டும் என்று விரும்புகிறவர்கள் எழுந்து முன்னால் வருவீர்களா?" என்று அழைப்பு கொடுத்தபோது, இந்த மனிதரும் முன்னே எழுந்து சென்றார். தூரத்திலே இதைக் கண்ணுற்ற அவருடைய மனைவிக்கு, தன் கண்களை நம்பமுடியவில்லை. இது நனவா? அல்லது கனவா? என்று யோசித்துக்கொண்டு, தானும் ஓடிச் சென்று, தன் கணவரின் அருகில் நின்றாள். இரண்டுபேரும் ஆண்டவருடைய சமுகத்தில் தங்கள் இல்வாழ்வை ஒப்புவித்தார்கள்.

*"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்"...*
*(யோவான் 14:27)*

*என்று திருவாய்மொழிந்த ஆண்டவர் இயேசுவின் சமாதானம் அவர்கள் இல்வாழ்வை நிறைத்தது. அதன்பிறகு அந்த வீடு ஜெபவீடாய், இன்பம் ததும்பும் இல்லறமாய் மாறியது!*

பக்தியற்ற கணவனோடு/மனைவியோடு வாழ்க்கை நடத்தும் சகோதர, சகோதரிகள், இந்த சகோதரியைப்போல், ஆண்டவரே உங்கள் பரிகாரி என்பதை மறந்துபோகாமல், உங்கள் வாழ்வில் இன்பம் ததும்பும் நாள் வரும் வரை, இறைவன் பாதத்தையே பற்றிக்கொள்ளுங்கள்! உங்கள் வாழ்க்கையைக் கண்டு கணவன்/ மனைவி மனந்திரும்பும்படி ஆண்டவர் அருள்புரிவார்; உங்கள் இல்லமும் தெய்வீக இன்பம் நிறைந்த இல்லமாய் பிரதிபலிக்கும்!

## குடும்பத்தில் கணவன் மனைவியின் பங்கு!

ஆபிரகாம் ஆண்டவர்மேல் அன்புவைத்து அவருடைய வழிகளில் தவறாமல் நடந்தான். அவனது மனைவி சாராள், தன் கணவன் ஆபிரகாமை, 'ஆண்டவன்' என்று சொல்லி அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள். இத்தகையோரை 'பரிசுத்த ஸ்திரீகள்' என்று வேதம் கூறுகிறது *(1 பேதுரு 3:5,6)*. குழந்தையற்ற நிலையிலும் அவர்கள் ஒருவரையொருவர் குறைகூறி அதின்மூலம் பிரிவினையை ஏற்படுத்தாமல், முதிர் வயதுவரைக்கும் ஆண்டவரின் வாக்குத்தத் தத்திற்காய் ஒருமனதுடன் காத்திருந்தார்கள். கர்த்தர் அந்த குறையையும் மாற்றிப்போட்டு, அருமையான மகன் ஈசாக்கை குமாரனாக அருளிச்செய்தார்.

ஈசாக்கு தெய்வபக்தியோடு, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானிக்கிற ஒரு மனுஷனாக வளர்க்கப்பட்டான் *(ஆதி. 24:63; சங். 1:1-3)*. ஆகவேதான், ஈசாக்கு தேசத்தில் விதைவிதைத்தபோது கர்த்தர் அதை ஆசீர்வதித்து நூறுமடங்கு பலன் அடையச்செய்தார் *(ஆதி. 26:12)*.

இருப்பினும், ஈசாக்கின் வாழ்க்கையிலும் ஒரு குறை ஏற்பட்டது. அவன் பெற்றோருக்கு ஏற்பட்ட பிரச்சினையைப் போல், ஈசாக்கின் மனைவி ரெபெக்காளும் மலடியாயிருந்தாள்; மலடியாய் இருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலை கேட்டருளி னார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்து *(ஆதி. 25:21)*, இரட்டை குழந்தைகளை பெற்று, குடும்ப வாழ்வில் கணவனும், மனைவியும் சகலவிதத்திலும் ஆசீர்வாதம் பெற்றனர்.

**அநேக குடும்பங்களிலே குழந்தையில்லை என்றதும், மனைவி யின்மேல் குற்றஞ்சாட்டி, "உன்னால்தான் என் குடும்பத்திற்கு குழந்தையில்லை" என்று மனைவியை வேதனைப்படுத்து வார்கள். ஆனால், கணவன் சரீரத்திலும் குறையிருக்கலாம்; அதை**

ஒருவரும் பொருட்டாக எண்ணுவதில்லை. மனைவிதான் குழந்தையை பெற்றெடுப்பவள்; ஆகவே குழந்தையில்லை என்பதற்காக, மனைவியை நிராகரித்து வேறொரு பெண்ணைத் திருமணம்செய்துகொள்வது, ஆண்டவருடைய பார்வையில் பிரியமற்றது என்பதை, மேற்கூறப்பட்ட உதாரணத்தைக்கொண்டு அறிந்துகொள்ளலாம்.

*ஆம், மனைவிக்காக கணவனும், தன் கணவனுடைய தேவைகளுக்காக மனைவியும் பிரார்த்தனை செய்வதும், தேவைகள் நிறைவேற்றப்படும் வரைக்கும் கண்ணீரோடு ஆண்டவரை இருவரும் பற்றிக்கொள்வதும் இன்றியமையாதது!*

பல வருடங்களுக்கு முன்பு, என் கணவர் அலுவலகத்திலிருந்து பல பிரச்சினைகளோடு வருவார். சில சமயங்களில், அவர் சோர்ந்துபோய், "ஆண்டவருடைய வேலையையும் செய்கிற எனக்குள், இந்த வங்கி வேலையை ராஜினாமா செய்துவிடலாம் போல் இருக்கிறது. எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும், சில குறிப்பிட்ட மேலதிகாரிகள் எப்போதும் குறைசொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள், அவர்கள் நாவிலிருந்து புறப்படுகிற கடின வார்த்தைகள், என் நெஞ்சை வேதனைக்குள்ளாக்கு கின்றன" என்பார். அவருக்கு மறுமொழியாக, "ஆண்டவரால் எந்த நிலைமையையும் மாற்றியமைக்க முடியும். ஆகவே கவலைப் படாதிருங்கள். நான் உங்களுக்காய் கண்ணீரோடு உபவாசத் தோடு, உங்கள் பாடுகள் மாறும்வரைக்கும் பிரார்த்தனை செய்கிறேன்" என்று அவரை ஆறுதல்படுத்திவிட்டு, பிரார்த் தனை செய்வேன். ஆண்டவர் பிரார்த்தனையைக் கேட்டு, அந்த பிரச்சினை இடந்தெரியாமல் மறைந்துபோகும்படி செய்து, என் கணவருக்கு உத்தியோக உயர்வை கொடுத்து ஆசீர்வதித்தார்.

*பிரியமானவர்களே, குடும்பத்தில் துன்பங்கள், இழப்புகள், குறைவுகள் வரும்போது, ஒருவரையொருவர் தேற்றி பிரார்த்திக்க வேண்டுமேயொழிய, யோபின் மனைவியைப்போல் தூஷித்து, கைவிடுவது சரியல்ல. சில சமயங்களிலே கணவன் மனைவியை கைவிடுவதுபோலவும், மனைவி கணவனை கைவிடுவதுபோலவும் தோன்றும். அந்த நிலைமையிலும் பக்தியுள்ள கணவனும் மனைவியும்: "நான் போகும் வழியை அவர் (கர்த்தர்) அறிவார்; அவர் என்னை சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10) என்று கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்ட யோபைப்போலவும், "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்"*

(சங். 34:1) என்று சொன்ன சங்கீதக்காரன் தாவீதை போலவும், கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து அவரை பற்றிக்கொள்ளும் பொழுது, கர்த்தர் எல்லா இக்கட்டுகளையும் மாற்றி, இன்பமும், மகிழ்ச்சியும் குடும்பத்திலே நிலைத்திருக்கச்செய்வார்!

## குடும்ப வாழ்வை கட்டும் மனைவி!

***"இருவரும் (கணவனும், மனைவியும்) ஒரே மாம்சமாயிருப்பார்கள்"***
*(எபே. 5:31).*

*திருமணம் ஆகும்போது, ஆரம்பத்தில் ஒருவரையொருவர் எப்படி நேசிக்கிறோமோ அதேபோன்று, எத்தனை வயது ஆனாலும், இறுதிவரை ஒருவரையொருவர் நேசிக்கிற அன்புதான் தெய்வீக அன்பு. ஆனால், நாகரீகம் நிறைந்த இந்த நாட்களிலே நாம் பார்க்கிற ஒரு வேதனையான காரியம், திருமணமாகி பிள்ளைகளை பெற்றபின்பும்கூட, ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் மாம்ச இச்சைகளுக்கு தங்களை உட்படுத்தி, கணவனையும் பிள்ளைகளையும்விட்டு, அல்லது மனைவியைவிட்டு, பிள்ளைகளை விட்டு கணவன் ஓடுவதும், இன்றும் குடும்பங்களிலே சாதாரணமாக நடக்கிற ஒரு காரியமாக இருக்கிறது. இவ்விதமாய் வழிவிலகுவதின் காரணம், அவர்கள் உள்ளங்களில் ஆண்டவர் இயேசுவின் அன்பு இல்லாமல் இருப்பதுதான்.*

தேவ ஊழியர் ஒருவரின் குடும்பத்தில் இப்படிப்பட்ட வேதனையான ஒரு சம்பவம் நடந்தது. மூன்று குழந்தைகளைவிட்டு, வேறு ஒரு இளைஞன் பின்னாலே ஓடினாள் மனைவி. அந்த ஊழியர், ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து, "ஆண்டவரே, உம் பெயருக்கு இழுக்கு உண்டாகியிருக்கிறதே! என் பிள்ளைகளுக்கு சமாதானம் இல்லையே! என் குடும்ப வாழ்க்கை உடைந்து போய்விட்டதே! நீர் தான் என் குடும்பத்தை கட்டவேண்டும், திரும்பவும் நாங்கள் குடும்பமாய் உமக்கென்று வாழும் மேலான கிருபையை எங்களுக்கு தாரும்" என்று ஒவ்வொருநாளும் கண்ணீருடன் பிரார்த்தித்து வந்தார். அநேக நேரங்களில் தன்னைத் தாழ்த்தி உபவாசத்தோடும் பிரார்த்தனை செய்தார். ஜெபத்தைக் கேட்கும் ஆண்டவர், அந்த பெண் யாரை நாடி ஓடினாளோ, அந்த மனுஷன் ஒரு சில மாதங்களுக்கு பிறகு அவளை வெறுத்து ஒதுக்கினான். அவள் தள்ளப்பட்ட பரிதாப நிலைமையிலே விட்டுச்சென்ற தன் கணவரிடத்தில், பிள்ளைகளிடத்தில் கண்ணீரோடு வந்தாள். கணவர் தன்னை ஏற்றுக்கொள்வாரோ என்ற கவலையோடு, கண்ணீரோடு தன்னை தாழ்த்தி,

அவரிடம் மன்னிப்பு கேட்டாள். ஊழியர் அவளை மனதார மன்னித்தார். ஆண்டவர் அந்த குடும்பத்தை திரும்பவுமாக கட்டியெழுப்பினார்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! அருமை பிள்ளைகளே, ஆண்டவரோடு இணைந்துவாழும் உன்னத இல்வாழ்விற்கு நீங்கள் பங்கம் விளைவித்திருக்கிறீர்களா? உங்கள் கணவனுக்கோ, மனைவிக்கோ துரோகம் நினைத்திருக்கிறீர்களா? அல்லது வேஷம் போடும் பிசாசின் குணத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? சற்று ஆராய்ந்து பார்த்து, அவரிடத்தில் உங்கள் குறைகளை அறிக்கையிடுங்கள்.

***"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"*** *(1 யோவான் 1:9)*

என்ற வசனத்திற்கேற்ப, ஆண்டவர் உங்களை மன்னிப்பார். உங்கள் இல்வாழ்வை திரும்பவும் கட்டி இன்பமயமாக்குவார்.

## இல்லாமையில் இன்பம்!

***"போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்"*** *(1 தீமோ. 6:6).*

***"நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்"*** *(1 கொரி. 13:10)*

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். ஆகவே, உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அதுபோதுமென்றிருக்கக் கடவோம் என்கிறார் பவுலடிகள்.

நான் ஒரு சமயம் கடைத்தெரு ஓரமாக சென்றுகொண்டிருந்த பொழுது கண்ட ஒரு காட்சி, என்னை மெய்சிலிர்க்க வைத்தது! குஷ்டரோகத்தினால் கை கால்கள் சூம்பியவனாக இருந்த தன் கணவனை, மனைவி ஒரு கட்டை வண்டியில் வைத்து, தள்ளிக்கொண்டுபோய், ஓர் இடத்தில் அவனை உட்கார வைத்து, பிச்சை கேட்டு கிடைத்த பணத்தை வைத்து, இருவரும் முகமலர்ச்சியுடன், ஏதோ வாங்கி சமைத்து சாப்பிட்டு சந்தோஷமாக காலங்கழிக்கிறார்கள்.

இந்த தம்பதியரின் இல்வாழ்க்கை எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை கொடுத்தது! இல்லாமையிலும் அவர்கள் தங்கள் இல்வாழ்க்கையில் எவ்வளவாய் இன்பத்தை அனுபவிக்கிறார்கள்! ஓடோடி உழைத்து குடும்பத்தை காக்கவேண்டிய தலைவன்

உடைந்துபோன நிலைமையிலே இருக்கிறான். இந்நிலையில் தன் கணவனின் சுகவீனத்தையும், அவன் ஒன்றுக்கும் உதவாமல் இருப்பதையும் அவள் பொருட்படுத்தவுமில்லை, கேவலமாக நினைக்கவுமில்லை. அதற்கு பதிலாக, அவனுக்கு ஒத்தாசை செய்வதில், மனைவிக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி! இரண்டுபேரும் ஒருவரையொருவர் ஆழமாய் நேசிக்கும் அன்பே, அந்த நிலைமையிலும் அவர்களை மகிழ்ச்சியாக வைத்தது!

ஒருசில குடும்பங்களிலே வியாதியுள்ள கணவன் அல்லது மனைவி இருக்கும்பொழுது, கணவனோ, மனைவியோ அவர்களுடைய வியாதியை பெரிதாக்கி குறைகூறி, ஏற்கனவே நொந்து போயிருக்கும் அவர்கள் மனதை, "எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தாற்போன்று" வேதனைப்படுத்தும் வார்த்தைகளை பேசி, ஒருவருக்கொருவர் மனவேதனையை உண்டாக்கி, குடும்ப வாழ்க்கையின் இன்பத்தை இழந்து தவிக்கிறார்கள்.

மனைவி அதிகம் படிக்காதவளாய், வேலைக்கு போகாத நிலைமையில் இருக்கும்போது, எதிர்வீட்டு பெண்கள் வேலைக்கு செல்வதை நோட்டமிடும் கணவன், "ஒவ்வொரு பெண்ணும் எவ்வளவாய் படித்து வேலை செய்து சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள்; நீயோ ஒன்றுக்கும் உதவாதவள்" என்று வேண்டாத வார்த்தைகளைப் பேசி, தன் மனைவியின் மனதை புண்படுத்துகிறான். மனைவி, "நான் வேலை செய்து அதிகமாய் சம்பாதிக்கிறேன், என்னால்தான் குடும்பம் நடக்கிறது; உம்முடைய சம்பளம் குறைவாயிருக்கிறதே" என்று சொல்லி கணவனை துக்கப்படுத்துகிறாள். இதனால் குடும்ப வாழ்க்கையில் சமாதானமின்மை ஏற்பட்டு பிரச்சினைகள் ஆரம்பமாகிறது.

அன்பானவர்களே, உங்கள் இல்லத்தில் ஏற்படும் இல்லாமையை, குறைவுகளை பெரிதுபடுத்தாமல் ஆண்டவர் அருளிச் செய்த ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, "போதுமென்கிற" மனதுடனேகூடிய திருப்தியுள்ளவர்களாக வாழும் பொழுது, உங்கள் இல்வாழ்க்கை இன்பம் நிறைந்ததாய் மாறும்.

## மேலானவைகளைத் தேடும் குடும்பம்!

**"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்"** *(கொலோ. 3:2)*

இன்றைக்கு எத்தனையோ தம்பதியர் அழகு பிரச்சினையால் இல்வாழ்க்கையின் இன்பத்தை இழந்து தவிக்கிறார்கள். ஆனால், ஆண்டவருக்கு பயந்து மேலானவைகளை தேடுகிற இல்வாழ்க்கையில் சஞ்சலம் ஏற்பட வழியே இராது.

ஒரு குடும்பத்திலே ஒரு பெண் அதிக கறுப்பு நிறம் கொண்டவள். அவளை திருமணம் முடிக்க யார் வரப்போகிறார்? என்று பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னதற் கேற்ப ஒரு குடும்பத்தினர் வந்து அவளை பார்த்துவிட்டு, சரி என்றார்கள்; பின்னர் அவள் கறுப்பு நிறம் என்று சொல்லி, அவளை நிராகரித்துவிட்டனர். ஆனால், அவள் பெற்றோர் சோர்ந்துபோகவே யில்லை. சில நாட்களுக்குள்ளாக வேறொரு குடும்பத்தார் அவளை பார்ப்பதற்காக வந்தனர். அந்த பெண் குணசாலியென்று கேள்விப்பட்டு, திருமணத்திற்கு சம்மதித்தனர். பெண்ணின் பெற்றோர், "எங்கள் மகள் கறுப்பு, உங்கள் மகன் அவளை விரும்புவாரா? அவரை வந்து பார்க்க சொல்லுங்கள்; அதன்பிறகு முடிவுபண்ணலாம்" என்று சொன்னார்கள். அவர்களோ, "எங்களுக்கு உங்கள் பக்தியுள்ள குடும்பமும், உங்கள் மகளுடைய குணாதிசயங்களும்தான் தேவை. நிறத்தையோ, அழகையோ நாங்கள் பார்த்து வரவில்லை; எங்கள் மகன் பெற்றோராகிய எங்கள் வார்த்தையை மீறமாட்டான். ஆகவே தைரியமாய் மேற்கொண்டு காரியங்களை செய்யலாம்" என்றார்கள். அப்படியே திருமணம் முடிந்தது. திருமணமானபொழுதுதான், மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் பார்த்தனர். பெற்றோர் சொன்னதுபோன்றே மணமகன், அவளை ஒரு குறையும் சொல்லாமல் சந்தோஷமாக தனக்கு மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

*ஆம், சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும்வீண். ஆகவே நீங்கள் கர்த்தருக்கு பயப்படும் பயத்துடன், இல்லற வாழ்வில் இன்பத்தை குலைக்கும் பிசாசின் கிரியைகளையெல்லாம் ஆண்டவருடைய சமுகத்திலே ஒப்படைத்துவிட்டு, அவருக்கு மட்டுமே உங்கள் வாழ்வில் இடம் கொடுங்கள்.*

***"உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்"*** *(ஏசாயா 26:3)*

*என்ற வேத வசனத்தின்படி, உங்கள் குடும்ப வாழ்க்கையில் அவருக்கு முதலிடம்கொடுத்து வாழும்பொழுது, பூரண சமாதான மும், சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும். குடும்பவாழ்வு இன்பமயமானதாக மலரும். இந்த இன்பத்தினை இதை வாசிக்கிற உங்களுக்கு, விசேஷமாக புதுமண தம்பதியராகிய என் அன்பு பிள்ளைகளுக்கு ஆண்டவர் நிறைவாய் அருளிச்செய்வாராக!*

# 13. பரலோக குடும்பம்!

- சகோதரன் பால் தினகரன்

*"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரி. 5:1 ).*

*இந்த நித்திய வீட்டைக் குறித்து லூக்கா 16:9, பிரசங்கி 12:5 ஆகிய வசனங்களிலும் காணலாம்.*

**எவைகள் நித்தியமாய், இந்த உலகில் அல்லது மறு உலகில் இருக்கின்றன?**

*"காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரி. 4:18)*

*என்று வேதம் கூறுகிறது.*

**நாம் காணக்கூடியது எது?**

*இந்த உலகம் தான்! அநித்தியமான இந்த உலகத்தைத்தான் அனுதினமும் நம்முடைய கண்களால் பார்த்து வருகிறோம்.*

**இந்த உலகம் எப்படிப்பட்டது?**

*இந்த உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் (1 யோவான் 2:17), இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறது (1 கொரி. 7:31), நிலையான நகரம் நமக்கு இங்கே (இந்த உலகத்தில்) இல்லை (எபி. 13:14) என்றே வேதம் கூறுகிறது.*

இத்தாலி தேசத்தில் "பாம்ப்பே" என்று ஒரு நகரம் இருக்கிறது. இந்த நகரம் 2000 வருடங்களுக்கு முன்பு தோன்றிய ஒரு நகரம். அது ரோம சாம்ராஜ்யத்தில் மிகவும் அதிகாரம் நிறைந்த ஒரு நகரமாக இருந்தது. நாங்கள் ஒருவிசை அந்த பட்டணத்தை போய்பார்த்தபொழுது பிரமிப்படைந்தோம்! இன்றும் அந்த பட்டணத்தில் அழகிய பளிங்குக்கற்களாலான உயர்ந்த சுவர்கள், அழகிய ஓவியங்கள், வீடுகள் இருக்கின்றன. பல வருடங்களுக்கு முன்பு திடீரென்று ஒரு நாள் அந்நகரத்தின் உயரமான மலை எரிமலையாக வெடித்து, அதிலிருந்து கந்தகக் குழம்பு புறப்பட்டு வந்து, செழிப்பான அந்நகரத்தையும், அங்கு வாழ்ந்த மக்கள் அனைவரையும் ஒரே நாளில் அழித்துப்போட்டது. ஒவ்வொரு வீட்டையும் பார்த்தால் சடலங்களும், எலும்புகளும் எரிமலையினால் மூடப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது.

ஆம், இந்த உலகம் நிரந்தரமானது அல்ல; உலகமும் அதிலுள்ளவைகளும் நிலையற்றவைகள். அவைகள் ஒரு நாளில் அழிந்துபோம். 2100-ம் வருடம் வரும்பொழுது, உலகத்தின் நதிகள் அருகில் இருக்கும் சகல பட்டணங்களும் அழிந்துபோகும், கடற்கரைகள், எல்லா மலைகளின் சிகரங்களும் சுருங்கிப்போகும் என்று விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள்.

ஆனால், இரண்டு காரியங்கள் நித்தியமானவைகள்!

**சர்வ வல்லமையுள்ள தேவாதி தேவன் நித்தியமானவர்!**

*"அவர் (தேவன்) நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதி! ராஜாதி ராஜா! கர்த்தாதி கர்த்தா! (1 தீமோ. 6:15)! நித்திய ராஜா (எரே. 10:10) கர்த்தர் சதா காலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார் சங். 10:16)! என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர் (சங். 102:25,26)! பூமியும் வானங்களும் அழிந்துபோம்; கர்த்தரோ என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் (உபா. 32:40)!*

*ஆகவேதான்: "நான் ஆபிரகாமின் தேவன், நான் அவனை வழிநடத்தினேன்; அவன் மரித்துப்போனான். அவனுக்குப்பிறகு அவன் மகன் ஈசாக்கு தோன்றினான். அவனுடைய தேவனாகவும் இருந்து, அவனையும் வழிநடத்தினேன்; அவனும் மரித்துப்போனான். அவனுக்கு ஒரு குமாரன் யாக்கோபு பிறந்தான். அவனுடைய தேவனாகவும் இருந்து, அவனையும் வழிநடத்தினேன்; அவனும் மரித்துப்போனான். இந்த மூன்று தலைமுறைக்கும் நான் தேவனாயிருந்து, வழிநடத்திவந்தேன். அவர்கள் ஒவ்வொருவரும் கடந்துபோனார்கள். ஆனால், நானோ என்றென்றும் ஜீவித்திருக்கிறேன், தலைமுறை தலைமுறைக்கும் நானே தேவன்!" என்கிறார் நித்தியமானவராயிருக்கிற தேவன்!*

பல வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் என் தந்தை, எதிர்காலத்தை குறித்து நம்பிக்கையில்லாத நிலைமையில், இனிமேல் வாழ முடியாது என்ற பரிதாபமான சூழ்நிலை வந்தபோது, தேவனுடைய ஆவியானவர் தம்முடைய வல்லமையினால் அவரை நிரப்பி, ஆவியில் பரலோகத்திற்கு அழைத்து சென்றார். என் தந்தை அங்கு கண்ட காட்சி அவரை மெய்சிலிர்க்க வைத்தது! இயேசுநாதர் சர்வ வல்லமையுள்ளவராக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். சகல நட்சத்திரங்களும், சந்திரன், பூமி, சூரியன் யாவும் ஆண்டவருடைய சிங்காசனத்தை சுற்றி வரும்பொழுது, அவருக்கு முன்பாக குனிந்து வணங்குவதைப்போன்று சுற்றிக் கொண்டிருந்தது. ஆண்டவர் தம்முடைய வார்த்தையினால் சகலத்தையும் நடத்தி

வருவதைக் கண்டார் (எபி. 1:3). அவர் என் தந்தையைப் பார்த்து, “மகனே, நான் அண்டசராசரங்களையும் படைத்து, ஆண்டு வருவதை நீ காண்கிறாய். இந்த சந்திரனையும், சூரியனையும், பூமியையும் அதினதின் பாதையிலே நடத்தும் என்னால், உன் சிறு வாழ்க்கையை நடத்த முடியாதா? நீ ஏன் வீணாய் கவலைப் படுகிறாய்?” என்றார்.

ஆம், ஆண்டவர் இன்றும் நித்தியமானவராக, நித்திய ராஜா வாக சிங்காசனத்திலே வீற்றிருக்கிறார்.

## விண்ணுலகம் நித்தியமானது!

நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால் காணக்கூடாத விண்ணுலகம் நித்தியமானது! அதை ஆண்டவர்தாமே கட்டியெ ழுப்பிவருகிறார். ஆகவே, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் நமக்கு உண்டு (எபி. 10:34).

**ஆண்டவர் யாருக்காக அதை கட்டிக்கொண்டிருக்கிறார்?**

ஆண்டவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து, “இன்னும் கொஞ்சநாள் தான் உங்களோடு இருக்கப்போகிறேன். அதன்பின் நான் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ண போகிறேன்; அதை ஆயத்தம்பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்” என்றார் (யோவான் 14:1-3).

ஆம், “விண்ணுலகம்” என்று ஒன்று உண்டு. அங்கே தேவனுடைய நகரம் இருக்கிறது. ஆகவே, நாம் அனாதைகளல்ல, திக்கற்றவர்களுமல்ல, நாம் தேவனுடைய வீட்டார் (எபே. 2:19).

பல வருடங்களுக்கு முன்பு ஒரு தேவனுடைய மனிதர், ஆவியில் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்குள்ள நகர வீதிகளில் பல அறைகளைக்கொண்ட விதம்விதமான அழகிய வீடுகளைப் பார்த்தார்! ஆண்டவர் அவரிடம், “இந்த வீடுகள் எல்லாவற்றையும் நானே என் பிள்ளைகளுக்காக கட்டிக்கொண்டி ருக்கிறேன். குறிப்பாக, இந்த உலகத்தில் வீடுகள் இல்லாமல் தவிக்கும் மக்கள் ஒரு வீடு இல்லாமலேயே மரிக்கும் நிலை வருகிறது. ஆனால், அவர்கள் உள்ளத்திலே ஒரு வாஞ்சை, “ஐயோ, இப்படியொரு வீடு எனக்கிருந்தால் எவ்வளவு நன்றாயி ருந்திருக்கும்”. அவர்களுடைய விருப்பங்களையெல்லாம் நான் அறிந்து, அவர்கள் விருப்பங்களின்படியே, அவர்களுக்கு இங்கே ஒரு வீட்டைக் கட்டியெழுப்புகிறேன்” என்று சொன்னார்.

ஆம், ஆண்டவர் நமக்கு ஒரு வீட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

**ஆண்டவர் நமக்காக கட்டும் வீடு எப்படிப்பட்டது?**

*அது நித்தியமான வீடு!*

ஆண்டவருக்காக கடினமாக உழைத்த போதகர் ஒருவர் 90 வயதுவரைக்கும் வாழ்ந்தார்; திடீரென்று வியாதிப்படுக்கையிலானார். ஒரு நாள் அவர் தன் மனைவியைப் பார்த்து, "நான் ஓர் அழகிய நகரத்தைக் காண்கிறேன். அதோ பரலோகம் எனக்கு முன்பாக திறந்திருக்கிறது" என்றார். அவ்வளவுதான்! அதற்குள் அவர் உயிர் பரலோகிற்கு சென்றது.

*ஆம், நித்தியமான ஆண்டவர் கட்டியெழுப்பும் ஒரு நகரம் நமக்கு உண்டு. அந்த நித்திய வீட்டிற்கு ஆண்டவர் நம்மை அழைத்து சென்று நித்தியகாலமாக வாழவைக்கப்போகிறார். அதைத்தான் சங்கீதக்காரன், "...நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங். 23:6) என்று பரவசத்தோடு கூறுகிறான்!*

**இந்த நித்திய வீட்டிற்குள் நாம் எப்பொழுது கடந்து செல்ல முடியும்?**

*நாம் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும்பொழுது, நம்முடைய சரீரத்தை மண்ணில் புதைத்துவிடுகிறார்கள். ஆனால் நமக்குள் இருக்கிற ஆத்துமா நம்மைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட வாழ இந்த நித்திய நகரத்திற்குள் செல்கிறது (பிலி. 1:23). ஆம், நாம் மரணத்தை கண்டபிறகே நம்முடைய ஆத்துமா இந்த நித்திய வீட்டிற்குள் பிரவேசிக்க முடியும்.*

பல வருடங்களுக்கு முன்பு ஒரு கொள்ளைக்காரன் பலரை கொலை செய்துவந்தான். ஒரு நாள் போலீசார் அவனை கைது செய்ய முயன்றபோது ஓடமுற்பட்டான். உடனே ஒரு போலீஸ் அதிகாரி அவனை சுட்டு வீழ்த்தினார். உயிர்போகும் நிலையில் அவனை மருத்துவமனைக்கு தூக்கி சென்றார்கள். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து அவனது உடலில் பாய்ந்த குண்டுகளை எடுக்க முற்பட்டபோது, திடீரென்று அவனது உயிர்போய்விட்டது. ஆனாலும், மருத்துவர்கள் ஆக்ஸிஜன் கொடுத்து, நெஞ்சை அழுத்தி பல நவீன இயந்திரங்களை கொண்டுவந்து அவனுடைய உயிரை திரும்பகொண்டுவர முயன்றார்கள். ஏறக்குறைய 20 நிமிடங்களுக்குப்பிறகு திடீரென்று ஒரு இயந்திரத்தில் அவனுடைய இருதத்துடிப்பு ஆரம்பமாவதை கண்டு ஆச்சரியமடைந்தார்கள்! அவனது உயிர் திரும்ப வந்தது! இரண்டு நாட்களுக்குப்

பிறகு அவனுக்கு நினைவுவந்தபொழுது, மருத்துவரை அழைத்து, "ஐயா, என்னிலிருந்து ஒருவன் எழுந்து வந்தான். நீங்கள் என் நெஞ்சை அழுத்துவதை நான் கண்டேன். அப்பொழுது ஒரு தாதி *(nurse)* ஓடிவந்து ஒரு பாத்திரத்தை என்மீது வைத்தாள்; அது தவறி கீழே விழுந்தது. நீங்கள் அறுவைசிகிச்சை செய்ய முயன்றீர்கள்; உங்கள் கண்ணாடி கழன்று கீழே விழுந்தது. அப்பொழுது நான், "ஐயோ, என்னால் என் உடம்பிற்குள் போக முடியவில்லையே" என்று கதறினேன். அந்த நேரம் ஒரு பயங்கர மான இருள் என்னை சூழ்ந்தது. அந்த இருளுக்குள் நான் ஈர்க்கப்பட்டு, எங்கேயோ அமிழ்ந்துபோவதைப்போன்ற ஓர் உணர்வு, திகில், பயம் என்னுள்ளத்தில் எழும்பியது. என்னைக் காப்பாற்ற ஒருவரும் முன்வரவில்லை. திடீரென்று பிரகாசமான ஓர் ஒளி வந்து அந்த இருளைத் தாக்கியது. அப்பொழுது விவரிக்க முடியாத சமாதானம், சந்தோஷம் என்னை ஆட்கொண்டது. அந்த நேரத்தில் நான் ஓர் இடத்திலே கொண்டு நிறுத்தப்பட்டேன். அங்கு சிங்காசனத்தில் ஒருவர் வீற்றிருந்தார். அவருடைய முகத்தில் பிரதிபலித்த பிரகாசத்தை, அன்பை, பாசத்தை, காருண்யத்தை என்னால் விவரிக்கவே முடியாது. அவர் என்னைப் பார்த்து, "நீ திரும்பிப்போ, உன் வேளை இன்னும் வரவில்லை" என்றார். அடுத்த வினாடி, அந்த ஒளி என் ஆத்துமாவை ஈர்த்து வந்து என் சரீரத்திற்குள் பொருத்தியது. அப்பொழுது நான் புத்துயிர் பெற்றேன். எனக்குள் புது ஜீவன் வந்திருக்கிறது; நான் ஆண்டவரைக் கண்டேன்; நாளொன்று வரும், நான் அவரிடம் திரும்ப செல்வேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

*இன்று நாமும், அவருடைய பிள்ளைகளாக இவ்வுலகில் வாழும் நிலையில் மரிக்க நேரிடுமானால், நம்முடைய ஆத்துமா விண்ணுலகம் சென்று அவரோடு வாழும். எனினும், உலகத்தின் ராஜாக்கள், அதிகாரிகள் எல்லாரும் நடுங்கும்வண்ணம், இயேசு ராஜாதி ராஜாவாக திரும்பி வரப்போகிறார். அவர் திரும்பி வரும்போது, நம்முடைய மரித்த மண்ணான சரீரத்தையும் அவர் உயிரோடே எழுப்புவார் (1 தெச. 4:16, யோவான் 6:40) அவர் நம்மோடு வசிக்கும்படியாகவும், நாம் அவரோடு வசிக்கும்படியாக வும் நம்மை மறுரூபப்படுத்தி, பரலோகத்திற்கு அழைத்து செல்வார்.*

ஒரு சமயம் பிரபல பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வந்தது. எருசலேம் நகரில் ஒரு சகோதரனும், சகோதரியும் நீதிமன்றத்திற்கு

சென்றிருந்தார்கள். காரணம், அவர்களுடைய அன்புத்தாய் மரணமடைந்துவிட்டார்கள். அவர்கள் நீதிமன்றத்தில், "எங்கள் அம்மாவின் மரித்துப்போன சடலத்தை குளிர்சாதன பெட்டியில் வைத்திருக்கிறோம். எங்கள் அம்மாவைவிட்டு எங்களால் பிரிந்திருக்க முடியாது. நாளொன்று வரும், விஞ்ஞானிகள் மரித்தவர்களை உயிரோடு எழுப்பும் வழியை கண்டுபிடிப்பார்கள். அப்பொழுது எங்கள் அம்மாவையும் உயிர்ப்பித்து விடுவார்கள். நாங்கள் எங்கள் அம்மாவை திரும்பப் பெற்றுக்கொள்வோம்" என்றார்கள். நீதிமன்றம் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. "அப்படியென்றால், நாங்கள் அண்டார்டிக்கா போய் எங்கள் அம்மாவின் சரீரத்தை அங்கு பனிக்கட்டியின் அடியில் வைத்து விடுகிறோம்" என்றார்கள்.

*அவர்கள் இவ்விதமாக சொல்லக் காரணம், அவர்களுக்கும் இயேசுவுக்கும் ஐக்கியம் இல்லாததினால், அவர்களின் உள்ளத்தில் உயிர்த்தெழுதலின் வல்லமையைக் குறித்த நம்பிக்கை, இயேசு திரும்ப வந்து தங்கள் தாயை உயிர்ப்பிப்பார் என்ற நம்பிக்கை இல்லாததே. ஆகவேதான் அவர்கள், தவித்துப்போய் சஞ்சலத்திலும், இருளிலும் மூழ்கியிருக்கிறார்கள்.*

*ஆனால், ஆண்டவர் இயேசுவை நேசித்து, அவரை உள்ளத்தில் ஏற்றுக்கொண்ட நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு.*

பிரபல போதகர் ஒருவர் ஓர் உண்மை சம்பவத்தை என் தந்தையிடம் சொன்னார். அவர்களுடைய சபையில் இருந்த மூப்பர் ஒருவர் திடீரென்று ஆலயத்தில் இருக்கும்பொழுது மயங்கிக் கீழே விழுந்து மரித்துப்போனார். அவருடைய குடும்பத்தை ஒருவராலும் ஆறுதல்படுத்த முடியவில்லை. அவரது சரீரத்தை எடுத்து செல்லும் நேரம் வந்தது. அவரது மனைவி, "ஐயா, பெட்டியை மூடாதிருங்கள்" என்று கதறினார்கள். பிள்ளைகள், "எங்கள் அப்பாவை கொண்டு செல்லாதீர்கள்" என்று கதறினர். போதகரால் அவர்களை ஆறுதல்படுத்தவே முடியவில்லை. தொடர்ந்து கண்ணீரிலேயே நாட்களைக் கடத்தினார்கள். போதகர் அவர்களுக்காய் கண்ணீரோடு ஜெபித்து வந்தார். ஒருநாள் பட்டப்பகலில் அந்த சகோதரி வீட்டிலிருக்கும்போது, திடீரென்று அவர்கள் கண்ணெதிரே தன் கணவர் மரித்தபோது அவருக்கு அணிவித்திருந்த அதே உடையை அணிந்தவராய் அவர்கள் கண்முன்பதாக தோன்றினார். தன் மனைவியைப் பார்த்து, "நீ அழாதே! கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்" என்று கூறிவிட்டு, அப்படியே மறைந்து போனார். அந்த காட்சி அவர்களுக்கு மிகுந்த ஆறுதலையும், தேறுதலையும் கொண்டு வந்தது. "என் கணவர்

**ஆண்டவரோடு விண்ணுலகில் இருக்கிறார், நானும் ஒருநாள் இந்த உலகைவிட்டு கடந்து விண்ணுலகம் செல்வேன், என் கணவரை முகமுகமாய் காண்பேன், ஆண்டவர் இயேசுவை தரிசிப்பேன், அவரோடு நித்தியநித்தியமாய் வாழ்வேன்" என்றார்கள். எத்தனை பெரிய ஆறுதல்!**

இந்த நித்திய வீட்டிற்கு செல்ல ஒரே வழி இயேசுவே! ஆண்டவர் இயேசு நம் உள்ளத்திற்குள் வரும்பொழுது, இந்த உலக வீட்டிலும் நம்மோடு தங்குவார்; மரித்தாலும், நிலையான நித்திய வீட்டிற்கு நம்மை அழைத்துசெல்வார்; அங்கே என்றென்றும் நித்திய நித்தியமாய் அவரோடு வாழுவோம். ஆகவே, இந்த உலகில் நாம் அனுபவிக்கும் வேதனைகள், சோதனைகள், பாடுகளை கண்டு சோர்ந்துபோகாமல், முன்னேறிச்செல்வோம்! அவர் நமக்கு எல்லாப் பாடுகளிலிருந்தும் முற்றிலும் விடுதலையை அருளிச் செய்வார் *(ரோமர் 8:36,37).*

***"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்"***

*(1 கொரி. 15:57).*

பிரியமானவர்களே, ஆண்டவர் நமக்கு இவ்வுலகில் நியமித்திருக்கும் நாட்களில், குடும்ப வாழ்க்கையில் நேரிடும் பாடுகளை பிரச்சினைகளை குறைவுகளை பொருட்படுத்தாமல் குடும்பமாய் நித்திய இன்பம் தரும் ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டு, அவருக்காக கொஞ்சக்காலம் பாடுகளை அனுபவித்து, சந்தோஷத்தோடு வாழும்போது, உலக வாழ்க்கையில் ஆண்டவர் இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தருவார். இந்த உலகின் ஓட்டத்தை முடித்து விண்ணுலகம் செல்லும்போதும், நம்மை அணைப்பார், முத்தமிடுவார். விண்ணுலக வீட்டில் நித்தியநித்திய காலமாக அவரோடு இன்பமுடன் வாழ அருள்செய்வார். மேலும், இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, நமக்கு புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாக காணப்படும் *(1 பேதுரு 1:7).*

***"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்"*** *(பிலி. 3:20,21).*

## சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன்,
## சகோதரி ஸ்டெல்லா தினகரன்,
## Dr. பால் தினகரன்
## எழுதிய மற்ற புத்தகங்கள்!

1. உருகாயோ நெஞ்சமே
2. குணமாக்கும் தழும்புகள்
3. கிறிஸ்துவுக்குள் வந்த இளைஞர்
4. பிரசங்க குட்டிக்கதைகள்
5. அன்பரின் பாதத்தில்
6. ஜெபமே ஜெயம்
7. சிலுவை நாதரின் 7 வார்த்தைகள்
8. பரிசுத்த ஆவியின் வரங்கள்
9. முள்ளில் ரோஜா
10. விலையுயர்ந்த முத்து
11. என் வேண்டுதலின் சத்தம்
12. சின்னஞ்சிறு தீபம்
13. புத்தியுள்ள ஸ்திரீ
14. கனி தரும் செடி
15. பறக்கவே பிறந்தேன்
16. வாழ்ந்திருக்க வழி
17. பாக்கியம் பெறும் பிள்ளை

கிடைக்குமிடம் : ஜெப கோபுரம்
16, கிரீன்வேஸ் சாலை, சென்னை–600 028, இந்தியா.
Website : www.jebam.org
மூலமும் வாங்கலாம்.

அவசர ஜெப உதவிக்கு (24 மணி நேரமும்)
ஜெபகோபுர தொலைபேசி எண்: 24937722

சகோதரர் D.G.S. தினகரன்

தேவன் தெரிந்துகொண்ட ஒரு பாத்திரம்!

1955-ம் வருடம் கிறிஸ்துவுக்கு

தன் உள்ளத்தை பறிகொடுத்த அவர்,

1962-ம் வருடம் கிறிஸ்துவை முகமுகமாய் தரிசித்து,

அன்பும் மனதுருக்கமும் நிறைந்த "இயேசு அழைக்கிறார்"

ஊழியத்தை பெற்றார்! அதைத் தொடர்ந்து

மனைவி திருமதி. ஸ்டெல்லா தினகரன்,

மகன் Dr. பால் தினகரன்,

மருமகள் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்,

அன்புப் பேரப்பிள்ளைகள் சாம், ஷேரன், ஸ்வீட்டி என

முழுகுடும்பமுமே, "இயேசு அழைக்கிறார்"

20 வகை ஊழியத்திட்டங்கள் மூலம் உலகம் முழுவதும்

கோடிக்கணக்கான மக்களுக்கு ஆறுதலாய்,

ஆசீர்வாதமாய் திகழ்ந்து வருகிறார்கள்!